506
506

திருச்செந்தூர் தேவஸ்தானம். வெளியீடு நெ-ர். 2

திருச்செந்தூர் நொண்டி நாடகம்.

ஆக்கியோன்,

திரு. கந்தசாமிப் புலவர்

தொகுத்தவர்,

திரு. த. அ. அருணாசலம் பிள்ளை,

MADRAS

கோபால் மின்சார அச்சியந்திரசாலை,
உடுமலை.

1948. அணா 9.

C-892 LK7, T
N48
102293

திருச்செந்தூர்,
ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்.
வெளியீடு நெ-ர். 2.

திருச்செந்தூர் நொண்டி நாடகம்.

ஆக்கியோன்,
முத்தாலங்குறிச்சிக்
கந்தசாமிப் புலவர்

தொகுத்தவர்,
திரு. த. அ. அருணசலம் பிள்ளை,
ஒய்வுற்ற நகர அளவையாளன்,
(Retired Town Surveyor.)
பெரியகுளம்.

திரு. **K. V.** சுப்பையா பிள்ளை, B. A.,
நிருவாக அதிகாரி,
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.

(பதிப்புரிமை தேவஸ்தானத்துக்கு)

கோபால் எலக்ட்ரிக் அச்சியந்திரசாலை,
உடுமலை.

விலை **1948.** அணா 9.

உ

திருச்செந்திலாண்டவன் துணை.

பதிப்புரை.

" எவ்வினை யுடையோரும் எழில்வாழ் வெய்துவர்,
செவ்விய செந்திலோன் சேவடி போற்றினே !"

நொண்டி நாடகம் என்பது நொண்டிச் சிந்து என்னும் பாவினத்தால் அமைந்தது. எத்திறத்தினரும் எளிதிற் கற்கவும், இசையுடன் படிக்கவும் கூடியது. இற்றைக்கு ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முன்பிருந்த முத்தாலங்குறிச்சிக் (பாளையங்கோட்டைப் பக்கம்) கந்தசாமிப் புலவரால் இயற்றப்பெற்றது. ஒளி இழந்த தனது இரண்டு கண்களும் ஒளி பெறும் பொருட்டுத் திருச்செந்தூர் வந்து, தவங்கிடந்து ஒரு கண் பெற்றார். மற்றொரு கண், செந்திலோன் அருள் ஏவலின்படி பாஞ்சாலங்குறிச்சி மன்னர் முருகனடியார் பால்பாண்டியக் கட்டபொம்மனிடம் சென்று பெற்றவர். இவரே இந்த "நொண்டி நாடக" நூல் இயற்றியவர்.

திருப்பதி மலையில் வாழ்ந்த ஒரு சிறந்த மற வீரன் தனது தீய - கள்ள வாழ்க்கையின் பயனாய், கை – கால் சேதிக்கப்பட்டு அதனால் மிகவும் துன்புற்றுப் பின் திக்கற்ற நிலையில் தெய்வமே துணையெனக் கொண்டு, தெற்கேயுள்ள சிவத்தலங்கள் தோறும் சென்று சென்று வணங்கி வணங்கித் துன்பம் நீங்கப்பெறாமல் கடைசியாகத் திருச்செந்தூர் வந்து முருகப்பெருமானை அன்போடும், பதைபதைப்போடும், மனங்குழைந்து கரைந்து, தன் குற்றங்களையெல்லாம் உணர்ந்து உணர்ந்து, அழுது அழுது, தரையிற் கிடந்து புரண்டு புரண்டு தன்னறிவிழந்து கிடப்ப, முருகப் பெருமான் அவன் கனவிற் றோன்றி அருள் செய்ய, இழந்த தனது கையுங்காலும் பெற்று இன்பமுற்ற வரலாற்றை விளக்குவது இந்நூல்.

திருச்செந்தூர் நொண்டி நாடகமே மற்றைய நொண்டி நாடக நூல்களினும் முதன்மையும் உயர்வும் பெற்றது. பெரியகுளம், ஓய்வுபெற்ற நகர அளவையாளர் (Retired Town Surveyor) உயர்திரு: த. அ. அருணாசலம் பிள்ளை அவர்கள் இத்தேவஸ்தானத்தார் வேண்டுகோட்கிணங்கி, தனது விடாமுயற்சியாலும், தந்நலங் கருதாது முருகன் தொண்டெனவே கருதி, மிக ஊக்கத்தோடு இவ்வரிய நூலை உருவாக்கி வெளியிடுவதற்கு முந்தியதற்கும், அவர்களுக்கு உறுதுணையாக உற்று, நல்ல முறையில் அச்சு ஊர்தி ஏற்றிய, உடுமலை கோபால் எலக்டிரிக் அச்சுயந்திர சாலைப் பதிப்பாளர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

இத்தகைய புண்ணியச் செயலில் என்னையும், எனது நண்பர்களையும், இந்த ஆலய "ஆட்சி சூழ் மன்றத்தாரையும்" (Advisory Committee) ஊக்கி நின்று, இந்நூல் வெளிவந்து மக்கள் பெரும்பயன் எய்துவதற்கு ஏதுவாக இருந்த சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத் தலைவர் உயர்திரு: இராவ் பகதூர் T. M. சின்னையா பிள்ளை, M. A., B. L. அவர்களது நன் முயற்சியைப் போற்றச் சைவ உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. எடுத்த செய்தி இனிது முடியுமாறு அருள்புரிந்த "நம் செந்தில்மேய வள்ளி மணாளன்" திருவடியை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

திருச்செந்தூர்,
24—7—48.

K. V. சுப்பையா பிள்ளை, B. A.,
நிறைவாணையாளர்,
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

முகவுரை.

இறைவனை யுளங்கொண்
டறைகுவன் நூன்முகம்.

நொண்டி நாடகம் என்பது வரிக்கூத்து 93-ல் ஒன்ருகிய சிந்து என்பதின் பாலது ஆகும் என்ப. தமிழ் மொழியி லுள்ள நூல்கள் இயல் இசை நாடகம் என மூன்று பகுதிகளை யுடையன. நாடகத்தைக் கூத்து என மொழிவது பண்டைத் தமிழ் மரபு. வரிக்கூத்து என்பது கூத்தின் ஒரு பிரிவு. ஒரு கதையை நாடக மேடையிற் பல நடிகர் தோன்றி நடித்துக் காட்சி யளிப்பது கூத்தாகும். ஒரு கதையை ஒருவனே நடிகனுகவும் பாடக னுகவு மிருந்து நடிக்குங் காட்சி வரிக்கூத்து ஆகும். வரிக்கூத்தின் தொகை 93 என்பர். இத் தொண்ணூற்று மூன்றும் இப்பொழுது பெயர் அளவில் உள்ளன. இவற்றின் விவரங்களை நாம் சரிவரத் தெரிந்து கொள்ளக் கூடிய இலக்கியங்கள் எல்லாம் பெரும்பாலும் அழிந்து போயின வென்றே சொல்லலாம். இவைகளில் தோற் கூத்து சிறிது காலத்துக்கு முன்புவரை நடத்திக் காண் பிக்கப்பட்டு வந்தது. கொற்றி, குரவை, சித்து, களி, அம்மனை, பந்து, கழங்கு, பிச்சி, சாழல், உந்தி, வாரிச்சியார் (வலைச்சியார்) என்பவைகள் கலம்பகம் திருவாசகம் போன்ற இலக்கியங்களில் உள்ள சிற்சில செய்யுட்களால் அறியக் கிடக்கின்றன. சிந்துப் பிழுக்கை சலதரங்கத்தி லும் குடப்பிழுக்கை கடவாத்தியத்திலும் கலந்த தென்பர். பகவதியாள், ஐயனுக்குப் பாடும் பாட்டு என்பவைகள் இக் காலத்தில் கணியான் கூத்தெனவும், வில்லடிப் பாட்டு எனவும் வழங்கப் படுகின்றன. இவை தென்னுட்டிலே கணியான் என்னும் ஓர் வகுப்பாரால் இன்றும் தெருக்கூத் தாக நடத்திக் காண்பிக்கப் படுகின்றன. கந்தன் பாட்டு, ஆலங்காட்டு ஆண்டி, கோப்பாளி, பாம்பாட்டி, பத்தன், என்பவைகள் தொன்றுதொட்டுப் பிச்சை யெடுத்தலே பிழைப்பாக வுள்ள சில குடும்பத்தாரிடம் அவர்கள்

பிழைப்பு அளவுக்கு வழியாக வாய்ப் பாட்டு அளவில் மிகவும் சிதைந்து போன நிலையில் ஊசல் ஆடிக்கொண்டு இருக்கின்றன. எஞ்சியவைகள் ஆராய்ந்து அறிய வேண்டியவைகள் ஆகும். சிந்து என்பது பல திறப்பட்டனவாம். நொண்டிச் சிந்தும் அவற்றில் ஒன்று ஆகும்.

நொண்டி நாடகம்:— கடவுள் வணக்கம் முதலாகக் காப்புப் பருவம், நொண்டி சபையுலா, அவன் பிறப்பு வளர்ப்பு, அவனது வெளியூர் யாத்திரை, ஆலயந் தொழுகை, ஆங்கு விலைமகட் கண்ணுறல், அவள்பாற் சிக்குண்டு இடர்ப்படல், அவட்காக் களவிற் பொருள் ஈட்டல், அவள் சிறையொன்று விழைய அது கொணர்வான் புறப்படல், வழியில் நண்பன் எதிர்ப்படல், மற்றொரு கள்ளன் தோழமை, அவனையும் உச்சிக் கொண்டு ஏகல், களவு பயின்று கைதேர்தல், விடுதி கண்டு இளைப்பாறுதல், பாளையங் கண்டு ஊரார் வலசைபோதல், குதிரைக் களவுள்ளல், மாறு வேடம் பூண்டு பாளையம் புகுதல், துரை மக்கள் நட்புறல், குதிரைத் தொழில் பயிறல், குதிரையைத் திருடல், அது வெருண்டு கனைத்தல், சாணிமாரும் பறையரும் சுற்றி வளைதல், தப்பு மாறு அறியாது இடர்ப்படல், சிறைப்படல், ஊரார் எள்ளி உரையாடல், கைகால் இழத்தல், வள்ளல் ஒருவன் வந்து ஆதரித்தல், அவன் கூறிப் போந்தபடி யாத்திரைக் கெழுதல், நடைவழி விவரங் கூறல், நகர் புகுதல், ஆலயச் சிறப்பு, மூர்த்தியின் சிறப்பு, ஒருவழிப்பட்டு இறைவனைத் தொழுது வேண்டி நிற்றல், கைகால் மீளவும் பெறல், நன்னிலை யடைந்து வாழ்தல் என்பன ஈறுகவுள்ள உறுப்புக்களை யுடையது. இவ் வுறுப்புக்களிற் சில குறைந்து வருதலும் உண்டு. வெண்பாவும் ஆசிரிய விருத்தமும் இடையிடையே கலந்து வரச் சிந்து, ஆநந்தக் களிப்பு, நொண்டிச் சிந்து ஆகிய பாவினங்களால் அமையப் பெறும். இதில் கள்ளர் அல்லது மறவர் குலத்தான் ஒருவனுடைய தீரச் செயல்களும் அச்செயல்களின் பயனாக அவன் மாறு கால், மாறு கை வாங்கப்பட்டதும், முடிவில் அவன்

இறைவனிடத்து அன்பைப் பெருக்கி இறைவன் அருளால் இழந்த கையுங் காலும் மீண்டும் பெற்று நல் வாழ்வு அடைந்ததும் கதையாகத் தொகுத்துக் கூறப்படுகின்றன.

நொண்டி நாடகம், பள்ளு நாடகம், குறவஞ்சி நாடகம், என்னும் நூல்கள் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திற் றோன்றிக் கி. பி. 19-ம் நூற்றாண்டின் இறுதி வரை மக்களால் போற்றப் பட்டு வந்துள்ளன. இவைகளை விழாக் காலங்களில் நாடகமாக வும் நடத்தி மக்கள் இன்புற்று வந்தனர். இந் நாடகத் திற்கு "ஒற்றைக்கால் நாடகம்" என்னும் பெயரே இன்றும் நாட்டில் வழங்கி வருகிறது.

நொண்டி நாடகங்கள்.

நொண்டி நாடக நூல்கள் பல தோன்றி யுள்ளன வாயினும் கீழ்க்கண்ட ஐந்து நாடக நூல்களுக் குரிய விவரங்களே இப்போது கிடைத்துள்ளன.

1. திருச்செந்தூர் நொண்டி, 2. சீதக்காதி நொண்டி, 3. சாத்தூர் நொண்டி, 4. குளத்தூர் ஐயன் நொண்டி, 5. திருமலை நொண்டி.

1. திருச்செந்தூர் நொண்டி:— திருப்பதிக் கள்ளன் ஒருவன் வரலாறும், மதுரை அரசரின் படைத்தலைவர்கள் தஞ்சாவூரை முற்றுகை யிட்டதும், முருகப் பெருமான் பெருமையும் இதில் கூறப்படுகிறது. ஆசிரியர் முத்தாலங் குறிச்சிக் கந்தசாமிப் புலவர். ஓலை ஏட்டில் உள்ளது.

2. சீதக்காதி நொண்டி:— பழமுதிர் சோலைக் கள்ளன் ஒருவன் வரலாறும், அவுரங்கசீபு சக்கரவர்த்தி யின் படைவீரர்கள் செஞ்சிக்கோட்டையை முற்றுகை யிட்டதும், மக்கா, மதினாவின் பெருமையும் இதில் கூறப் படுகிறது. கி. பி. 1939ல் சர்வகலாசாலைப் பதிப்பாக அச்சாகி யுள்ளது. ஆசிரியர் பெயர் இல்லை.

3. சாத்தூர் நொண்டி :— ஊத்துமலை மறவன் ஒருவன் வரலாறும், விசையாபுரங் கோட்டையை அவுரங்கசீபு சக்கரவர்த்தியின் படைவீரர்கள் முற்றுகை யிட்டதும், தலத்துத் தெய்வத்தின் பெருமையும் இதில் கூறப்படுகிறது. ஓலை எட்டில் உள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

4. குளத்தூர் ஐயன் நொண்டி :— சீவைகுண்டத்தி லிருந்து வெளியேறிய மறவன் ஒருவன் வரலாறும், அனந்தைப்பதி அரசன் ஆலப்புழையில் படையோடு தங்கி யிருந்ததும், ஐயனர் பெருமையும் இதில் கூறப்படு கிறது. ஓலை எட்டில் உள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

5. திருமலை நொண்டி :— வடகரைச் (சொக்கம் பட்டி) சமீன் பிரபந்தங்களுள் இதுவும் ஒன்று. ஆசிரியர் சுப்பிர தீபக் கவிராயர் பேரன் மன்னர் பெருமாள் புலவர். ஓய்வுற்ற டிப்டிக் கலக்டரும், வடகரைச் சமீன் மரபினரு மான காலஞ்சென்ற திருவாளர் P. C. C. பாண்டியன் அவர்களால் அச்சிடப்பட்டுள்ளது.

இந் நூல்கள் யாவும் ஒரே காலத்தன எனவும் நெருங்கிய தொடர்பு உடையன எனவுங் கூறற்கு இடமுண்டு. இதற்குப் போதிய சான்றுகள் இந்நூல் களுக் குள்ளேயே உள்ளன. உதாரணமாக :—

49. "செய்யாருங் காவேரி — யாடிச்
சீரங்க மானம காரங்கத்தில்
ஐயர்ப தந்தொழுதேன் — தொழு
தஞ்சாறு நாளங்கே சஞ்சரித்தேன்

50. "சரித்ரமெல் லாங்கேட்டே — என்னைச்
சந்தித்துப் பேசவே சிந்தித்துக்கொண்
டொருத்தன் திருப்பதியான் — அந்த
ஊரில்வந் தானவன் பேருஞ்சொன்னன்

51. போரான கள்ளனென்றே — அவன்
பேச்சுக்கொண் டேதுணை வாச்சுதென்றே
நீரா ரெனப்பகர்ந்தேன் — அந்த
நேரத்தில் தன்வழி சாரச்சொன்னான்

52. சொற்கேட் டகமகிழ்ந்தேன் — ஒரு
சோடா விருவருங் கூடிக்கொண்டோம்
பொற்கோ புரவாயில் — தன்னிற்
போய்நின்று சத்தியஞ் செய்துகொண்டோம்"

என்னுஞ் சீதக்காதி நொண்டிச் செய்யுள்களில் திருச்செந்தூர் நொண்டியின் கதா நாயகனாகிய திருப்பதிக் கள்ளன் குறிக்கப் படுவதாலும்,

"பகலெத்தி ராவெத்தியாய் — இரண்டுபேர்
பட்டணத்தில் திருடிய பொட்டணத்தையும்
அகழுக்குட் பதனம்பண்ணிக் — காவேரி
யாற்றுக்குள் ளேதென்றற் காற்றுக்குளே

சுகமுடன் படுத்திருந்தார் — நானந்தத்
துறவுகண் டேன்சென் றுறவுகொண்டேன்
ககனத்தில் புனல்வாங்கும் — குதிரைகள்
கத்தரிக்க வேணுமென்று பெத்தரிக்கமாய்த்

தஞ்சா வூர்க்கோருவன் — அனந்தைச்
சமத்தானத் துக்கோருவன் தான்போனான்
அஞ்சா மனதுடையான் — அடியேன்
ஆனமா ருட்டஞ்செய்யு மவதானன்

மஞ்சார் கருங்குழலாள் — எனக்கிட்ட
மருந்தால் இருகண்ணும் பொருந்தாமல்
சேஞ்சிக்கு வழிகேட்டுக் — காவேரி
தீரத்தி லேசுக்ர வாரத்திலே

XXXXX XXXXX XXXXX
போனேன் வெகுதூரம்—விசையா-புரந்தனிலே"

என்னுஞ் சாத்தூர் நொண்டிச் செய்யுட்களில் திருச்செந்தூர் நொண்டியின் கதா நாயகனாகிய (தஞ்சாவூரிற்

குதிரை திருடிய) கள்ளனும், குளத்தூர் ஐயன் நொண்டியின் கதா நாயகனுகிய (அனந்தைப் பதியில் குதிரை திருடிய) மறவனும், குறிக்கப் படுவதாலும்;

“களவுக்கி ராசாளி — உள்ளங்
கையினில் வைகுண்டங் காட்டுவிப்பேன்
சளமற்ற தொன்றறியேன் — எனது
தாய்பெற்ற நேரப் பலனீதெல்லாம்

சந்தா னத்துநின்றோர் — முந்தூர்ச்
சாத்தூர் திருமலை வாய்த்ததிருச்
செந்தூர் நொண்டிமூவர் — மற்றுஞ்
சில்லரைப் பேர்செய்தி சொல்லுகிறேன்”

என்னுங் குளத்தூர் ஐயன் நொண்டிச் செய்யுட்களில் சாத்தூர் நொண்டியும், திருமலை நொண்டியும் திருச்செந்தூர் நொண்டியும் உடன் பிறந்தவர்கள் எனக் குறிக்கப் படுவதாலும், திருச்செந்தூர் நொண்டியில் மற்ற நொண்டிகளைக் குறிக்குங் குறிப்புக்கள் இல்லாததாலும், அது முதலாவ தாகவும், அடுத்தபடியாக முறையே சீதக்காதி நொண்டி, குளத்தூர் ஐயன் நொண்டி, சாத்தூர் நொண்டி, திருமலை நொண்டி தோன்றியிருக்க வேண்டும். திருமலை நொண்டியில் திருச்செந்தூர் நொண்டியைத் தந்தை முறையில் வைத்துக் கூறப்பட்டிருக்கிறதாம்.

திருச்செந்தூர் நொண்டி நாடகம்.

ஆக்கியோன் பெயர் :— இந் நூல் ஆசிரியர் முத்தாலங்குறிச்சிக் கந்தசாமிப்புலவர். *இவர் திருவாப்பனூர்ப் புராணம், திருப்பூவணப் புராணம் முதலிய ஏனைய நூல்களும் ஆக்கி யுள்ளார் என்ப. படிக்காசுப் புலவரும், சீறுப்புராணம் எழுதிய உமறுப் புலவரும் இவரது காலத்தவர்கள். சீதக்காதி வள்ளலின் சபையில் விளங்கிய சிறந்த புலவர்களுள் இவரும் ஒருவர் ஆவர். இதனைச்

---

*சீதக்காதி நொண்டி நாடகம் பக்கம் 31 பா. 185ன் குறிப்பு.

"சந்தமுத் தமிழ்தேறுங்—கல்வித்
தலைவர் மகிழ்உமறுப் புலவருடன்
செந்தமிழ்க் கந்தசாமிப்—புலவனுஞ்
சீராட்டெனத்தமிழ் பாராட்டவே" எனச்

சீதக்காதி நொண்டிச் செய்யுள் 185-ல் கூறப்பட்டுளது. முத்தாலங்குறிச்சி திருநெல்வேலிக்குக் கிழக்கே பத்து மைல் தொலைவில் உள்ளது.

நூல் வந்த வழியும் எல்லையும்:- எல்லாம் வல்ல இறைவனிடத்து மக்கள் அன்பைப் பெருக்கி நன்னிலையடைவதற்கு வழியாக நம் தமிழ் மொழியிலே இதுகாறும் ஆன்றோர்கள் அருளியிருக்கும் நூல்களுக்கு ஓர் அளவு இல்லை. அந் நூல்களும் ஒரே திறத்தன வல்ல. மக்களின் அறிவு முதிர்ச்சியின் பருவத்துக்குத் தகுந்த வாறும் காலப் போக்குக்கு எற்ற வாறும் அவ் வகை நூல்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திறத்தனவாம். தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருவருட்பா முதலிய நூல்களும் பலவகைப் பிரபந்தங்களும் ஓர் புறம் இருக்க, வரிக் கூத்துக்களும், காவடிச்சிந்து முதலியன போன்ற சில்லரைத் துதிப்பாடல்களும், காலத்துக் கேற்பத் தோன்றியுள்ளதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். பின்னவை பெருவாரியான மக்களால் விரும்பப் படுவதும் மக்களுக்கு ஆனந்தம் ஊட்டி மனதைக் கவர்ந்துகொள்ளும் திறம் உடையனவா யிருத்தலுமே இதற்குக் காரணம். இன்றும் நம் நாட்டிலே, காட்டிலோ கழனியிலோ வேலை செய்யும்போது இத்தகைப் பாடல்களைப் பாடிக்கொண்டும், அல்லது பிறர் பாடக் கேட்டுக்கொண்டும் மக்கள் தொழிலைச் செய்கிறதைப் பார்த்து வருகிறோம். அக் காலத்தில் இப் பாடல்களின் சுவையானது மக்கள் செவியுட் புகுந்து, உழைப்பினால் அவர்களுக்கு உண்டாகக் கூடிய தளர்ச்சியையும் அவர்கள் மறந்து விடும்படி செய்து மேலும் மேலும் அவர்களுக்கு ஊக்கத்தையும் ஊட்டுகிறது. இக் காரணங்களைக் கொண்டே இந் நூலாசிரியர் அக்

காலத்து மக்களிடையே எஞ்சி நின்ற தொன்னூல் மரபு களைப் பின்பற்றி இந்நூலையும் இயற்றியுள்ளார் எனலாம்

நூற் பெயர் :- இந்நூலை நொண்டி, நொண்டிச் சிந்து, நொண்டி நாடகம் என மக்கள் வழங்கி வருகிறார் கள். நொண்டியின் கதை இதிற் கூறப்படுகிறது. இது நொண்டிச்சிந்து என்னும் பாவினத்தால் ஆக்கப்பட்டு உள்ளது. இது ஒற்றைக்கால் நாடகமாகவும் நடிக்கப்படு கிறது. ஆகையால் இம்மூன்று பெயர்களும் பொருத்த மானவைகளே யாகும்.

யாப்பு:- இந்நூற் செய்யுட்கள் சாதாரண முறையில் நாட்டு மக்களிடையே வழங்கும் உலக வழக்குச் சொற் களில் அமைந்திருக்கின்றன. யாவருக்கும் எளிதில் மனப் பாடமாகும் முறையில் உள்ளன. வெண்பா ஆசிரிய விருத்தம், சிந்து, ஆநந்தக் களிப்பு, நொண்டிச்சிந்து ஆகிய பாவினங்களால் இந்நூல் யாக்கப்பட்டுள்ளது. பா. 28-109 வரை அந்தாதித் தொடையாக வந்துள. மொத்தம் செய்யுட்கள் 333.

நுதலிய பொருள்:- தீய வழியில் ஒழுகும் மக்களுக்கு அவ்வொழுக்கம் தொடக்கத்தில் இன்பம் பயக்கி முடிவில் அது அம்மக்களைத் துன்பத்துக்கு உள்ளாக்குதல் திண்ணம் என்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டும் பொருட்டும், மக்கள் வினைப் பயனை வெல்லக் கருவியாக நிற்பது "எல் லாம் வல்ல இறைவனிடத்து மக்கள் தமது அன்பைச் செலுத்தி உள்ளன்போடு ஒழுகல் ஒன்றே" என்பதைத் தெளிவிக்கவும் இந்நூலைப் பாடியுள்ளார் எனலாம்.

கேட்போர், பயன்:- வித்து சிறியதெனினும் அதி லிருந்து உண்டாகும் மரமானது அண்டத்தையும் அளா வும் தன்மையது என்பதை முன்னர்க் கூட்டியே எவரும் அறிந்து அளவிடல் அரிது. வினைப் பயனும் அத்தன் மைத்து ஆகும். தேவர் சிறை மீட்ட செட்டியின் அருள் வலிமை கூறும் இந் நூலும் மக்கள் மகிழ்ந்து கேட்குந்

தோறும் படிக்குந் தோறும் அவர்கள் நற்பயனை எய்து தற்கு ஓர் வித்து ஆகும்.

காலம்:- இந் நூலின் இடையிடையே தென்னாட்டுச் சரித்திரத்துக் குரிய சிலருடைய பெயர்கள் வந்துள. அவர்களின் பெயரும் விவரமும் இந் நூலின் மற்றொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளன. அவர்களுள் மதுரையை யாண்ட (முத்து) விசையரங்க திருமலைச் சொக்க நாத நாயகர் பெயரும், பாஞ்சாலங் குறிச்சியில் அரசு செய்த இரகுவீர ராமக் கட்டபொம்முவின் பெயரும், தஞ்சாவூரை ஆண்ட மராட்டிய மன்னன் சாகோசியின் பெயரும், இந் நூல் தோன்றிய காலத்தை வரையறுத்துக் கூற மிக்க வுதவியாக வுள்ளன. நாயக்கரின் காலம் கி. பி. 1704—1731. கட்டபொம்முவின் காலம் கி. பி. 1709—1736. சாகோசியின் காலம் கி. பி. 1688-1711. இவர்களில் முதல் இருவர்களுடைய படை வீரர்கள் தஞ்சாவூரை முற்றுகை செய்திருந்ததாக இந்நூலிற் சொல்லப்படுகிறது. ஆகவே இம்முற்றுகையும் கி. பி. 1709—1711-க்கும் இடைக் காலத்தில் நடந்திருக்க வேண்டும். இந் நூலும் அதற்குச் சிறிது காலத்துக்குப் பின் தோன்றியிருக்க வேண்டும்.

இடமும் காரணமும் :- ஒருக்கால் இந் நூலா சிரியர் மழுங்கிய தனது கண்களின் ஒளியைத் திரும்பப் பெறத் திருச்செந்தூர் சென்று முருகப் பிரான் சந்நிதியில் வயணம் இருந்தார். ஆங்கு அப்பெருமான் கட்டளை யிட்டபடி அக் காலத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் குறுநில மன்னனாக விளங்கிய பால் பாண்டியக் கட்ட பொம்முவின் அவைக்களஞ் சென்று ஆங்கு இழந்த கண் ணொளியை மீண்டும் பெற்றார். இவ் வாறு தனக்குக் கிடைத்த திருவருட் பயனை வியந்து, தன்னையே நொண்டியாகவுந் தான் கண்ணொளி பெற்றதை நொண்டி கைகால் இழந்து பெற்றதாகவுங் கற்பித்து, இந் நூலைச் செய்து அவ் அவைக் களத்திலே அரங்கேற்றினர் என்ப.

பால் பாண்டியக் கட்டபொம்மு காலம் கி. பி. 1736-1760. எனவே இந் நூலும் கி. பி. 1750-ஐ அடுத்துத் தோன்றி யிருக்க வேண்டும்.

மேலேடுகள்:- நான் இந்நூலை எழுதி முடிப்பதற்கு மேலேடுகளாகக் கிடைத்தவைகள் மூன்று.

1. சீவைகுண்டந் தாலூகா செக்காரக்குடி திரு. த. முத்துச்சாமி பிள்ளை யவர்கள் கொடுத்த ஓலைச் சுவடி.

2. ஷெயூர் திரு. ச. சாமிநாத பிள்ளை யவர்கள் வீட்டு ஓலை யேட்டுச் சுவடி. (கொல்லம் "999-ம் யாண்டு ஆவணி-மீ 24-ந் தேதி ரோகணியுஞ் சத்தமியுங் கூடிய வியாழக் கிழமையில் முத்துச்சாமி அதிகாரியின் மகன் குமாரசாமி எழுதி முடித்தேன்" என இதன் ஈற்றில் முத்திரை யிடப்பட் டுள்ளது.)

3. திருச்செந்தூர் ஆலய நிர்வாகப் பொறுப்பாளர் திரு. G. K. பகவதி B. A., B. L. அவர் களால் 1944-ல் அச்சிடத் தொடங்கி முடிவு பெறாத அச்சுப் புரூவு (Proof).

மூன்றாவது பிரதியைத் திருச்செந்தூர் தேவாலய நிர்வாக அதிகாரி திரு J. M. சோம சுந்தரம் பிள்ளை B. A., B. L. அவர்கள் என்னிடம் கொடுத்தார்கள். அதன் மூலப் பிரதியைப் பெறத் திருச்செந்தூர் சென்று தேடினேன். அதற்கு மூலப்பிரதி கிடையா தென்றும், திருச்செந்தூரில் சர்க்கார் முத்திரைக் காகிதம் விற்பனை யாளரான திரு. சேது முத்துவையர் அவர்களுக்கும் அவ்வூர்ப் பட்டமார் சிலருக்கும் இந் நூல் முழுதும் மனப்பாட முண்டு என்றும், அவர்கள் மனப்பாடமாக ஒப்புவித்ததை ஆலய நிர்வாக அதிகாரி திரு. G. K. B. கவுண்டர் அவர்களின் விருப்பத்துக் கிணங்க அவ் வூர்த் தல வித்துவான் திரு. மு. கிருஷ்ண சர்மா அவர்கள் எழுதி

முடித்தார் எனவும், அவ்வாறு எழுதி முடித்த கை நகலே அச்சுக்கு அனுப்பப்பட்ட தெனவும், வேறு பிரதிகள் கிடையா வென்றும் தெரிய வந்தது.

மேலே சொல்லிய மூன்று படிகளிலும் செய்யுட் குறைக ளுள்ளன. முதலாவதில் காப்புப் பருவம் இருந்த இதழ்கள் இல்லை. இரண்டாவதில் முதல் 105 செய்யுட்கள் இல்லை. மூன்ருவதில் பா. 15-ல் இருந்துதான் உள்ளன. சில செய்யுட்கள் ஒன்றில் இருப்பது மற்ருென்றில் இல்லை. ஓலைச் சுவடிகளில் வியனுக வுள்ள செய்யுட்களுக்கு முன்னும் பின்னும் இக் [ ] குறிகளும் அச்சுப் புருவில் அதிகமா யுள்ளவைகளுக்கு ( ) இக்குறிகளும் யிடப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இருக்க வேண்டிய செய்யுட்களும், சில செய்யுட்களிற் சில அடிகளும், சிலவற்றில் சில சீர்களும், இல்லா திருக்கின்றன. இக் குறைக ளுள்ள இடங்களில் புள்ளிகள் இடப் பட்டுள்ளன. பா. 18 சீதக்காதி நொண்டியிலு முள. பா. 55-67 சாத்தூர் நொண்டியின் ஓலை ஏடுகள் இரண்டில் ஒன்றில் மட்டும் சில மாறுபாடுகளுடன் உள்ளன. முதல் 12 செய்யுட்கள் மற்ற நொண்டிகளி லுள்ள போக்கைத் தழுவி நூதனமாக ஆக்கப் பட்டு என்னல் சேர்க்கப் பட்டவையே யாம். நொண்டியின் சரித்திரக் கதையைச் சொல் நடையில் எழுதியும், அரும்பத உரை அகராதி, சரித்திரக் குறிப்பு, அரிய வழக்குச் சொற்கள், சொற்ருெடர்கள், பெயர்கள், இடப்பெயர்கள் ஆகியவைகளைத் தொகுத் தெழுதியும் இதன் இறுதியில் சேர்த்திருக்கிறேன்.

எனது முயற்சி வீண் போகா வண்ணம் இந் நூலை அச்சிடுவித்த இந்து மத பரிபாலன போர்டாருக்கும், திருச்செந்தூர் தேவாலயத்தார்க்கும், நான் எழுதி முடித்த கைப் பிரதியை ஆராய்ச்சி செய்து அதிலுள்ள வழுக்களைக் களைந்தும் குறைபாடுகளை நிரப்பியும் என்னைத் தெளிவித்த திருச்செந்தூர் ஆலயக் (Advisory Board)

குழுத் தலைவரும் சர்க்கார் பதிவு இலாக்காவில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற மாவட்டத் (District Registrar) தலைவருமான திரு. T. M. நெல்லையப்ப பிள்ளை B. A. அவர்களுக்கும், திருநெல்வேலி இந்து கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் வித்துவான் சேது இரகுநாதன் B. O. L. அவர்களுக்கும், இதை நன் முறையில் அச்சிட் டுதவிய உடுமலைக் கோபால் எலக்டிரிக் அச்சகத்தாருக்கும் நான் என்றுங் கடப்பா டுடையேன்.

நான் இந் நூலை எழுதி முடிப்பதற்கு உடனிருந்து உதவிய எனது நண்பர் பெரியகுளம் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திரு. கு. வே. சேஷாசல சர்மா அவர்களுக்கும், நான் ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதுகையில் மிகப் பயனளித்த சீதக்காதி நொண்டி நாடகப் புத்தகம் ஒன்றைக் கொடுத்து உதவிய பழனி உயர்தரக் கலாசாலை ஆசிரியர் திரு. ச. கிருஷ்ணன் M.A. L.T. அவர்களுக்கும், இம் முயற்சியில் எனக் குதவி செய்த மற்றும் நண்பர்களுக்கும், மூல ஏடுகள் கொடுத்துதவிய பெரியார்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப் பதிப்பில் பிழைகள் இருத்தலுக் கையமில்லை. அறிஞர் உலகம் அவைகளைக் கண்ணுறின் எடுத்துக் காட்டி என்னைத் தெளிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னை இந் நன் முயற்சியில் ஈடு படுத்தி இனிது முடிவுறச் செய்த எல்லாம் வல்ல இறைவன் திருவருள் என்றும் ஒன்றுபோல் நின்று நிலவுக. நலம்.

பெரியகுளம்.
26—6—1948.

த. அ. அருணாசலம்,
ஒய்வுற்ற நகர அளவையாளன்.
(Retired Town Surveyor.)

OFFICE ... OF BOOKS
... 1948
MADRAS

உ

முருகன் துணை.

திருச்செந்தூர் நொண்டி நாடகம்.

காப்பு - வெண்பா.

1. ஆடகப்பொன் மாடத் தணிதிகழ்செந் தூர்நொண்டி
நாடகத்தைச் செவ்வே யலம்பெறுவான்—பாடவருஞ்
[1]சந்திரன்மெய் குன்றத் தவளமருப் பொன்றேவும்
ஐந்துகரன் போற்று ளரண்.

காப்புப் பருவம்.

விநாயகர்.

2. செந்தா மரை மலருறு வனிதையு
வந்தே யுறை திருநக ரலையெறி
செந்தூர் வளர் அறுமுக னதுபுகழே—கொண்
டாடவே;
செந்தே றன்ம தலையறு குதலைபு
ளைந்தோர் வடை யவல்பொரி யமுதுகொள்
சிந்தூ ரம திருசர ணுறுதுணையே. தந்தானனு.

---

[1]விநாயக சதுர்த்தியன்று பிள்ளையார் கொழுக்கட்டை முதலிய பலகாரங்களை மிதமிஞ்சி யுண்டு அதனல் வயிறு வீங்கித் தொந்தி மிகவும் சரிந்து தொங்கிற்று. அவ்வாறு தொங்குவதைக் கண்ட சந்திரன் எள்ளி நகையாடினன். அதைப் பொறுக்கலாற்றது விநாயகர் தன்னுடைய கொம்பு ஒன்றை யொடித்து சந்திரன்மேல் எவினர். அது சென்று சந்திரன் உடலைக் குறைத்துக் கொண்டு வந்தது. சந்திரன் சிவபிரானிடந் தஞ்சம் புகுந்து தப்பி வாழ்ந்தான் என்பது புராணகதை.

முருகன்.

3. வாரத் தெழுதிரை யொலியுரு மெனவொலி
ஆரத் திரள்மணல் செறிகரை யிடைபொலி
மானத் திருநகர் வருமுரு கனதிசையே—
கொண்டாடவே;
சூரற் கிளையரு மவர்துணை யெனவரு
தானைத் தலைவரு மழியவ யிலைவிடு
தோகைக் கடவுள ரிணையடி பரவுதுமே.
தந்தானனா.

இறைவன்.

4. அடலி னிசிசர ருடல மதுபொடி
படவு மயின்மிசை நடன மிடுபவர்
ஆல முண்ட நீல கண்டர்
பால னண்டர் பீழை துண்ட
அயில்வி டுத்தம யூரன்க தலிகை
குருகு வைத்தகு ழகன ரும்புகழே—
கொண்டாடவே;
புடவி யிடைபல சடல மதுபல
தடவை பிறவியி லிடைத லுறுமுயிர்
போத லெங்ஙன் மீள லெங்ஙன்
வாழ்த லென்ற கேள்வி யுந்து
புதைய மைத்துவங் கூழனல் நீர்தரை
வெளிய மைத்தவொ ருவனை விள்ளுவாம்.
தந்தானனா.

சந்தி விநாயகர்.

5. செங்கமல வாவி கொங்குசெறி சோலை
பைங்கழனி யேநெ ருங்குவள மேய
செந்திநகர் வாழ்வு கந்தன்மிசை நொண்டியே—
கொண்டாடவே;
சங்கரிம ணாளன் நந்துவர பாலன்
வெங்கயமு காசூர் பங்கமுற வேசெய்
சந்தியின்வி நாய கன்றுணையு முண்டுமே. தந்தானனா.

முமூர்த்திகள், அவர் மனைவியர், ஐயனார்

6. மாவி ளாவொடு தென்னைப லாபனை
பூவை சேகிலி புன்னைய சோகரி
வான நீவிடு சீரலை வாய்புகழே — கொண்டாடவே;
பூவில் வாழ்பிர மன்திரு மாலரன்
வேத நாயகி பின்னைம னோன்மணி
பூர ணைதவன் பொன்னடி கூறுதுமே. தந்தானனா.

சமய குரவர்கள்.

7. சந்த னந்திகழ் சந்த னாசலச்
செந்தி லின்வரு கந்த னார்மிசை
சந்த தம்புகழ் சிந்து நொண்டியே-கொண்டாடவே;
செந்த மிழ்மறை தந்த ஞானிசம்
பந்தர் சுந்தரர் செஞ்சொல் வாகீசர்
செங்க மூல்தலை கொண்டு பாடுதுமே. தந்தானனா.

8. செல்லு திகழுஞ் செழுஞ்சோலைச்
சேனார் நறவப் பிரசம்விண்டு
பல்கிப் பழனத் திடைபாய்ந்து
பசுங்கூழ் விளைந்தோங் கலைவாயே-கொண்டாடவே;
கல்லு கனியக் கவிபாடிக்
கானார் நரிகள் பரியாகச்
செல்ல வருளுஞ் செம்மலடிச்
சேவை தினத்தோ னடிதுணையே. தந்தானனா.

வேல், சூரியன், சந்திரன், மயில், சேவல், நவவீரர், வீரபத்திரன்

9. முகிலூரு கிரியூடு புளிஞாழல் பனைவாகை
முதுகீச கங்கே தகை
அகில்தாழை கணிசாதி புனைவாழை பிழிதூவும்
அலைவாய்வி ரிந்தே றுசீர்—கொண்டாடவே;
இகல்மேவி வருசூர னெடுதார கனுமாள
எறிவேல்ப தங்கன் மதி

சிகிகோழி நவவீர ருமைபால னிவர்தாள்கள்
சிரமேல ணிந்தேத் துவாம். தந்தானனு.

சத்த கன்னியர்.

10. புவிமீதி லடிதாழ வானவரும் வந்தே
குமராகு காவெனப் பேறுபெறு செந்திற்
புகழ்மேவு நொண்டிதரை மீதுகூத் தாகவே—
கொண்டாடவே;
அவிராமி யயிராணி காளிவ ராகி
கவுமாரி நாராய ணிமகே சுரியென்
னவதார சத்திமன தவதான மரணே. தந்தானனு.

11. குழறிக் குழறிக் குமரனைப் பாடெனப்
பழமைத் திருமொழி பயிலயான் பகர்ந்தேன்
ஆசு கூறு தவனி நந்தமிழ்த்
தேசி கன்புகழ் செப்புமிந் நூலே.

நொண்டி களரியிற் றேன்றல்.

விருத்தம்.

12. எடவிழ் கடப்பந் தார னிசையினைப் பரவும் நொண்டி
நாடக மதனைப் பார்மே னடித்திடக் கெச்சம் பூண்டு
ஆடகப் பணிகள் மேனி யழகுற நொண்டி நொண்டி
நாடகக் களரி தோன்றி நவிலுவான் நவிலு வானே.

ஆனந்தக்களிப்பு. (சிந்து)

13. [தெண்டிரை முத்தங்கொ ழிக்கும்—திருச்
செந்தில்வ டிவேலன் செம்புகழ் பாடத்
தொந்திவ யிறனைப் போற்றி—நானுந்
தொந்தோமென் றுடிக்கொளத் [2] துயங்கட்டி னேனே

[2] துயம்—துசம்—கொடி. துயங்கட்டுதல், கொடிகட்டுதல், கங்கணங்கட்டுதல், கச்சைகட்டுதல், என்னுஞ் சொற்றொடர்கள் ஒரே பொருளைக் குறித்துநிற்பன.

14. செந்திரு மாதுசி றக்குந்—திருச்
செந்தின்மு ருகனைத் தேசிக னைப்ப
சுந்தோகை மேல்வரு வானைப்—போற்றித்
தொந்தோமென் ருடிக்கொளத் துயங்கட்டி னேனே]

15. விப்ரர்வ ணங்குசெந் தூரில்—வந்த
வேதாந்த சற்குருவை நாதாந்தப் பொருளைச்
சுப்ரம ணியனைக்கொண் டாடி—நொண்டி
தொந்தோமென் ருடிக்கொளத் துயங்கட்டி னேனே.

16. பருதிச்செவ் வேற்படைப் பெம்மான்—பசும்
பச்சைமயில் வாகனன் செச்சைத ரித்தோன்
சுருதிப்ப ழம்பொருளை வாழ்த்தி—நானுந்
தொந்தோமென் ருடிக்கொளத் துயங்கட்டி னேனே.

17. ஒப்பாய்க்குப் பாயமுங் கட்டிக்—கொண்டைக்
குல்லாசப் பொற்சரிகைச் சல்லாவுங் கட்டித்
துப்பாரு முத்துத்தொங்கல் பூட்டி—நானுந்
தொந்தோமென் ருடிக்கொளத் துயங்கட்டி னேனே.

18. கண்ணாடி போற்சரிகை பதித்து—நானுங்
கால்வீசி வட்டமிட்டு மேன்மீசை திருத்திச்
சுண்ணாம்புக் கல்லுப்பல்லுக் காட்டி—நொண்டி
தொந்தோமென் ருடிக்கொளத் துயங்கட்டி னேனே.

19. தேன்மொய்த்த பூச்செண்டு கட்டிச்—சமணர்
சிரத்தையுங் காலிற்பனை மரத்தையுங் கட்டிச்
சோமந்த லைவிருது கட்டி—நானுந்
தொந்தோமென் ருடிக்கொளத் துயங்கட்டி னேனே.

20. மாயாவி தத்துக்கொரு வித்து—மலையாள
மந்திரமெல் லாம்படித்த விந்திர சித்து
தூயசன் மார்க்கசபை முத்து—நானுந்
தொந்தோமென் ருடிக்கொளத் துயங்கட்டி னேனே.

21. இகப்பற்றில் லாதுயிர் புரக்குஞ்—செந்தில்
ஏகன்ப ணித்தவிந்தத் தேகந்த னக்குஞ்
சுகத்துக்க மென்றவிரண் டுக்கும்—நானுந்
தொந்தோமென் றுடிக்கொளத் துயங்கட்டி னேனே.

22. முருகன்பேர் நாவினுச் சரிப்பேன்—செந்தில்
முத்தையனை வணங்காரைக் கேலிபண்ணிச் சிரிப்பேன்
குருபரனன் பரையுப சரிப்பேன்—சற்றுங்
கூசாம லெட்டாத தேசமுஞ்சஞ் சரிப்பேன்.

23. ஆறெழுத்தை மாத்திரஞ் செபிப்பேன்—அந்த
அச்சரத்தை யுச்சரியாத் துச்சனரை வெறுப்பேன்.

ஃ ஃ ஃ ஃ

ஃ ஃ ஃ

24. தீயர்தமைத் துரும்பென xxx — xxx
xxx xxx xxx
xxx xxx மதியேன்—மின்போற்
[3]செத்துப்பி றக்கின்ற தெய்வங்களைத் துதியேன்.

25. நன்மார்க்க மறியாத மூடம் — இந்த
நாட்டுக்கு ளெத்துமெத்தச் சூட்டுங்கி ரீடம்
துன்மார்க்க வித்தைக்குரு பீடம் — நானும்
தொந்தோமென் றுடிக்கொளத் துயங்கட்டி னேனே.

26. ஆகட்டு மார்க்கும்வந்து நட்டம் — கைகால்
அல்லாமற் போனதென் பொல்லாவ திட்டம்
தோகைக்க டவுளிட்ட சட்டம் — நொண்டி
தொந்தோமென் றுடிக்கொளத் துயங்கட்டி னேனே

---

[3]"செத்துப்பி றக்கின்ற தெய்வங்கள் மணவாள செங்கீரை யாடியருளே" (முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்)

நூல்

விருத்தம்.

27. தென்மலை முனிவன் போற்றுந்
தேவனைச் சகத்திற் கோடி
மன்மத வுருவங் கொண்ட
வடிவனை முடிவி லானைத்
தன்மவா ரிதியைச் செந்தூர்
தழைத்தசண் முகனை நீலப்
பொன்மயூ ரனைக்கொண் டாடிப்
புகன்றிடு நொண்டி நானே.

சிந்து.

28. [சேண்தொடு மாமலையும் — நதிகளுஞ்
செறிந்துபல் வளங்களும் நிறைந்துமிகு
மாண்புறு நன்னாடாம் — வண்டுறை
வாவிசூழ் [4]நாவலந் தீவுதனில்

29. நாவலர் பாவலரும் — தேவரும்
நத்தியே வந்துறை வித்தகஞ்சேர்
மாவளம் வயல்வளமும் — பொருந்தியே
மழைவளந் தவறாத மண்டலமதில்]

30. மழைக்கார் நிறத்தழகர் — செங்கண்
மாயவர் வேங்கட நாயகனார்
தழைக்குந் திருப்பதிக்குள் — கள்ளர்
சாதிக்கு ளேபிரக் யாதிக்குள்ளான்

---

[4] இது இமயத்துக்கு தெற்கேயுள்ள பூபாகத்தைப் புராண காலத்தார் அழைத்துவந்த பெயர். அதன்படி பூபாகம் ஏழு தீவுகள் ஆகும். அவை நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு.

பா. **28** முதல் **109** வரை அந்தாதித்தொடை.

31. ஆதிக்க மேன்மைபெற்றேன் — நாட்டில்
அம்பல காரர்தொ ழும்பெருமான்
கீதத் தமிழாளன் — துரைக்
கெப்புலி பெற்றம தப்புலிநான்

32. புலிபாய்ச்சல் பாய்வதுபோல் — சூதும்
பொய்யுங் களவும் புரட்டுருட்டுங்
கலிகால கற்பனையால் — எல்லாங்
கற்றறிந் தேன்பேரும் [5]பெற்றிருந்தேன்

33. அறிந்தேனென் வல்லமைக்கு — வானில்
அம்புலி மானும பூர்வமல்லச்
செறிந்ததி ருடருக்குளே — என்போல்
தீர்க்கமு மார்க்கமு மார்க்குமுண்டோ

34. உண்டான ஆத்தியெல்லாம் — வீட்டில்
உடைமை கடமைகளு முடனெடுத்துக்
கொண்டாடிக் கொண்டெழுந்தேன் — பாதை
கூடித்தென் பூமியை நாடிச்சென்றேன்

35. சென்றேன் தலங்களெல்லாம் — பின்னர்ச்
சிதம்பரத் தையர் பதம்பெறநான்
நின்றேன் புலியூரில் — தொண்டர்
நேசிக்குஞ் சந்நிதி வாசல்வந்தேன்

36. தேன்போலு மொழிபாகர் — ஆடகச்
செம்பொன்னி னாற்செய்த வம்பலத்தில்
தான்போய்ப் பொற்சபைநீ — ராடியிரு
கைவக்கு ழாத்துடன் கைகுவித்தேன்.

37. குவித்தேன் மனங்களித்தேன் — தில்லைக்
கோவிந்த ராயன்ப தாம்புயத்தைச்

---

[5]பாடபேதம். பெற்றறிந்தேன்.

செவித்தேன் வெளியில்வந்தேன் — தெற்குத்
தேரடி மண்டபத் தோர்புறத்தே

38. புறத்தே யிருக்கையிலே — அந்தப்
பொன்னம்ப லத்தையர் சந்நிதிக்கே
சிறப்பான தேவடியாள் — முத்து
செண்பக ரத்தினஞ் சிவகாமி

39. சிவஞானம் வள்ளிமுத்தாள் — குப்பி
தில்லைசி தம்பரம் நல்லமுத்தாள்
அபிராமி வேதரத்னம் — தெய்வ
யானைசு வுந்தரி யாதிரத்னம்.

40. ஆதிக னகரத்தினம் — அபி
சேகரத் தினம்புட்ப ராகரத்தினங்
காதிற்செந் தேனொழுகுங் — கீதங்
கற்றசி தம்பர ரத்னத்துடன்.

41. உடந்தைப்பொன் மான்கிளைபோற் — கூடி
ஒக்கச்சென் றோர்நானும் பக்கத்திலே
தொடர்ந்தேனென் னுசையினாற் — சுற்றிச்
சுற்றிச்சி தம்பர ரத்னத்தையே.

42. பரமென்று சென்றடுத்தேன் — என்னைப்
பார்த்துக்கை கோர்த்துப்பி டித்துக்கொண்டாள்
திரமென்று நம்பிக்கொண்டேன் — வீட்டிற்
செல்லுமுன் பூர்வீகஞ் சொல்லுமென்றாள்.

43. சொன்னேனென் செய்தியெல்லாம் — உள்ள
தொந்தம்வி டாதினிச் சந்தேகமென்
முன்னே நடவுமென்றாள் — ஆசை
மூட்டித்தன் வீட்டினிற் கூட்டிச்சென்றாள்.

44. சென்றேன் மணைபுகுந்தேன்—செய்தி
சீக்கிர மாய்ச்சென்று தாய்க்குச்சொன்னாள்
இன்றுக்கம் வந்ததென்றாள்—நமக்
கேந்திழை யேகப்பல் சேர்ந்ததென்றாள்.

45. சேர்த்தார்க்குத் தங்கமடி—இந்தத்
தேட்டாள னம்முடைய வீட்டாள்போல்
வாய்த்தா னெனப்பகர்ந்து—நல்ல
வாய்ப்பாய்ச்சு தென்றந்தத் தாய்ப்பாவி.

46. விருந்திட் டுபசரித்தாள்—என்னை
வெல்லச்சி தம்பர வல்லிகையால்
மருந்திட்ட வாடையுடன்—என்றன்
மனங்குளி ரச்சந் தனம்பூசினாள்.

47. பூசச்சவ் வாதுதந்தாள்—நெற்றிப்
பொட்டுமிட் டாள்மிக்க கட்டுமெட்டாய்
வாசக் குழன்முடித்தாள்—என்முன்
வந்துநின் றாள்நல்ல விந்த்ராணிபோல்.

48. இந்த்ரநீல மேல்வீட்டில்—எனைவாரும்
என்றாள் நானங்கு சென்றதின்பின்
சந்த்ரகாந்திப் பொற்சுழிகை—மெத்தை
தட்டிவி ரித்தாள்பொற் கட்டிலின்மேல்.

49. மேலாக வென்னைவைத்தாள்—தானும்
[6]வெக்கிநின் றாளொரு பக்கலிலே
சேலைமுன் தானைதொட்டேன்—வந்து
செவ்வேயி ருந்தாளென் கைவழியே.

50. கையிற் சுருள்கொடுத்தாள்—பச்சைக்
கற்பூரம் பாக்கிற் கலந்துதந்தாள்

---

[6] வெக்கி — வெட்கி.

உய்யுஞ்சஞ் சீவியைப்போல்—இதழ்
ஊறல்தந் தாளதை மாறியுண்டேன்.

51. மாறிச் சுருண்மடித்தாள்—மார்பின்
மத்தக யங்கொண்டு குத்தவிட்டாள்
மீறிச் சரசஞ்செய்தாள்—கொஞ்சியே
மேற்கொண்டாள் மின்கொடி சேற்கெண்டை
[போல்

52. கொண்டைச் சொருக்கவிழக்—குக்கு
குக்குவென் [7]றெட்டுக்கு ரன்முழங்கத்
தண்டைப் பதம்வருந்த—மெல்லச்
சாய்ந்தாள் கொடுங்கையி லேந்திக்கொண்டேன்.

---

[7] எட்டுக்குரல் – எட்டுப் பறவைகளின் ஒலி. இதை

"கிட்டவர வோதி மங்கு யிற்புறவு காடை வண்டு
குக்கில்மயில் கோழி தொண்டை யிற்குமுறி யேயி ரைந்து
கீக்கீயெ னுஞ்சிறிது காக்காவெ னுஞ்சிறிது
கூக்கூவெ னுஞ்சிறிது—இதழ்நோகுது" என

ஆண்டுகொண்டான் வண்ணத்திலும்,

"கணவிர விற்பொன் னுழி கனலம லர்ச்சில் வோதி
கடைசரி யத்த டாது கரைகுயில் குக்கில் கோழி
காடைசு ரும்பு தோகை காரேகி னம்பு றுவொல்
காதொரு சங்கி லேமி காதெழு மெண்பு
ளோசை" எனப்பட்சி

ராசர் வண்ணத்திலும்,

"ஈகுறு காடை வண்டு சேவன்ம யூர மன்றில்
காரிபு றுவொ டெண்புள்—முறைமுறை—கூகு
கக்கு குகு கூவெனமி டற்றினிடை கூவியிறு
கச்சி லம லாடியுவ ரித்தொ ழில்செய் வாள்வளர்ச"

எனக் கிட்ண நாடான் வண்ணத்திலும் விவரித்துக்கூறி
யிருக்கிறது. குக்கில் = செம்போத்து. ஈ = கொக்கு.

53. ஏந்தியே முலைநெருடிச்—செவி
யேறுகண் ணளவளைத் திதழ்பருகிச்
சேர்ந்தேன் பரவசமாய்—இரு
தேகமொன் றுகிச்சம போகம்வரப்

54. [8]போகித்து லீலைதந்தாள்—ஆசை
[9]பூட்டியெ னக்குரங் காட்டவென்றே
[10]பாகத்திற் கைதேர்ந்த—மருத்துவப்
பண்டிதர் முறைப்படி குண்டிகைதனில்

55. குட்டிக்கு நிலப்பனைவேர் — முத்துராயி
கூந்தலுஞ் சித்தர்முடி சீந்தியிலையும்
நெட்டியிலை யெட்டிவிரையும் — பேய்ப்பீர்க்கு
நெல்லியிலை வில்லையிலை அல்லியரிசி.

56. சித்தாம ணக்குநெருஞ்சி — ஊமத்தை
சிறுகுறிஞ் சியுநல்ல பணமுறிஞ்சி
கத்தாளை நிலம்பறண்டி — ஆலின்கீழ்க்
கன்றுதலை சுருளியு நின்றுசிணுங்கி

57. சில்லானிடை கரும்பூனை — கருநாய்
செந்நாயின் தலைமண்டை சன்னசிமூரல்.
பல்லிமுட்டை அரணையின்வால் — முயற்குடல்
பக்குமுள்ளூ பச்சோந்தி கொக்குமயிரும்

58. மடையான் தவளைப்பித்தும் — ஆந்தையின்
வலக்கண்ணுந் தேரையும் புலிப்பாலும்
விடையான் கோழியெச்சமுங் — கன்னியர்கள்
மீதிலெழு மிந்த்ரியநல் மாதவிடையும்.

---

[8]பாடபேதம் மோகித்து
[9](பா - ம்) மூட்டி
[10](பா - ம்) பாக்கிற் சுருண்மடிப்பிற் - கூட்டிய -
பச்சோந்தி நாக்கை யறைத்துலர்த்தி.

59. நரிக்கொம்பு கரடிமயிர் — ஊர்க்குருவி
நாக்குக்க ரிக்குருவி மூக்குடனே
கரிச்சான் முதுகெலும்புஞ் — செம்போத்துக்
கழுத்துமு சித்தமுட்டை கெழுத்திமுள்ளும்

60. முள்ளிவேர் மொசுமொசுக்கை — புற்றின்மேல்
முளைத்தகி லுகிலுப்பை கழற்சியிலை
கள்ளிப்பால் வெள்ளறுகுவேர் — போத்தாணி
கத்தரிவ ழுதலையுஞ் சித்ரமூலம்.

61. மூஞ்சூர் முகட்டெலித்தோல் — தேவாங்கு
மொழிக்கால் நகமுட னடிக்காலும்
பூஞ்சோலைக் குயிலிறகு — மரவட்டை
புடையான டிவயிறு நெடுமரையும்

62 நெறிவிசம் பாசாணம் — கோட்டை
நேர்வாளம் பச்சைநாவி கோரோசனை
முறுகிய வலம்புரிக்காய் — திரைகடல்
முறையுடன் சித்தரத்தை யரிதாரம்.

63. தாவிய துருசுக்கட்டி — வெண்காரஞ்
சடைக்கஞ்சா திப்பிலியுஞ் சாதிபத்திரி
காவிக்கட்டி புழுகுச்சட்டம் — மரைப்பொடி
கத்தூரி கல்லுமதங் கொத்தமல்லியும்.

64. ೦ ೦ ೦ ೦
೦ ೦ ೦ ೦
நீர்முள்ளி சிறுதேக்குக் — காட்டெருமை
நெய்யாகும் பெருந்தேன் துய்யசொரங்கம்.

65 சொல்லிய மனோசிலையுங் — கடுக்காய்
சுக்கும திமதுர மொக்கவபினும்.
೦ ೦ ೦ ೦
೦ ೦ ೦ ೦

66\. காட்டினில் மூலிகையுஞ்—சமன்வாங்கிக்
கடைச்சரக் கும்விராக னிடைப்படியே
கூட்டியம் மியினடத்தி—இளங்கன்றுக்
கோமயந் தெளித்தஞ்சு சாமஞ்செவித்து

67\. அஞ்சுநா ளூறவைத்து—முலைப்பால்விட்
டரைத்துருண் டைபண்ணிக் கருக்கலிலே
வெஞ்சனங் கறிசோற்றில்—வெத்திலையில்
வெதுப்பிய தீம்பாலி லிதத்துடனே.]

68\. [11]தீட்டியே மருந்தையிட்டாள் — தின்றேன்
சேப்பணத் துட்பட்ட ஈப்போலே
[12]பாட்டவ ணையுமிட்டேன் — வீட்டுப்
பையலைப் போற்செய்தேன் கைக்கருமம்.

69\. கருமந் தனைக்குறித்தாள் — என்றன்
கையிற்பொற் சாளிகைப் பையுங்கண்டாள்
ஒருமாத முபசரித்தாள் — என்றன்
உடைமையைச் சூறை யிடநினைந்தாள்

70\. சூரத்துக் கப்பலிலே — வந்த
[13]சோனகன் கொண்டுவந் தானீதென்று
வீரான பொற்சரிகைப் — பட்டும்
வெள்ளிக்கும் பாவும்பொற் பள்ளயமும்.

71\. அயல்வீட் டுடைமையெல்லாங் — கொண்டுவந்
தந்நேரந் தன்னிலென் முன்னேவைத்தாள்
இயல்பான காரியமென்றே — விலையும்
இட்டெழு நூறுபொன் கட்டிவிட்டேன்.

---

[11](பா-ம்) தீட்டு மருந்தை திருட்டு மருந்துமிட்
[12](பா-ம்) பரட்டவணை
[13]சோனகன் = துருக்கி அல்லது அரபு நாட்டான்

72. கட்டிச் சமைந்துகொண்டேன் — பையின்
கனங்குறை யக்கங் கணங்கட்டினள்
பட்டாடை துன்னிடையாள் — அல்குற்
பைக்காகக் கொட்டினேன் கைக்காசெல்லாம்.

73. எல்லா வுளவுங்கண்டாள் — கையில்
இல்லாத தைமுகஞ் சொல்லாதோ
சல்லாப லீலையிலே — அவள்வஞ்
சகம்படித் தாள்பின்க லகந்தொடுத்தாள்.

74. தொடுத்தாள் பழங்கிழவி — என்முன்
தொங்தோமென் ருடத் துணிந்துகொண்டாள்
கடுத்தாள் மனங்கறுத்தாள் — நெஞ்சினிற்
கையைக்கொ டுத்துப்பையத் தள்ளிவிட்டாள்.

75. விட்டுக் கதவடைத்தாள் — அந்த
வேசைதன் ஞசார வாசல்முன்னே
ஒட்டுத்திண் ணைமறைவில் — அந்த
ஊதாரி வெள்ளாட்டி காதலினல்

76. xxx xxx — xxx
xxx xxx xxx
xxx xxx — xxx
xxx xxx xxx

77. நாலும மறைபடித்த — தில்லை
நம்பியார் வீட்டைவி ரும்பிக்கொண்டு
காலூன்றி நெட்டிரவிற் — சென்று
கட்டித்தி ரவியப் பெட்டகத்தை

78. அகத்திற் புகுந்தெடுத்தேன் — அதைச்சுமந்
தந்தப்பு றம்விட்டு வந்துவிட்டேன்
மகத்திற் சனியனையாள் — வீட்டில்
வந்தவு டன்பெட்ட கந்திறந்தேன்.

79. கந்தம லர்க்குழலாள் — பெட்ட
    கத்தைக்கண் டாளென்மு கத்தைக்கண்டாள்
முந்திந டந்ததிலும் — ஆசை
    மும்மடங் கெண்மடங் காய்நடந்தாள்.

80. நடராசர் சந்நிதிக்கென் — போலொரு
    நாட்டியச் [14]சிறைவேணும் வீட்டுக்கென்றாள்
உடனேநன் றாச்செனவே — நான்மன
    தொப்பிப்ப யணம னுப்பிக்கொண்டேன்.

81. அனுப்புஞ் சமயத்திலே — என்மேல்
    ஆசைபோ லேமுகமன் பேசினளே
தனித்தால் மனந்தரியேன் — எங்கே
    சஞ்சரிப் பீரென்று பஞ்சரித்தாள்.

82. xxx xxx — xxx
    xxx xxx xxx
xxx xxx — xxx
    xxx xxx xxx

83. xxx xxx — xxx
    xxx xxx xxx
திருப்பூட்டுங் காந்தனிடஞ் செய்யுஞ்
    சீராட்டெல் லாமங்கே பாராட்டினள்.

84. நாட்போக்கில் நான்சகியேன் — என்று
    நாரிசொ லக்கிழட் டோரிவந்து
தேட்போலும் வாய்திறந்து — தம்பி
    சீக்கிரம் போய்வாரும் பாக்கியமென்றாள்

---

[14]சிறை = ? ஆனல் அழகும் குணமும் நிறைந்த மகளிரைக் குறிக்கு நாட்டு வழக்குமொழியாகும் "இவளொரு நல்ல சிறை" "சீதையைச் சிறையெடுத்தான்" உலக வழக்கு

85. பாக்கிய மென்றெழுந்தேன் — தில்லைப்
பண்ணவன் சந்நிதி முன்னேவந்தேன்
யோக்கியத் துடன்தொழுதேன் — தொழு
தோர்மன தாய்வந்தேன் [15] தீபரமாய்ப்

86. பரங்குன்றத் தோர்சருகும் — மீனும்
பச்சியு மாகியி ழுத்ததுபோல்
அரங்கேற்றங் கண்டகள்ளி — ஆசை
அங்கேதன் ளக்கர்ம மிங்கேதள்ளத்

87. தள்ளித்தன் ளிநடந்தேன் — [16] ஒரு
சத்தமிட் டாங்கையி டத்துவந்து
கல்லுக்கு ளேறிநின்று — சாயங்
காய்ச்சுவண் ணன்சொல்லும் வாய்ச்சொல்லையும்

88. வாய்மையென் றேநடந்தேன் — தொண்டை
மண்டலத் தின்சோழ மண்டலத்தின்
சீமையெல் லாங்கடந்தேன் — அதி
சீக்கிரஞ் சீகாழி யூர்க்குள்வந்தேன்.

89. சீகாழி யூர்தனிலே — சென்று
செக்கடி வேம்பிலி ருக்கையிலே
[17] ஆகம்பிரி யாத்தோழ — னைபொன்
னப்பனைக் கண்டேனென் னப்பனைப்போல்.

---

[15] தீபரமாய் — தீவிரமாய்.

[16] இதே கருத்தை "விசையா — புரந்தனி லேபரு மரந்தனிலே, எனே தெரியாது — ஆந்தையு — மேவின தறியேன் தீவினையால்" எனச் சாத்தூர் நொண்டியிலும் "காக — மேவின துங்குயில் கூவினது, மொழுக்கமென் றேநினைந்தே சென்றங்" எனச் சீதக்காதி நொண்டி (45) யிலுங் கூறியிருக்கிறது.

[17] (பா-ம்) "போகப்பிரி யாத்துணைவ - னை - பொன்னப்பனைக்கண்டே னென்னப்பன்போல்"

90. என்னண வாருமென்ருன்—அவன்
இருக்கையிற் புகுந்தேன் சருக்கரைபோற்
சொன்ன னுபசாரம் — பாலுஞ்
சோறுந்தந் தான்பசி யாறுமென்ருன்.

91. பசிதீர்ந்து நித்திரைகொண்டேன்—அந்தப்
பாக்கியத் தானித்திரை போக்கியபின்
நிசிதீர்ந் தெழுந்திருந்தேன்—தம்பி
நில்லென் றவனுடன் சொல்லிக்கொண்டேன்.

92. சொல்லிவாய் மூடுமுன்னே - வெகு
தூரம்வந் தேன்திரு வாரூரில்
அல்லார் குழலிபங்கன்—திரு
வாலய முங்கம லாலயமும்

93. கமலத்த டாகங்களுங்—கண்ணிற்
கண்டுடல் பூரித்துத் தெண்டனிட்டேன்
விமலகு மாரருக்குக்—கருணை
மிக்கவி ரதம்வெள் ளிக்கிழமை.

94. விமலர்கு மாரசட்டி—எல்லாம்
வித்தக மாயனுட் டித்தபின்பு
குமரன் திருவருளால்—முசு
குந்தனுக் கிந்திர னிடமிருந்தே.

95. ஏதமி லாதிழிந்து—வந்த
ஏழ்விடங் கர்முதற் சூழ்விடங்காம்
வீதிவி டங்கர்தமைப்—போற்றி
விட்டக லாதந்தப் பட்டினத்தே.

96. பகட்டான பேருடனே—கூடிப்
பத்துநா ளங்கேத ரித்திருந்தேன்.
XXX XXX — XXX
XXX XXX XXX

97. XXX XXX — XXX
XXX XXX XXX
செட்டித் தெருதன்னிலே — ஒரு
சீராட்டுக் கலியாணம் பாராட்டினன்.

98. கலியாணச் சந்தடியில் — அசங்
காமற்சென் றேறினேன் மேன்மச்சின்மேல்
நலியா திருந்துகொண்டேன் — பின்னே
நடந்தது தொடர்ந்து சடங்கனைத்தும்.

99. சடங்கு நிறைவேறிச் — சோறு
சாப்பிட்டுப் பின்பெண்ணும் மாப்பிள்ளையும்
படங்கும றைவுக்குள்ளே — வச்சிரப்
பத்திசேர் மஞ்சத்தில் நித்திரைகொண்டார்

100. திரைநீக்கி யுட்புகுந்தேன் — மாயஞ்
[18]சேவித்தேன் கைப்பொடி தூவிவைத்தேன்
அரைநாழி கைப்பொழுது — பதை
யாமற்கி டந்தார்ம தோன்மத்தமாய்.

101. மாயப் பொடிப்பலத்தால் — அந்த
மாப்பிள்ளை மார்பிலோர் ஆட்சுமைபோல்
தோயுஞ் சரப்பளியு — முத்துத்
தொங்கற்ப தைக்கமுஞ் சங்கிலியுஞ்

102. சங்கைப் பணிகளெல்லாம் — ஒருநிமி
சத்திற்க ழற்றியெ டுத்துக்கொண்டேன்
மங்கை கழுத்துடைமை — காதின்
மாணிக்கத் தாலிட்ட பூணுடனே.

103. உடைதார முத்தரீயம் — எல்லாம்
உச்சிக்கொண் டேனெனை மெச்சிக்கொண்டேன்
புடவைமுந் தானையிலே — கட்டிப்
பேசாம லேவந்தேன் வாசலிலே.

---

[18](பா-ம்) செய்வித்தேன் கைப்பொடி தூவிவிட்டேன்.

104. வாசற் கடைதிறந்தேன் — வெளி
வந்தேன டந்தேன்வி டிந்திடுமுன்
ராசகோ பாலமன்னர் — கோவில்
நாடியச் சாலையிற் கூடிக்கொண்டேன்.

105. சாலைக்குட் கன்மடங்கள் — அன்ன
சத்திரந் தோறுந்த ரித்திருந்தேன்
காலாறி மெள்ளவந்தேன் — அள
காபுரி நேர்தஞ்சைக் கோபுரமும்.

106. புரிசைச் சிகரங்களும் — சூழப்
பூவனம் பூத்தநந் தாவனமும்
வரிசைத் தெருவுங்கண்டேன் — மாட்டு
மந்தைக்கு மேற்கான சந்தைகண்டேன்

107. சந்தைக்கு மூரமாகப் — பல
சாதியுஞ் சூழ்கடை வீதிகண்டேன்.
அந்தத் தலந்தினிலே — சென்றங்
கமர்ந்துமெ லிந்தச டந்தேற்றச்

108. [19]சடக்கெனத் தலத்திடைச்சி — ஒரு
தாய்க்கிழ விக்குச்செவ் வாய்க்கிழமை
மடத்தில் விடுதியென்றாள் — அந்த
மாதாவைக் கண்டேனென் தாதாவைப்போல்.

109. வைப்புச்செப் புள்ளதெல்லாம் — அங்கே
வைத்துவை யென்றுகொ டுத்துவைத்தேன்
முப்போதுஞ் சோறுமிட்டே — அவள்
முத்துப்போ லென்னைவ ளர்த்துக்கொண்டாள்.

---

[19]சடக்கென — விரைவுக்குறி.

விருத்தம்.

110. இடைச்சிதன் மனையிற் கிட்ண
னெனவவள் வளர்க்கு நாளில்
கோடைத்தரு சாகோசி யூருங்
குடிகளு மலைந்த வாறும்
படைச்சேயத் தளவாய் வந்து
பாளையஞ் செய்த வாறுந்
தொடைச்செழுந் தமிழாற் பாடிச்
சொல்லுவேன் சொல்லு வேனே.

சிந்து.

111. மருச்சிந்து துணர்க்கடம்பன் — வானவர்சத்
துருச்சிந்த வேற்படை தொடுத்தபிரான்
தருச்சிந்து மலர்ப்பொழில்சூழ் — சந்தவரைத்
திருச்செந்தி லூர்புரந்த தேவதேவன்.

112. வள்ளிப்பெண் மணவாளன் — மரகதப்
புள்ளிக்க லாபமயிற் புரவியினன்
தெள்ளித்தெ ளிந்ததமிழோர் — செய்யும்வினை
தள்ளிக்க ருணைதருஞ் சண்முகத்தான்.

113. சேவலங் கொடிவீரன் — செந்திலெந்தை
ஆவலுடன் புரக்கு மண்டலத்தில்
பூவுல கினிற்சிறந்த — புகழ்பெற்ற
நாவலோ கம்பெருந் தீவுதன்னில்.

114. பூமகள் திருமனைபோற் — பொன்செய்த
மாமதில் சூழ்சோழ மண்டலத்திலே
ஆமெனக் கொலுவிருக்கும் — அவட்கொரு
தாமரை போற்சிறந்த தஞ்சையிலே.

115. தீட்டிய பெரும்புகழான் — செழித்தம
ராட்டியத் துரைகளிற் ருட்டியவான்

கூட்டிய நிதிகோடி — தேடிக்கொடி
நாட்டிய [20]கோசிக நரபாலன்.

116. பாலக னெனவுதித்தோன் — பாவையர்க்கு
வாலசொ ரூபமன் மதராயன்
பூலோகத் தரசர்மெச்சும் — புத்திவாய்ச்
சாலகன் சாகோசி மகராசன்.

117. மாமுகில்சா கோசிமன்னன் மதுமலர்த்
தாமப்பு யனிளைய தப்பியுடனி
ராமனி லக்குவனென்ன — இருந்திந்தப்
பூமண்ட லமனைத்தும் புரந்திடுநாள்

118. இசைபெற்ற மதுரையிலே — மலையத்து
வசனற்கு மாரிசெய்த துரைத்தனத்தில்
நிசமுட னரசுசெய்து — நீதிபுரிந்
தசையா மணிகட்டு மாதினத்தில்

119. உற்றசொக்க நாதேந்திரன் — உதவிய
வெற்றிரங்க கிட்ணமுத்து வீரேந்திரன்
பெற்றெடுத்த வரபாலன் — பிரவுடீக
கொற்றமனு ராசர்தொழக் கொலுச்செய்கு
வோன்.

120. அஞ்சலர் குறும்படக்கி — மைசூருஞ்
செஞ்சியுந் தஞ்சையுந் திரையிடவே
மிஞ்சிய மனுவேந்தன் — எளியவர்
தஞ்சம தானசமத் தானபதி.

121. வெங்கட கடகளிற்றன் — விசைய
ரங்கதிரு மலைச்சொக்க நாதேந்திரன்
சங்கைச் சமத்தானந் — தன்னிலொரு
[21]சிங்கே றெனவந்த செயவீரன்.

---

[20](பா-ம்) கோசிங்க ராயபாலன்.

[21](பா-ம்) சிங்கக்கன் றெனவந்த.

122. [22]அரசர்க்கு மகுடாரத்தினந் — தளவாய்
[23]நரசப்ப னுதவிய நரபாலன்
திரையுற்ற கடற்படையாற் — செயங்கொண்டு
தரைமுற்றுந் திறைகொண்ட தளராயன்

123. வீரத்தில் விக்ரமார்க்கன் — புத்திவிவ
காரத்தில் பட்டிதனே நேரொத்தகார்
பார்மெச்சுஞ் சதுர்வேதன் — பணிந்தோர்க்குப
காரத்து ரையெனுங்கு மாரத்தளவாய்.

124. மறுமன்யர் குறும்படக்க — வேணுமென்று
[மாத்தார்ம னுக்குடன் மேத்தாருகான்
தறுகண்ணன் சத்தரேகான் — தாரேகான்
சவ்வாசு கான்கோரி நவ்வாசுகான்.

125. வரசுலே கான்சருவாணி — பீருகான்
வாவாகா னாகான்பத் தேகானேகான்
கிரிதேச மெச்சுஞ்சூனுபு — கான்பரித்
திரள்செறி மீருகா னதிறு[24]வெக்கு

126. மதப்புலி கன்னிசாய்பு — இமாமுகான்
மதப்புலி கான்சாய்பு மம்மதுமதார்
சதுர்ப்பண்ணும் அவுதல்அலி — பக்கீரு
சாய்புஅ வுதல்பட்சி தல்லீதுகான்.

127. திறற்றுறை யூரிலெட்டி — [25]வல்லவன்]
தேசமெல்லாந் திறைகொண்ட ராயர்தொண்டை
[மான்
மறப்படைத் தளவீரர் — கம்பளத்தில்
மாய்மாலச் செகவீர ராமவெட்டமன்.

---

[22](பா-ம்) அரசர்மகுட.
[23](பா-ம்) நாகப்ப.
[24]வெக்கு — பேக் என்னும் முசிலீம் பெயரின் திரிபு.
[25]வல்லவன் — பல்லவ அரையன்.

128. (ராசர்பு கழ்வசீகரன் — [26] இரகுவீர
ராமகட் டபொம்மு நரபாலன்
வாசற்பிர தானியான — தளசிங்க
மதியன்கு மாரசாமி அதிகாரி.)

129. நால்வகைப் படையுடனே — விசைய
ரங்கதிரு மலைச்சொக்க நாதனருளாற்
சீலன்கு மாரத்தளவாய் — சந்திமலைத்
திருக்காட்டுப் பள்ளியெனுஞ் சதுர்க்கோட்டை
முன்.

130. விருதுமன் னியர்நடுங்கப் — பஞ்சபட்சி
வேளைய றிந்துவந்து பாளையஞ்செய்தார்
பருதியு தையகிரியுஞ் — செங்கனகப்
பாரமலை யும்போற்கூ டாரமடித்தார்.

131. போர்வெல்லுஞ் செயத்தம்பம்போற் — கூடாரப்
புறத்தினி சான்களு நிறுத்தினரே
கார்செல்லுங் கருமலைபோற் — கட்டினர்
கடகரித் திரள்முற்று மிடையிடையே.

132. பார்க்கடல் வளைந்ததுபோற் — சுற்றெல்லாம்
பரித்திரள் முற்றுங்கட்டி நிறைத்தனரே
ஏர்ப்படைப் பொங்கிலியரும் — வடுகரும்
இடங்கொள்ப டங்குதொறு முடங்கினரே.

133. வன்னியரு மறவர்களும் — நிழல்தேடி
மரந்தோறு மிருந்தனர் நிரந்தரமாய்த்
தன்னிகரி லாததளவாய் — விருதுநி
சான்கண் டாசாரந் தான்கண்டபின்.

134. பரந்திடு மருவலர்மேற் — புலிபோலப்
பாயுங்கு மாரத்தள வாயுடனே

---

[26] (பா-ம்) "செகவீர"

வருந்திறல் வீரரெல்லாங் — [27]திசைசக்ர
வாளரு டுங்கிடச்ச ராளம்வந்தார்.

135. சாடிய பாளையத்தார் — குதிரைப்படை
தஞ்சைக்கோட்டை வாசன்மட்டு மிஞ்சிவரவே
கூடிய சனங்களெல்லா — மவரவர்
கூசாமற் றம்மிலே யோசனைசெய்தார்.

136. [செஞ்சித் தளமல்லவே — மைசூராமிச்
சேரிவே லூருத் தளமல்லவே
ஒஞ்சிப் பொருவர்களோ — இவர்நம
துளவெல்லா மறிந்த தளமாச்சே.]

137. அரமனைத் தளங்கள்வந்தால் — ஊரைக்கொள்ளை
யாடிச்சூ றையிட்டுப் போடுவாரே
வரமன தில்லாதபேர் — இருமென்று
[28]வலசையும் வாங்கினர் நிலவரமாய்.

138. மாடமும் பாராமல் — கட்டுமச்சு
மாளிகையுஞ் சூளிகையும் பாராமற்
கூடமும் பாராமல் — நீராவிக்
கொல்லையும் பூங்காவும் பாராமல்

139. மெத்தையுங் குத்துவிளக்குஞ் — சோறுண்ட
வெள்ளிப்பள் ளயாமும் பாராமல்
பத்தரைமாற் றுத்தங்கம்போல் — கட்டிநின்ற
பந்திக்கு திரைதனைப் பாராமல்.

140. தேவியைத் தேடாமல் — தான்பெற்ற
சிசுக்களைப் பசுக்களைத் தேடாமல்
ஆவியைத் திரவியம்போல் — ஒதுக்கிக்கொண்
டாவென்ற லறிக்கொண்டு போவாரும்

---

[27] (பா—ம்) பூச்சக்ர.

[28] வலசைபோதல் — குடியெழுந்துபோதல்.

141. வனத்திடைப் புகுவாரும் — இண்டஞ்செடி
மறைப்பிற்கி டந்துகைகால் விறைப்பாரும்
இனத்தொடுங் கூடிச்சென்று — மடங்களில்
இடக்கை தலைக்குள்வைத்துக் கிடப்பாரும்

142. ஆடலப் புரவியேறித் — திரிந்ததுபோய்
அடப்பத்தைத் தோளிலிட்டு நடப்பாரும்
பாடகக் கான்மடவார் — பாக்குத்தின்ற
பவளச்செவ் வாய்நுரைக்கச் செல்வாரும்

143 [ஒவ்வாத கருமஞ்செய்தார் — மதுரையர்
உளவறிந் தாரென்று தளர்வாரும்]
இவ்வாறு சனங்களெல்லாங் — கல்லதர்பற்றி
ஏனாதி யூர்விடியப் போனார்களே.

144. வலசையும் வாங்கிப்போனார் — வீடுதொறும்
வாசல்தொறு மாயர்பாடிப் பூனையைப்போலே
கலசமா டித்திரிந்தேன் — சலித்திரு
கால்சடைத்து வந்திருந்து யோசனைசெய்தேன்.

விருத்தம்.

145. [கொம்பனை யாட்குச் செம்பொன்
கொடுக்கவே காட்டுப் பள்ளிப்
பண்புசேர் பாடி வீட்டுட்
புகுந்தியான் பயின்ற வாறும்
வம்பிலே தேசி யொன்றை
வெளவின வாறுங் கைகால்
துன்புற விழுந்த வாறுஞ்
சொல்லுவேன் சொல்லு வேனே.]

சிந்து.

146. பெண்ணுக்குப் பொன்கொடுத்து — நமக்கிந்தப்
பேருபெற்றுக் கொள்வது பூருவமென்றே
புண்ணிய வான்தளவாய் — பாளையத்திற்
புரவிகொண் டுவரத்தந் திரநினைந்தேன்.

147. புலியா சனமெடுத்தேன் — உடம்பினிற்
பூதியுத் தளமாகப் பூசிக்கொண்டேன்
குலிசா யுதன்செலுத்து — மாத்திரைக்
கோலுந்திரி தண்டுமொரு வேலுமெடுத்தேன்.

148. பவுத்திரம் விரற்கணிந்தேன் — உத்திராட்சப்
பழுத்தம ணிக்கோவை கழுத்திலிட்டேன்
உவப்பொடு மயிர்முடித்துக் — கவிழ்த்தியே
ஓட்டுத்தெரி யாமற்சடை கட்டிக்கொண்டேன்.

149. காதிற்க வசகுண்டலம் — ஆறுகட்டுக்
கடுக்கனிட் டாணுவத்தை யொடுக்கிக்கொண்
டேன்
நாதிக்குஞ் சங்கமெடுத்தேன் — பன்றிக்கொம்பு
நரிக்கொம்புஞ் சடைமேலே தரித்துக்கொண்
டேன்.

150. (காசாய வேட்டியொன்றை — மருங்கினிற்
கட்டுமெட் டாகவே கட்டிக்கொண்டேன்)
பூசணம் போலிலங்க — ஒட்டியாணம்
பூட்டினேன் சிவயோக வேட்டியுடன்.

151. நேத்திரப் புருவமட்டும் — பூசுந்திரு
நீற்றுத்தி ரிபுண்டரக் கீற்றுமிட்டேன்
பாத்திரக் கமண்டலமுங் — திருநீற்றுப்
பையும்பி ரம்புமொரு கையிலெடுத்தேன்.

152. பவவினை துடைத்தவர்போல் — தந்தக்குமிழ்
பதித்தபா துகைமேன் மிதித்துக்கொண்டேன்.
சிவயோக வேடங்கொண்டு — பாளையத்திற்
சிங்கத்தைப் போலவு ழுங்கிச்சென்றேன்.

153. பாளையத் தெருவொழுங்குங் — கூடாரப்
பந்திக ளுங்குதிரைப் பந்திகளும்

வேழநிகர் தளவீரர் — விடுதிமுன்
வேழங்கள் நிற்குமடை யாளங்களும்.

154. கோடிநிதிக் கொடிநாட்டி — வர்த்தகஞ்செய்
குச்சிலியர் கூடாரத் தெச்சரிக்கையுந்
தேடிநவ மணிகுவிக்கும் — வியாபாரச்
செட்டிப்பிள்ளை மாரிருக்கும் வட்டிக்கடையும்

155 பத்தியாய்ப் படங்குகட்டி — வீதியிரு
பக்கத்திலுஞ் சேர்பலச ரக்குக்கடையும்
கத்தன்முனைப் பாளையத்தை — உச்சிதமாய்க்
காக்குந்தலை யாரியள்ப ராக்கிரமமும்

156. கதித்தம ணியகாரர் — உபதானக்
கட்டளைபோ லேகடத்துந் திட்டவட்டமும்
மதித்தவ டுகதுரைகள் — [26]வசீருகள்
மறுமன்னி யர்பாளையச் செறிவுங்கண்டேன்.

157. தழைக்குங்கு மாரத்தளவாய் — கூடாரந்
தானுங்கண் டேனதினி சானுங்கண்டேன்
மழைக்குழ லியர்மதவேள் — தொண்டைமான்
மகராசன் கூடார வாசலில்வந்தேன்.

158. வாசலிற் பிள்ளைமார்க்குஞ் — சேவகர்க்கும்
வரிசையூ ழியஞ்செய்யும் பரிசனர்க்கும்
கூசாமல் நீறுகொடுத்தேன் — என்னைக்கண்டு
கும்பிட்டெல் லோரும்வந்து கூடியேநின்றார்.

159. தொண்டைமான் கொலுவிற்சென்றேன் —
சென்றவுடன்
தொழுந்தெய்வம் போலெனைக்கண் டெழுந்
திருந்தான்

[29](பா-ம்) மண்டலீகர், ஒசிருகள்.

மண்டலா திபனிருக்குங் — கம்பளத்தில்
மதியாமற் சென்றிருந்தே னதிசயம்போல்

160. சாமியென்று வணங்கிநின்றான் — திருநீற்றைச்
சற்றேதொட்டுக் கைப்பிடித்து நெற்றியில்
வைத்தேன்.
வாமியென்ப தறிந்துகொண்டான் — அறுசுவை
வர்க்கமெ லாம்பூசைமு கத்திற்கொணர்ந்தான்.

161. அமைந்ததை விடுவேனோ — தேவியென்
ருனந்த மாகமத்ய பானங்கொண்டேன்
சமைந்தது சோறுங்கறியுங் — கொண்டுவந்தார்
சனங்களூ டிருந்துபோ சனம்பண்ணினேன்.

162. துரைதொண்டை மானருளால் — பந்திதனில்
தோசையு முப்பழமும் பூசைகொண்டேன்
இரைகொண்ட விரியனைப்போல் — கடையெனும்
பெடுக்கநித் திரைவந்து படுத்தேனே.

163. படுத்துநித் திரைவிழித்து — விடிந்தபின்
படையிருப்பைச் சுற்றினேன் தடையறவே
அடுத்தடுத் துபசரித்துக் — காவற்றலை
யாரிப தாதிகள்வி சாரிப்புங்கண்டேன்.

164. வளங்கொண்ட பாளையத்தில் — உண்டான
வளப்பமு மதிற்றள வளப்புங்கண்டேன்
உளங்கொண்ட துணிவுடையோர் — சஞ்சரிக்கும்
உளவுமங் கேநடக்குங் களவுங்கண்டேன்.

165. பறைதட்டி மணியடித்துப் — [30]பறைகாரர்
பாளையஞ்சுற் றியேகாக்கும் வேலையுங்கண்டேன்
குறையற்ற பாக்யதுரைகள் — பாளையஞ்செய்
கூடாரந் தோறுஞ்சென் றாடாடினேன்.

---

[30](பா-ம்) பரிகாரர். பறைகாரர் — ஊர்க்காவலாளிகள்.

166. படுக்கையுக் களமுங்கண்டேன் — உக்களத்திற்
பழிப்பற்ற சேவகர்கண் விழிப்புங்கண்டேன்
கொடைக்கிந்த்ர தாருதளவாய் — துரையேற்றக்
குதிரையைச் சதுரான குதிரைதனைச்

167. சேவிக்கும் ராவுத்தமார் — எவரையுந்
தினசரி காத்திருந் தனுசரித்தேன்
ஏவற்காசு தாரிப்பயல்கள் — என்னோ
டிணங்கிவ ணங்கிடவங் கணம்பண்ணினேன்.

168. விரவுந றுநெய்க்கடலை — வெத்திலைக்கும்
மிளகுக்குங் கையேந்திப் பழகிக்கொண்டேன்
ஒருதாய் பெற்றபிள்ளைபோல் — எல்லோர்க்கும்
உடந்தைய தாகவே நடந்துகொண்டேன்.

169. எத்திலே மனஞ்செலுத்தி — அரமனையி
லாயத்துப் பயல்கள்ச காயத்தினால்
பத்துநாள் திரியுமுன்னே — குதிரைகள்
பயிலுந்தொ ழிலுநன்றாய்ப் பயின்றுகொண்டேன்.

170. மையும்வெண் ணையும்போலே — சனங்களை
மருட்டிய மழைக்கா விருட்டைக்கண்டேன்
கொய்யுளை தனைத்திருட — ஒருமித்துக்
கோழையில் லாமலிது வேளையென்றே.

171. தனித்தொரு தலத்தில்வந்து — வேடங்கொண்ட
சங்கடமெல் லாங்கழற்றி யங்குவைத்தேன்
மனித்தர்க்கு ருத்தெரியாமற் — கூட்டிய
மையத்த டவிக்கொண்டேன் மெய்யெங்குமே.

172. காங்குச்சல் லடந்தரித்து — மருங்கினிற்
கறுத்தக்கச் சையைக்கட்டி யிறுக்கிக்கொண்டு
கோங்கிற்புல் லுருவியுடன் — குளிநரிக்
கொம்புஞ்சி கைக்குள்வைத்தேன் கெம்பீரமாய்ப்

173. பூனைக்கண் மணிக்குளிசம் — மாயச்சொக்குப்
பொடித்திரு நீற்றைக்கச்சைக் கொடுக்கில்
வைத்தேன்.
சேனைத்த லைவர்களெல்லாம் — எழுதிய
சித்திரத்தைப் போலுறங்கு நித்திரைகண்டேன்.

174. காயத்தை யொடுக்கிக்கொண்டு — நாளைப்படுங்
காயத்தை யறியாமல் லாயத்திலே
மாயத்து டன்புகுந்தேன் — புல்லுக்கட்டு
மறைப்பிற்சென் றேவிளக்கை நிறப்பிக்கொண்
டேன்.

175. மருவற்ற சீவரத்னம்போற் — கட்டிநின்ற
வாம்பரியைக் கண்டுச லாம்பண்ணினேன்.
முருகர்செ ழுங்கருணையாற் — சிறந்தபொன்
முகந்தொட்டு பசரித்தி லகான்பூட்டினேன்.

176. பாளாசந் தனையவிழ்த்தேன் — முறுக்காணி
பறித்துக்க ழுத்துக்கட்டி தெறிப்பும்விட்டேன்
தோளாச மானபயல்கள் — கையைக்கொண்டு
சுருக்கிய மேல்வாகை திருத்திக்கொண்டேன்.

177. குறுக்கின்மு றுக்குப்போட்டு — வெள்ளிக்கச்சைக்
[31]கொடிக்கயிற் றைப்பிடித்து வெளிக்குள்வந்தேன்
அறிக்கைய றிந்தகுதிரை — கைக்குள்வசம்
ஆச்சுதெ னக்குநன்றாய் வாய்ச்சுதென்றே.

178. சதிர்கொண்டு வலஞ்சுற்றியே — மேற்கொள்ளச்
சறுக்காமல் நான்வந்த கறுப்பைக்கண்டு
குதிகொண்ட னுமானித்துக் — கிட்டநின்ற
குமையத்துக் கெடுத்தது சமையத்திலே.

179. புரவிமு ழக்கங்கேட்டே — எழுந்தனர்
பூணித்த ரட்டர்களுஞ் சாணிமாரும்

[31](பா-ம்) குவிந்துக்கை யிற்பிடிததது.

திரவியக் கட்டிபோலே — கட்டிநின்ற
தேசியைத் தேடுமென்றார் *காசலையாய்.

180. நாட்டங்கு திரைமேலே — என்றறிந்து
நமக்கென்ன பாவமென்று சமத்துடனே
ஒட்டத்தி லோடியொளித்தேன் — பேசாமல்
ஒப்பத்துடன் தப்பிக்காணக் கொப்பரைக்குளே.

181. லாயத்தைச் சோதித்தபேர் — தலந்தப்பி
லகத்துக்கு ளாய்நின்றது ரகத்தைக்கண்டார்
மாயத்தி ருடனிவனைத் — தேடியோடி
மட்டுத்துறை மட்டும்வழி கட்டுகட்டென்பார்.

182. விழுந்தப ணமுந்தெரியத் — தீவட்டியும்
விளக்கும்ப கல்வத்தியும் விளக்கிக்கொண்டு
கழுந்துமொட் டையராகத் — திரிந்தனர்
காசுதாரிப் பயல்கள்பி சாசுகள்போலே.

183. பக்கத்தில் விடுதிகளும் — பறையர்கள்
பச்சைப்புல்லி னன்மடக்குங் குச்சுகளுந்
திக்கெங்குங் கும்பல்கும்பலாய்க் — கல்லணைகள்
சேணங்கள டுக்குமுக்கி ராணங்களும்.

184. விரித்தப டங்குமறைப்பும் — புல்லுக்கட்டும்
விறகுக்கட் டுக்கடுத்த மறைவுகளும்
அரித்துச்சல் லடையிட்டுத் — தேடியென்னை
அலைந்தார திற்கிடந்து மலைந்தேனே.

185. கிடந்தச மயந்தனிலே — [32]விழிப்பாய்க்
கிரமத்திற் றப்புவது முறைமையென்றே
கடந்துகொப் பரையைவிட்டுச் — சீக்கிரத்திற்
கழித்தபுற் சூட்டிற்சென் றொளித்தேனே.

---

* "கங்கண மெனக்கேன் சிங்கா காசலை யுனக்குண் டானால்." (குற்றாலக் குறவஞ்சி)

[32] (பா—ம்) நாமினிக்.

186. சோதனை பெரிதெனவே — கையைக்காலைச்
சுருக்கியு டலைமறைத் திருக்கையிலே
காதிலெ றும்புதுளைக்க — நட்டுவக்
காலியொ ருபுறத்திற் காலிற்பிடுங்கத்

187. தேளொரு புறத்திற்கொட்டச் — சகனத்திற்
செய்யான்க டிக்கச்சற்று மெய்யாமலே
ஆளொரு புறந்தேட — அடுப்பிலிட்ட
ஆராற்போற் றுடித்தேனந் நேரத்திலே.

188. கடுப்புமெ ரிப்புமரிப்பு — மிகுந்திடக்
கல்லுப்போ லசையாமல் புல்லுக்குளே
இடுப்புமு றிந்தநாய்போற் — கிடந்துகொண்
டெத்தனைய வத்தைக்கென் றுத்தரஞ்சொல்வேன்.

189. பதினெட்டுக் கொட்டுவகைக்கு — மருந்திட்ட
பையில்லை யோவெடுக்கக் கையில்லையோ
விதிசுற்றி [33]விளைந்துகொண்டாற்—செய்வதென்ன
வெறுவாய்மென் றேனந்தத் தறுவாயில்

190. தருணத்தைக் குறித்துக்கொண்டு — நாமினிச்
சாதிக்க வேணுந்தெய்வஞ் சோதித்ததென்றே
விரணத்தைப் பொறுத்துக்கொண்டு—புட்டுத்தின்று
விக்கினற் போலிருந்தேன் வெக்கினற்போல்.

191. கடித்துச்செ விக்குருத்திலே — அடிக்கடி
[34]கறும்பிக்கொண் டேயிருந்த எறும்புக்குநான்
முடித்தகு றைதானுண்டோ — இதுக்கென்மேல்
முற்பிறப்பி லேதேனு முட்பகையுண்டோ.

192. வேதனை கொடிதெனவே — நானிருக்கும்
வேலியிற் றேடினபல் வாள்வீரர்
எதைநி னைத்தார்களோ — கழிப்புல்லை
இழுத்துப்ப டப்பிற்றீயைக் கொளுத்துமென்றார்.

---

[33](பா—ம்) வளைந்து. [34]கறும்பி — கறிம்பி.

193. தீயென்ற சத்தங்கேட்டு — நாமிருந்த
செடிக்குங்கொ ழுத்தசனி பிடித்ததென்றே
வாயொன்றும் பேசாமல் — தீக்கொளுத்தி
மருண்டபு கைமறைப்பி லுருண்டேனே.

194. தொங்கத்த னம்பண்ணுமலே — உருண்டுருண்டு
செந்தூர்க்கும ரேசர்திருத் தேருக்குப்பின்னே
அங்கப்ர தட்சணம்வந்தே — ஞானும்
அதற்கான தவப்பேறி லவித்திடுமே.

195. தொலையாத வேதனையெலாம் — போதாமல்
துறண்டிபோற் செறிந்தமுட் குறண்டிமுள்ளுந்
தலைமயிர் தனையிழுக்க — முனைக்கல்லுத்
தைத்துடல மெல்லாஞ்சில் ரத்தம்பாய

196. உப்புமண் தரையெரிக்க — நெரிஞ்சிமுள்
உருளையி லேதைக்க வுருளையிலே
குப்புறப் போய்விழுந்தேன் — சட்டாளக்
குதிரைநீர்க் கேடயக் குழியுக்குளே.

197. வாயிலு நாசியிலும் — விழியிலும்
மாத்திர மோகுதிரை மூத்திரம்வந்து
தீயிலுங் கொடிதாக — எறும்பிருந்த
செவியுட்பு குந்ததுமு தவியல்லவோ.

198. மரச்செக்கு லக்கைபோலே — உருண்டகான்
வழிதப்பிக் கேடயக் குழியுக்குளே
இரைச்சலு டனேவிழுந்தேன் — கள்ளன்மதி
இழந்தா னெனவந்து வளைந்தாரே.

199. கேடயக் குழிதனிலே — சுற்றிமொய்த்த
கேசமற்ற துருக்கரும் ராசபுத்ரருங்
கூடிய வடுகர்களும் — ஓடிவந்து
கூக்குரலெ ழுப்பிநின்று நாக்குவளைத்தார்.

200. [சட்டையத் தொங்கவாண்டு — குதிரையைத்
தசுக்கரம் பண்ணவந்தா னிசிக்குளென்பார்]
வெட்டவேணுங் கட்டுகட்டென்பார் — கிடக்கிறன்
வெறிமுண்டா தொத்தனேரி கரிமுண்டம்போல்

201. பரியிவ னுக்குத்தகுமோ — அர்றே
பான்சோத்து பக்கொடு பக்கொடென்பார்
அரமனைக் கருவூலத்தைத் — திருடவந்
தழுந்தந ரகத்திடை விழுந்தானென்பார்.

202. [சலக்குழித் தண்ணீருங் — குதிரைத்
தாரைத்தண் ணீருலர்த்திச் சாரத்துடனே
கலக்கிய சேற்றுக்குளே — ஐம்புலன்
கடந்திட்ட ஞானிகள் கிடந்தானென்பார்.

203. முகத்தைத்தி ருப்பிக்கொள்வா — ரப்புறம்போய்
மூச்சுவிடு வார்கெட்டி யாச்சுதென்பார்
குகைக்குழி தன்னிற்கிடக்குங் — காசுதாரிக்
கூத்திமக னைக்கரை யேற்றுமென்பார்.

204. நாய்க்குந ரிக்கும்பொருந்தா — நாற்றமிவன்
நாசிக்கும் பொறுக்குமோ சீசீயென்பார்]
மூக்குப்பூ ரினகழுதை — இவனுக்கு
மோசம்வந் தானுமில்லை ரோசமென்பார்.

205. மரத்தினு முணர்ச்சிகெட்டு — நான்கிடந்து
வருணசெ பஞ்செவிக்குந் தருணத்திலே
கரைக்கிழுத் தெறிவனென்று — துணிந்தொரு
கழுக்காணி மொட்டையன்வந் திழுத்துவிட்டான்.

206. இலக்கற்ற மழுங்கலென்னைக் — கொணர்ந்துபன்
னிரண்டுவ யதுசென்று திரண்டபெண்போல்
தலைக்குத்தண் ணீர்சொரிந்தார் — சண்டாளச்
சடத்தில ழுக்கனைத்துந் துடைத்துக்கொண்டேன்.

207. கதலமி தலப்போமோ — கையிறுகக்
கட்டியே [35]கேக்கையிட்ட தட்டிக்கொண்டு
பதனம்ப தனமெனவே — பரிகாரப்
பறையர்கொ ணர்ந்துவிட்டார் சிறைதனிலே.

208. காவற்ற லேயாரிகள் — நமக்கின்று
களைதீர்ந்த தென்றுநாலு முளைகளறைந்
தேவற்ப யல்களைவிட்டுக் — காலுங்கையும்
இழுத்துக்கட் டக்கிடந்தேன் முழுத்துக்கமாய்.

209. விடியத்தெ ரியாமலே — ஏழெட்டு
வெறிகாரப் பயல்கள்*வண் டுறுக்கிக்கொண்டு
கடினப்ர வர்த்தகமாக — நான்கிடந்த
காவற்பு ரைக்குள்வந்தா ரேவற்பேய்போல்.

210. அவிழ்த்தென்னை முன்னேவிட்டு — மயீர்முடி
அவிழத்த லேயைமெள்ளக் கவிழத்தள்ளித்
துவக்கிய கொடிக்கயிற்றிற் — பிடித்துத்
தொண்டைமான் திருமுன்னர் கொண்டுபோய்
விட்டார்.

211. திசைபெற்ற மன்யராயர் — ராவுத்தமார்
சேவகத் துரைமக்கள் யாவர்களும்
வசைபெற்ற திருடனிவன் — வந்துநின்ற
மார்க்கத்தைப் பாரும்வெகு தீர்க்கனென்பார்.

212. [நாடறிந்த களவுசெய்து — காலேக்கையை
நடுக்காம னின்றுன்மிகு துடுக்கனென்பார்]
ஊடறிந் திவனல்லவோ — அன்றுசிவ
யோகியாய் வந்தஅனு போகியென்பார்.

---

[35]கேக்கை — களிப்பினுலெழுமொலிக்குறி. "குதித்துக் குதித்துக் கேக்கை போட்டுக் குடும்ப ரெல்லோருங் கூடியே" (வையாபுரிப்பள்ளு 158)

*" அம்பலத்தில்வந் தாடாத டாவென்று வம்புச்ச டைச் சிவண் டுறுக்கவே" (வையாபுரிப்பள்ளு 183)

213. [தளமித்த னைவந்திறங்கும் — பாளையத்திற்
சாண்காட்டி லெட்டுமுழத் தூண்காட்டினன்]
களவுக்குச் சேமனென்பார் — சேமனிவன்
காலுக்குப்பற் றுன்களவு நாலுக்கென்பார்.

214. கள்ளனிவ னுகாசத்தை — வடுப்படக்
கடிப்பானி னைத்ததெல்லா முடிப்பானென்பார்
[மெள்ளவந்து சிக்கினதெல்லாஞ் — சிவயோக
வேசத்தைத் தூசணித்த தோசமென்பார்.

215. ஒருத்தனி வனுக்கிணையோ — சிவசிவா
ஒருகூடு கோழிதின்ற வெருகிதென்பார்
செருக்குநெ ளிப்பும்பாரும் — இவனிட்ட
திலகத்தி லேமயங்கு முலகமென்பார்.

216. கொடுமைசெய் பாதகனை — வங்கிகொண்டு
குத்துமென்பார் யானைக்காலா லெத்துமென்பார்]
வெடிவைத்துச் சுடுவமென்பார் — ஒருவெட்டாய்
வெட்டுமென்பார் கையொடியக் கட்டுமென்பார்.

217. [முண்டைமக னிவன்முகத்தில் — கண்விழியு
மூக்குந்தெ றிக்கரெண்டு தாக்குமென்பார்]
மண்டலீகர் சமுகத்திலே — துச்சனனை
வாவென்ற ழைத்தாலும் பாவமென்பார்.

218. மதுரைச்ச மத்தானத்தில் — இவன்செய்த
வல்லமைசெய் வாரொருவ ரில்லையென்பார்
குதிரைக்க ளவுக்கெனவே — துணிந்துவந்த
கூற்றுவ னைக்கழுவி லேற்றுமென்பார்.

219. தரைபுகழ் துரைதொண்டைமான் — கோவிக்குஞ்
சனங்களைக் கையமர்த்தி மனம்பொறுத்துப்
பரமெனும் ஞானியாரே — கையிற்க
பாலமெங் கேயெடுத்த கோலமெங்கே.

220. சளமித்த னேவந்துதோ — கம்பளியிற்
சரியிருப் பாயிருந்த பெரியவரே
களவுக்குத் துணிந்தீரோ — நமக்கன்று
கையிற்றிரு நீறுதந்த ஐயரல்லவோ.

221. கட்டுமெட்டாய் வந்தீரே — உமக்கினிக்
கரையேற்ற மேதுகாணும் பரமார்த்தமே
வெட்டுமட்டும் தொழிலாச்சே — நீதிரிந்த
மேதைக்கென்று சொல்லிநெஞ்சி லேதைக்
குறித்தோ.

222. களவா யிரஞ்செய்யினு — நாமிவனைக்
கண்டிப்ப தில்லையென்று விண்டுரைத்துத்
தளவாய் சமுகத்திற்போய்ப் — பண்டாரஞ்
சனுப்பெற வேணுமங்கே யனுப்புமென்றார்.

223. தீரன்கு மாரத்தளவாய் — மனுநீதி
செலுத்திய ரசுசெய்யுங் கொலுத்தனிலே
ஆருந்த டைபண்ணமற் — கூட்டிச்சென்
றருமைய றிந்ததுரை திருமுன்விட்டார்.

224. விடுத்துச்ச முகந்தன்னிலே — நான்கொண்ட
வேசத்தை யுமுடித்த தோசத்தையுந்
தொடுத்துக்க தையாச்சொல்லி — நம்முடைய
துரகதந் திருடிய துரகனென்றார்.

225. துரையென்மு கத்தைப்பார்த்தே — எமிரா
துஞ்சத்தொழி லிட்டுவந்த லஞ்சக்கொடுக்கா
வரலாறு மூருமபேரும் — குலமுமுன்
வகையுஞ்சொல் லென்றுரந்த மகராசன்

226. சாமிநான் கள்ளனென்றே — ஒளியாமற்
சாதியுஞ்சொன் னேனடந்த சேதியுஞ்சொன்னேன்
சீமையு மென்பதியுஞ் — சொன்னவுடன்
சிரித்துக்கொண் டாரேசமான் கருத்தைக்கண்
டேன்.

227. மனங்கலங் காமனின்றேன் — உயிர்ச்சேதம்
வாராது குறைநம்மைச் சாராதென்றே
சனங்களைச் சாத்திரிகளை — நோக்கியிந்தச்
சல்லிக்குச் சிட்சையென்ன சொல்லுமென்றார்.

228. வேதநூ லறிந்தவர்கள் — மனுநீதி
விவகார மறிந்தெனக் [36]குவகாரமாய்ச்
சாதனைசெய் திருடனையே — காலுங்கையும்
தறிப்பது மனுநீதி குறிப்பதென்றார்.

229. குறித்ததைத் துரையறிந்து — களவுசெய்
கொலைகாரப் பொட்டிமகன் தலைபிழைத்தான்
சுறுக்குடன் காலுங்கையுந் தறித்தப்பால்
துரத்துமென் றேருத்தர முரைத்தனரே.

230. ஐயன்கு மாரத்தளவாய் — அரண்மனை
அடையாளம் வேணுமென்று [37]புடையிருந்த
கையம்பு தனையெடுத்துத் — தலையாரி
கையிற்கொ டுத்தாரேதோ பையச்சொல்லியே.

231. மறுத்தோருத் தரஞ்சொல்லாமல் — அரமனை
வாசலுக்கப் பாற்கொணர்ந்து பூசல்விளைத்தார்
பொறுத்தோரி ரவுவிழித்தாற் — சாளிகைப்
பொன்கட்டுஞ் செல்லக்கையைப் பின்கட்டுகட்டி

232. மணக்கோல முனக்கிதென்றே — எருக்கலை
மாலைக மூத்திலொரு காலைதரித்துப்
பிணைத்தகொ டுவைக்காளைபோல்—என்னைமுன்னும்
பின்னுந்தள்ளிக் கன்னங்கன்ன மென்னத்
தகர்த்துக்

[36] உவகாரம் — உபகாரம்.

[37] (பா-ம்) விடையமிட்டு.

233. கடைத்தெரு தனிற்கொணர்ந்து — பொரியுண்டை
கடலைய வல்பயறு விடலையுடன்
எடுப்பெடுத் தெனக்குத்தந்து — பாளையம்
இரையத்தி டுதிடென முரசறைந்து.

234. தெருக்களெல் லாங்கடந்து — கேட்டவர்க்குச்
சேதிசொல் லிச்சினத்து வைதுறுக்கியே
[38]விருக்கென்று டல்பதறவே — கோட்டைவாசல்
வெளியிற்றி ரும்பியொற்றைப் புளிகடந்தே.

235. இடருற்றென் போலத்திருடுங் — கள்ளருக்கென்
றீட்டிமுனை போலக்கழு நாட்டிநிற்குந்
திடருக்கப் புறமிருத்தி — அம்பட்டச்
சிலையானை யழைப்பித்தார் தலையாரியள்

236. பரிகாரிச் சிலையான்வந்து — காலுங்கையும்
பறிக்கும்பொ ருத்தறிந்து குறித்துக்கொண்டு
கருவிக திக்கத்தீட்டி — மாறுகாலுஞ்
கையும்வாங் கிவைத்தார் மெய்பதறவே.

237. தாளுங்க ரமுந்துணித்து — வைத்தவுடன்
தளர்ச்சியுற் றுக்கினைக் களத்துக்குளே
தோளுந்தொ டையும்பறந்து — மூர்ச்சைவந்து
சோர்ந்தும திமயங்கிச் சாய்ந்துவிட்டேன்.

238. திருப்பதி மலைதனிலே — பெருமாளைத்
தெண்டனிட்ட டிதொழுது தொண்டருடனே
இருப்பதுக் கிசையாமல் — தலத்தைவிட்
[39]டிழிந்தபா வம்நம்மை வளைந்ததென்றே.

239. புழுதியிற் கிடந்துருண்டு — அழுதழுது
புலம்பித்து ரும்புகுத்தி நிலம்பரண்டிக்

[38](பா—ம்) வெருக்கொண்டுடல்.

[39](பா—ம்) டெழுந்தபாவம்.

கழுதைபோற் காலுதைத்தே — ஊழ்விதி
கடக்கரி தென்றுநான் கிடக்கையிலே.

240. செறிந்தந்தப் பாளையத்திலுஞ் — [40]சந்தத்
திருக்காட்டுப் பள்ளியிலு. மிருக்கின்றபேர்
அறிந்தும றியார்கள்போல் — ஏதுக்கிந்த
ஆக்கினை வந்ததென்று கேட்பாரும்.

241. பெரியவர் போலவந்து— பாளையத்திற்
பிச்சையெடுத் துத்திரிந்த துச்சனனென்று
பரியாசஞ் சொல்வாரும் — வீணிலிந்தப்
பாவமு னக்கேனென்று நோவாரும்.

242. உருவழிந் தறிவிழந்து — நான்கிடந்த
ஒருநாளும் பத்துநாட் டிருநாள்போல்
வருவாரும் போவாரும் — என்னைக்கண்டு
மலைக்குஞ்ச னங்களுக்கு மிலக்கில்லையே.

விருத்தம்.

243. [நலந்திகழ்பல் வளங்களுமிக் கோங்கிடச்சொல்
வளஞ்சேரு நல்லூர் மேய
பொலந்தருதிண் மணிப்புயத்த னநந்தபற்ப
நாபனெதிர்ப் பட்டென் புண்ணும்
அலந்தலையு மாற்றுவித்தா னச்செயலு
மவனுரைத்த வழியே சென்று
சிலம்பனையான் செந்தூரிற் சேவித்துச்
சிறந்ததுவுஞ் செப்பு வேனே.]

சிந்து

244. தனித்துப் பரதவித்து — நான்கிடந்து
சாளையப் படுமந்த வேளையிலே
கனித்துவ ரிதழ்மடவார் — மதவேள்சங்
கரமூர்த்தி பெற்றெடுத்த வரபாலன்.

40(பா—ம்) அருள்சேர்.

245. திருநதிக் குலதிலகன் — சோலைதொறுஞ்
செல்லூர்வ ளஞ்செறிந்த நல்லூரான்
துரைகள்ச மத்தானத்திற் — கீர்த்திகொண்ட
சுப்பிரதீ பனநந்த பற்பநாபன்

246. சிறக்குங்கு மாரத்தளவாய் — [41]கொலுவினில்
திருவடி தேசத்தின் பருவஞ்சொல்லி
நிறக்குஞ்சி விகையேறி — மனுமுறை
நீதிமக ராசனந்தப் பாதையில்வந்தான்.

247. குருதியின் முழுகிக்கொண்டு — நான்கிடந்த
குறிப்பைக்கண் டேசிவிகை நிறுத்திக்கொண்டே
ஒருவர்து ணையில்லாமற் — கிடந்தவென்
ஊரேது பேரேது சீரேதென்றான்.

248. மகந்துதி ருப்பதியினன் — முன்னிருந்த
வாழ்வுமிப் போநடந்த தாழ்வுஞ்சொன்னேன்.
இகழ்ந்தொன்றுங் கூறுமலே — எண்ணெய்க்கும்
எலுமிச்சம் பழத்துக்கும் விலைகொடுத்தே

249. ஆருமற்ற பாவியிவனைப் — பரிகரித்
தனுப்பென்று சமுகத்திற் றனித்தழைத்துக்
காரியத் துடன்பேசிப் — பரிகாரி
கைக்குளொரு சாளிகைப்பொன் ரொக்கங்
கொடுத்தே.

250. அலமலித் திரங்காதே— காயத்தை
ஆற்றிக்கொண் டேதிருச்செந் தூர்க்குவந்தாற்
கலபமயிற்குமரவேள் — தருவனுன்
கையுங்காலு மென்றுசொல்லி மெய்யுரைத்துப்

251. புரவலர் தொழுஞ்சரணன் — சததளப்
பொற்பாவை சேரநந்த பற்பநாபன்

[41](பா–ம்) "கொலுச்சென்று திருமலிதேசத்தின்"

அரமனைக் கெழுந்தருளிச் — சென்றதற்பின்
அனைவோரு மெனைக்கண்டு மனதிரங்கி.

252. எண்ணெகொ திக்கக்காய்ச்சிப் — பதமறிந்
தெலுமிச்சம் பழங்கொண்டு வலுமிச்சமாய்ப்
புண்கருக வொத்தனமிட்டுக் — காலுங்கையும்
பொட்டுக்கம்பு போற்சுருங்கக் கட்டுமமைத்து.

253. மெய்யிற்பு ழுதிதுடைத்து — முகத்தினில்
வேர்வையுந் தீர்த்திரணப் பார்வைபார்த்து
நெய்யிற்பொ ரிக்கறியுடன் — பத்தியமாய்
நேருஞ்சம் பாவரிசிச் சோறுந்தந்தே.

254. ஆறேழு நாளைக்குளே — காயத்தை
ஆற்றியென் னுடம்பையுந் தேற்றிவிட்டார்
நூறுறு மிஞ்சினதெல்லாங் — கணக்கிட்டு
நொடிக்குளொ டுக்கிக்கொண்டேன் முடிப்புக்
கட்டிப்

255. பொதிவைத்துப் பிச்சையெடுத்துப் — பட்டசளம்
போதுந்த லைமுறைக்கும் போதுமென்றோர்
குதிரைசம் பாதித்துக்கொண்டே — னோர்பயலைக்
கூட்டிக்கொண் டேன்முகூர்த்தங் கேட்டுக்
கொண்டேன்.

256. அயனதெட் சணதிசைக்குள் — கதிர்வாரம்
அத்தநா ளிரவுற்ற சத்தமியிற்
பயணமென் றெழுந்திருந்தேன் — திருக்காட்டுப்
பள்ளிவிட்டுத் திருச்சிராப் பள்ளியில்வந்தேன்.

257. திருவானைக் காவுங்கண்டேன் — காவேரிச்
செலத்திற்கு ளித்தரங்கர் தலத்தில்வந்தேன்
பெருமானைத் தொழுதிறைஞ்சும் — வயிணவப்
பெரியோரைத் தெரிசித்து வரிசைபெற்றேன்.

258. உறையூர் வழிநடந்தேன் — அரமனை
ஓலையஞ்சற் காரரன்ன சாலைதோறுங்

குறைதீரப் பசியாறி — நடந்தெங்கள்
குலக்கள்ளர் வளர்சோலை மலைக்குள்வந்தேன்.

259. பழமுதிர் சோலைதொழுது — முச்சங்கப்
பாடலு வந்தசொக்கர் கூடலுங்கண்டேன்
கிழமுதிர் வடிவங்கொண்டே — குறத்தியைக்
கெஞ்சிய தெய்வமேயுன் தஞ்சமென்று

260. திருப்பரங் கிரியில்வந்தேன் — அதினுள்ள
செய்கையுஞ் சரவணப் பொய்கையுங்கண்டேன்
[42]பொருப்பர சிறகரிந்தோன் — பெற்றெடுத்த
புண்ணியம் போல்வந்த பெண்ணமுதை.

261. மணஞ்செய்த கோலங்கண்டேன் — அங்கிருந்த
வடிவேற் கடவுளை யடிதொழுதேன்
குணஞ்செய்து மனங்குளிர்ந்து — திருப்பரங்
குன்றுகடந் தொருமித்துச் சென்றுநடந்தேன்.

262. நடந்துவ ழியைத்தொலைத்துச் — சோலைதொறும்
நத்தூருஞ் சீவில்லி புத்தூர்கண்டேன்
அடர்ந்தவச் சாலைவழியே — வந்துகயத்
தாறுங்குற் றாலச்சிற் றாறுங்கண்டேன்.

263. திருநெல்வே லியில்வந்தேன் — பசுங்கழைச்
செடிவாழ் வேடநந்த வடிவாள்தன்
மருமலர்ப் பதந்தொழுதேன் — அனுதினம்
மறைபயில் சிந்துபூந் துறையுங்கண்டேன்.

264. விரிபுனல் பொருநைகண்டேன் — கோட்டையுடன்
விளங்குபா ளையங்கண் டுளங்குளிர்ந்தேன்
குருமணிச் [43]சிகரிவளர் — முத்தாலங்
குறிச்சியில் வந்தொருநாள் தரித்திருந்தேன்.

---

[42]பொருப்பரசிறகரிந்தோன் — இந்திரன்.

[43](பா-ம்) சிகரி சுற்றும்.

265. சந்தசல சாமியருளால் — எந்நாளுந்
தவறாத வாழ்வுபெற்ற கவிராயன்
கந்தசா மியைக்கண்டேன் — அவன்சொன்ன
கவித்வஞ்[44]செ விபருகி மகத்வம் பெற்றேன்.

266. சீமா னுபசரித்து — வயிற்றுக்குஞ்
செவிக்கும்வி ருந்துதந்த சவுக்யங்கொண்டு
கோமான் திருச்செந்திலான் — உம்பளக்கற்
குளமுங்க ளஞ்சியநெற் களமுங்கண்டேன்.

267. சீர்கொண்ட சீவைகுண்டத்தார் — வழிவந்து
சிகரிசூழ் ஆழ்வார்திரு நகரிகண்டேன்
பேர்கொண்ட திருக்கோளூர் — தென்திருப்
பேரையுங் கடந்துநல் லூரையுங்கண்டேன்.

268. சந்திர கலையைப்போலக் — குளிர்ந்திட்ட
சண்முகச் சாலையைக்கண் டுண்மகிழ்ந்தேன்
செந்திலம் பலமுங்கண்டேன் — வேற்படைச்
செட்டிதன் பணிவிடைச் செட்டியைக்கண்டேன்.

269. அங்கைமுகில் நிகர்கொடையான் — மஞ்சவாள்
அனுப்பர்கு லத்துனரயக் கினிப்பரியான்
எங்கள்வட்ட ராமேந்திரன் — நாலா
யிரமுடை யார்குளத்திற் பரவிச்செய்த.

270. வேலவன் பாலமேறி — இடம்வலம்
விலகாம லேநடந்தேன் நிலமகட்கு
மாலைபோ லேநிறைந்த — புனல்கொண்ட
வள்ளிவாய்க் கால்கடந்து மெள்ளநடந்தேன்.

271. ஆலைப்ப முனநெருங்கும் — புனற்றலை
அணைமடத் தினில்வந்து பனைமரத்தைக்

---

[44](பா-ம்) செவிகருதி, செவிக்குரைத்த.

காலுக்குட் பொருத்திக்கொண்டு — கிந்திக்கிந்திக்
கவரயர் மடம்வந்து [45]தவையாறினேன்.

272. மட்டவிழ் துணர்க்கடம்பன் — வேட்டைவெளி
வழியுமாண் டுகொண்டான் புளியுங்கண்டேன்
கொட்டகை வாசலுங்கண்டேன் — திருநாட்
கொண்டருளுஞ் செவ்வந்தி மண்டபங்கண்டேன்.

273. தெருவிற்சிங் காரமுங்கண்டேன் — செங்கனகத்
தேருஞ்சி றந்தமகா மேரெனக்கண்டேன்
இருபிறப் பாளரெல்லாஞ் — சஞ்சரிக்கும்
இடமுந்தெ ருநிறைந்த மடமுங்கண்டேன்.

274. பொய்யுங்க ளவுங்கொடுமை — யுங்கொலைசெய்
புன்மையும் விரும்பிரா னிம்மையிலே
செய்தபா வந்தீரக் — கடற்கரைச்
செந்தூர்த்த லத்துக்குள் வந்தேனே.

275. மூவரும் முனிவர்களும் — [46]அட்டதிக்கு
முதல்வர்[47]ப ராசரர் [48]முதல்வர்களுந்
தேவருந் தொழுதிறைஞ்சுங் — கடற்கரைச்
செந்தூர்த்த லத்துக்குள் வந்தேனே.

276. [49]வரைமுத்துங் [50]கமுகின்முத்துங் — [51]கதலியின்
மடல்முத்தும் [52]வளைமுத்துங் [53]கடலின்முத்துந்
[54]திரைமுத்துஞ் சொரிந்துநிற்குஞ் — சந்தமலைச்
செந்தூர்த்த லத்துக்குள் வந்தேனே.

---

[45]தவை-தகை. [46]அட்டதிக்குப்பாலகர்.
[47]தருமநூலார். [48]அதிகாரிகள். [49]மூங்கி லிற்பிறந்த முத்து.
[50]பூகத்திற் பிறந்த முத்து. [51]வாழையின் பூமுடியில் விளைந்த முத்து. [52]வலம்புரி முத்து. [53]பசுவின் பல்லில் விளைந்த முத்து. கடல் – பசு. [54]திரைமுத்து - கடலினிடத்தே இப்பி, மீன், நத்தை, முதலை ஆகிய இவைகளிடத்துப் பிறந்து அலைகளாற் கரை கொண்டுவந்து சேர்க்கப்பட்ட முத்துக்கள்.

277. சோலையுஞ் சாலையுங்கண்டேன் — சாலையிற்
சொன்னவரந் தந்தவையன் சந்நிதிகண்டேன்
[55]காலக்கொ டுவிடங்கொண்ட — கட்செவியைக்
கண்டதுண்டங் கண்டமயின் மண்டபங்கண்
டேன்.

278. (தாண்டும யின்மேல்வருங் — குமரற்குத்
தந்திகடி கொண்டிறந்த தையலைமுன்னுள்
தூண்டிய கரமுடைய — விநாயகன்
துணைமலர்ப் பதந்தொழு திணையிலதோர்.)

279. வில்வேடர் குலக்கொடிக்குங் — குஞ்சரிக்கும்
வேலைப்பி டித்தகையான் மாலையிட்டோன்
கல்யாணத் திருவாசல் — கண்ணாரக்
கண்டுடல் பூரித்துக் தெண்டனிட்டேன்.

280. [கள்ளவிழ் மலர்க்கடம்பன் — கோவிற்சி
கரமுமே லக்கோ புரமுங்கண்டேன்]
வள்ளியம் பலமுங்கண்டேன் — சந்நிதி
வாசலிற் சண்முகவி லாசமுங்கண்டேன்.

281. மடற்கடம் பணிபுயத்தன் — உமைபெற்ற
வரசுதன் குருபர னரசுசெய்யுங்
கடற்கரைச் சினகரத்தைக் — கண்ணாரக்
கண்டுடல் பூரித்துத் தெண்டனிட்டேன்.

282. சனகர்ச னற்குமாரர் — சனாதனர்
சனந்தர்மு தன்முனிவர் தினந்துதிக்குங்
கனகதெக் கணவாசல் — கண்ணாரக்
கண்டுடல் பூரித்துத் தெண்டனிட்டேன்.

283. புனற்கடற் கரைப்புரமும் — ஈழத்திற்
[56]புத்தளமட் டுங்[57]தெரியுங் கொத்தளமுங்

---

[55](பா-ம்)காலக்கொடுவிடம்.
[56]புத்தளம் — ஈழநாட்டுத் துறைமுகப் பட்டினம்
[57]தெரியும் — தெரியும்படி யுயர்ந்த.

கனத்த[58]ம ணற்புரிசையுங் — கண்ணாரக்
கண்டுடல் பூரித்துத் தெண்டனிட்டேன்.

284. மதிக்கதிர் போற்குளிர்ந்து — செந்தூரில்
வண்மைபெ றும்புகழ்போல் வெண்மைபெற்றுக்
கதித்தம ணித்திரள்களுங் — கண்ணாரக்
கண்டுடல் பூரித்துத் தெண்டனிட்டேன்.

285. முதுதமிழ் வழுதிமகள் — வாடிய
முகத்தைக்கண் டழகிய முகத்தைத்தந்த
குதிரைமு கத்தீர்த்தத்தால் — நமக்கந்தக்
குதிரைமு கத்தில்வந்த வினைதீர்க்கும்

286. வதனா ரம்பமெனவே — குணதிசை
வாசலிற் கடலாடி நேசத்துடன்
கதிதரு காசியிலும் — மிக்கான
கந்தபுட் கரணியில் வந்துபடிந்தே.

287. அயிரா வததீர்த்தந் — தன்னிலும்வந்
தாடிக்கொண் டேன்சுகிர்தந் தேடிக்கொண்டேன்
உயர்சந்த வரையைக்கண்டேன் — ஆறெழுத்தை
உச்சரித்துக் கிரிப்பிர தட்சணம்வந்தேன்.

288. வளங்கொள்தி ருச்செந்தூரில் — குருபரன்
வாழ்ந்திடுங் கோயில்வலஞ் சூழ்ந்துவந்தேன்
விளங்குதட் சணவாசல் — தன்னினின்று
வெள்ளிப்ப டியிறங்கி யுள்ளேசென்றேன்.

289. வசந்தமண் டபத்திற்சென்றேன் — ஐயன்சுக்ர
வாரக்கொ லுவிருக்கு நேரமென்றார்
(புசங்குவ டெனத்திளைப்ப — விம்மியுடல்
பூரித்து நின்றேயொரு பாரிசத்தில்.)

---

[58] மணற்புரிசை — மணல்மேடு.

290. கமலா சனன்வணங்கப் — பாதத்திற்
காத்திருந்து திருமால் தோத்திரஞ்செய்ய
இமையோர் வட்டஞ்சாய்ப்பக் — கந்தருவர்
இயக்கர்சித் தர்விசிறி யசைத்துநிற்பச்.

291. சந்திரன்வெண் குடைநிழற்றக் — கதிரவன்
தங்கவட்டம் பொற்பரிசை செங்கையிற்பற்றப்
பைந்தரு நிழல்தன்னில்வாழ் — மகபதி
பாலன வெண்கவரிக் காலசைப்பத்

292. தனதன டைப்பம்பிடிக்க — வருணன்
தாங்குகா ளாஞ்சிகொண்டு பாங்குநிற்க
அனலியு மருத்துவரும் — பொற்சரிகை
யாடைவி ரித்துப்பா வாடைவீச

293 அதிர்த்தபொற் கேடயங்கொண்டு — தென்றிசை
யாளுந்த ருமனுடை வாளெடுக்கத்
துதிக்கைநி ருதிதனுவுந் — தூணியுஞ்
சுமந்துபோர்க் கோலஞ் சமைந்துநிற்க

294. நாரதர் தும்புருவுடன் — வீணையின்
நாதச்சு ருதியிற்சங் கீதம்பாட
வீரவா ஞசூரன் — மெய்ப்பரதம்
விளங்கக்க ரங்கொடுமத் தளங்கொட்டவே.

295. தேவரம் பையர்நடிக்க — முகவீணை
தித்திசதி கூடுதொனி யொத்துமுழங்க
[59]மூவரு ரைத்ததமிழும் — பரியாக
முந்தநரி கொண்டுவந்த. [60]மந்த்ரிதமிழும்

296. [61]கீரனி சைத்தமிழுடன் — அருண
கிரிசொன்ன திருப்புகழ் தெரிதமிழுஞ்

---

[59] அப்பர், சுந்தரர், சம்பந்தர் பாடிய தேவாரம்.

[60] திருவாசகம். [61] திருமுருகாற்றுப்படை.

சீர்தளை பதச்சுவடு — சொற்சுவடு
சிறந்தவித் தைப்ரசங்க நிறைந்துநிற்க.

297. [62](முச்சுதந் தரார்களெல்லாம் — அன்பொடு
முன்னும்பின்னுந் துன்னிவெகு நன்னயத்துடன்
மெச்சுமறை யுபநிடதம் — விதிமுறை
விளம்பிடு துதியொலி கிளம்பிடவே.)

298. வானவர் முனிவரெல்லாம் — அவரவர்
வரம்புதப் பாமனிற்கப் பிரம்புகொண்டு
சேனைத்தி ரளொதுக்கியே — திருமுன்பு
செயவீர வாகுகட் டியமுரைக்கச்

299. சீரியற் றிறல்வீரர் — எண்மருஞ்
சிலைத்திறல் வீரர்க ளிலக்கர்களும்
பாரிடைத் தளத்துடனே — நூற்றெட்டுப்
படைத்தலை வருந்தொழு திடத்தினிற்கத்

300. தேவதுந் துமியதிரத் — திண்டிமம்
திமிலைக னகதப்பு முருடுபம்பை
தாவுதி ரைப்புணரிபோன் — முழங்குந்த
டாரித வின்முரசு பேரிகையுடன்

301. சல்லரி துடியிடக்கை — காகளந்
தாரைநா கசுரம் பூரிகைமுதற்
செல்லுரு மெனத்தொனிக்கப் — பானுகோபன்
செங்கையிற்பி டித்திசைத்த சங்குமுழங்கத்

302. தேனும்பா லும்போலவே — இதமிக்க
தெய்வக்கு லமகளும் வள்ளிக்கொடியும்
மானும்பி டியும்போலவே — மணிப்புய
வரையரு கினிலிருந் தரசுசெய்ய.

303. அருணனு தையமெனவே — மவுலிகள்
ஆறுந்தி ருமுகங்க ளாறுமிலங்கத்

[62] முச்சுதந்தரார் —.

102293

தருணம திப்பிளவுபோல் — நுதல்தொறுஞ்
சாத்துந்தி ரிபுண்டரக் [63]கீத்துவிளங்கக்

304. கருமணிச் சிலையனைய — புருவந்தொறுங்
கருணைசொ ரிந்திடுபன் னிருவிழியுங்
குருமணித் தொகைபதித்த — பொன்மகர
குண்டலமி லங்குபன்னி. ரண்டுகுழையுஞ்

305. சிவந்தக னிவாய்தொறும் — பவளத்திற்
சிறுமுத்தெ னநிரைத்த குறுநகையும்
தவழ்ந்தபு னலருவிபோன் — மார்பின்முத்துத்
தாழ்வடமு மாபரணக் கோவைகளும்

306. ஈராறு கரதலமுங் — கரங்களில்
எங்கணுங்கி டந்திலங்கு கங்கணமுஞ்
சூராதி பத்ம்முடியத் — தொடுத்தசெஞ்
சுடர்க்கதிர் வேலுமற்றப் படைக்கலமும்.

307. ஆடைக்கி சைந்தமருங்கும் — மருங்கினில்
அரைஞாணு நவமணி அரைவடமுங்
கூடக்கி டந்துதுவளச் — சரணத்திற்
குரவுக டம்புபரி புரமிலங்கச்

308. சிம்புட்கு ருளையெனவே — தாங்கிய
சிங்கத்தினி லமைத்த தங்கத்தவிசில்
உம்பர்க்க ருள்குமரவேள் — கொலுத்திரு
ஓலக்கஞ் செய்திருந்த கோலத்தைக்கண்டேன்.

309. வேத்திரம் பிடித்துக்கொண்டு — முன்புநின்ற
வீரவா குவைக்கண்டு நேரேசென்றேன்
தோத்திரஞ் செய்துகும்பிட்டேன் — பனைமரச்
சுமையாற்ற வுனக்கிது சமையமென்றார்.

310. கட்டியச் செயவீரன் — என்னைக்கண்டு
கண்காட்டிக் குளிர்ந்தமு கங்காட்டினன்

---

[63] கீத்து - கீற்று.

O-,892LKY,T
N48

கெட்டியாய்ச் சமுகத்திலே — காலைமெள்ளக்
கிந்திக்கிந்திக் கொண்டுசென்று சந்தித்தேனே.

311. சைவக்கு ழாத்துடனே — நெருங்கிய
சதுமறை வேதியர் துதிமுழங்குந்
தெய்வக்கொ லுவினிற்சென்றேன் — முருகனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

312. தானைப திக்குவீரன் — கொண்டுவந்த
தகடேறி நடத்துஞ்சண் முகராயனைச்
சேனைப தித்தலைவனைக் — குமரனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

313. கங்கைத ருகுமரனைச் — சரவணத்திற்
கார்த்திகைப்பெண் முலையுண்ட மூர்த்திதன்னைச்
செங்கைவ டிவேலனைக் — குருபரனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

314. புத்தியுனக் கீதெனவே — பிரமனைப்
புடைத்தோனை யுலகம் படைத்தோனைச்
சித்திரம யில்வீரனைக் — கடற்கரைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

315. காவற்க டவுண்முதலோர் — வணங்கிடு
கருணைக்க டலனைப்பன் னிருபுயனைச்
சேவற்கொ டிவீரனைக் — குடநாட்டுச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

316. விருப்பமங் கீகரித்து — வழங்கும்வி
சாகனைத் தெய்வானை பாகனைநான்
திருப்பரங் கிரியானைக் — குகனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

317. [சூரனை வாய்மலைக்க — வேற்படை
தொடுத்தோனைத் தேவர்சிறை விடுத்தோனைச்

சீரலை வாயுகந்த — கடவுளைச்
செந்திற்ப ழப்பொருளைச் சந்தித்தேனே.]

318. தருவாய் கனியெனவே — வந்தவுடன்
தந்தைதா யாசைபழ நீதானெனத்
திருவாவி நன்குடிவாழ் — முதல்வனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

319. கருவே ரறத்துணித்தே — அடியவர்
கன்மவி னைதவிர்க்கு நின்மலனைத்
திருவே ரகத்தினில்வாழ் — சேவகனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

320. குறுமுனிக் கருள்புரிந்த — [64]குழகனைக்
குன்றுதோ றுடியெங்கு நின்றோனைச்
சிறுகண்ணும் மதக்களிற்றின் — துணைவனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

321. பருத்தமு லைக்குறத்திசேர் — கணவனைப்
பழமுதிர் சோலைமலைக் கிழவோனைத்
திருத்தணி மலைபுரக்கு — மொருவனைச்
செந்திற்ப ழம்பொருளைச் சந்தித்தேனே.

322. சந்தித்து விழிகுளிர்ந்து — நவமணித்
தண்டைப்ப தத்தைமுன்னே தெண்டனிட்டுச்
சிந்தித்தென் குறைபகர்ந்து — தியானித்துத்
தினைப்போது வணங்கினேன் மனப்பூர்வமாய்ப்

323. பரவசத் துடன்வணங்கி — நித்திரைவந்து
படுத்தவர் போற்கிடந்தே னடுச்சபையில்
சரணிலே சரண்புகுந்தேன் — முருகனென்
[65]தன்மானி தனைக்கண்டு சன்மானித்துத்

[64](பா-ம்) குமரனைக்.

[65](பா-ம்) தன்மானம்.

324. துச்சனஞ் செய்துதிரிந்து — வந்துநம்மைத்
தொழுந்திரு டாவினி யெழுந்திருடா
தற்செய லாகவளரக் — காலுங்கையுந்
தந்தோமென் றுகனவில் வந்தோமென்றார்.

325. தெரிசனங் கண்டுவிழித்தேன் — காலுங்கையுந்
திருந்திமுன் போலவளர்ந் திருந்ததிறற்
கிரிதனில் வேல்விடுத்தோன் — சமுகத்திற்
கிடந்தேன் நானெழுந்து நடந்தேனே.

326. நடந்தவ திசயங்கண்டு — கொண்டாட
நாமோத ரம்பிரமன் தாமோதரன்
தொடர்ந்தெங்குந் தேடினுங் — காணரிய
சோதிப்பெ ருமையையா னேதுசொல்வேன்.

327. கையுங்கா லும்வளர்த்தே — யெனைவளர்த்த
கந்தனைத் திருச்செந்தி லெந்தைதனைத்
தெய்வயா னைத்தாயை — மான்பெற்ற
தேனைத்தொ ழுதிறைஞ்சி ஞானம்பெற்றேன்.

328. கலியுகந் தனிலெனக்குச் — செந்தூரிற்
காலுங்கை யும்வளர்ந்த [66]மாலிமைகண்டு
வலியவந் துபசரித்துத் — தலத்தார்
வரிசைகொ டுத்தெனைக்கண் டதிசயித்து.

329 வண்மைகொண் டாதரித்துக் — காவியால்
வட்டமொன்று மட்டமொன்று கட்டளையிட்டுச்
சண்முகன் கைங்கிரியத் — திருப்பணிவி
சாரிப்போன் என்றெனக்கோர் பேருமிட்டார்.

330. பணிவிடை மறவாமற் — கொலுத்திருப்
பணிமுற்றும் பொன்னினவ மணியிற்செய்து
துணிவுட னேசெந்தூரிலே — கிளைவாழ்ந்து
சூழ்ந்துசி றந்திருக்க வாழ்ந்தேனே.

---

[66](பா-ம்) மாலுமை.

331. ஆறுமு கங்கள்வாழி — செங்கையிற்பொன்
அயில்வாழி சேவற்கொடி மயில்வாழி
பூருவவு பேந்திரன்பெற்ற — தெய்வானைப்
பொன்னும்பொன் மான்பெற்ற மின்னும்வாழி.

332. வீரவா காதியர்வாழி — இலட்சத்தெட்டு
வீரர்ப டைத்தலைவ ராரும்வாழி
பாரிடம் முற்றும்வாழி — [திருச்செந்திற்
பதிவாழி சண்முகன்சந் நிதிவாழி.

333. வேலாயு தன்கருணைசேர்] — தலத்தார்
மிக்கதா னிகர்கரு ணிக்கர்வாழி
மாலோன்ம ருகனை — குருபரன்
வாழிநீ டுழிதமிழ் வாழிவாழி.

ஐந்தருப் பொலியுமுத் தாலங் குறிச்சிக்
கந்த சாமிக் கவிஞ னுரைத்த
திருச்சேந் தூர்நொண்டி நாடக முற்றும்.

அருஞ்பதவுரை அகராதி.

அதர்—வழி
அரி—மூங்கில்
அர்றே—அடே
அலந்தலை—துன்பம்
அல்—இருள்
அளப்பு—யோசனை
அனலி—தீக்கடவுள்
ஆடகம்—பொன்
ஆடல்—வெற்றி
ஆரம்—முத்து
ஆலை—கரும்பாலை, கரும்பு
இடைதல்—உழலல்
உக்களம்—காவலாளிகள் இரவில் தங்குமிடம்
உத்தளமாக—தாளாக
உளவு—உட்காரியம், துப்பு
ஊதாரி—அழிம்புக்காரன்
ஏதம்—கேடு, குற்றம்
ஒஞ்சி—வெட்கப்பட்டு, கூசி
கதலிகை—கொடி
கதலமிதல—ஆட அசைய
கணி—வேங்கை
கமலாசனன்—பிரமன்
கலசமாடி—சட்டிபானைகளை யுருட்டி
காங்கு—நீலம்
காசலை—உரித்து
காசுதாரி—காசுக்கள்ளன்
கீசகம்—மூங்கில்
குப்பாயம்—அங்கி
குமயத்து—அழிவுசெய்து
குறண்டி—ஓர் முட்செடி
குருளை—குட்டி
குறுநகை—சிறிய பற்கள்
கேடயக்குழி—கெட்டநீர்க் குழி கேடு-அயம்-குழி (அயம் - நீர்)
கொய்யுளை—குதிரை
சகனம்—ஆசனம்
சங்கை—கனம், மதிப்பு
சட்டாள—காற்றிலுங்கடிய
சட்டய—சண்டாள
சததளம்—தாமரை
சராளம்—போர், நேர்வழி
சல்லடம்—குறுங்காற்கச்சை
சல்லா—ஒருவகைப் புடவை
சல்லி—துட்டன்
சனு—உதவி, நன்மை
சாணிமார் — குதிரை பயிற்றுவோர்
சாதி—தேக்கு
சிகரி—கோபுரம்
சிகி—மயில்
சிம்புள்—சரபப்பட்சி
சிவிகை—பல்லக்கு
சிறை—காப்புப்பொருள்
சினகரம்—கோவில்
சுழிகை—சுருள்
சூளியம்—அரமியம், அரமனை
செச்சை—வெட்சி, நீறு

செயத்தம்பம்-வெற்றிக் கம்பம்
செய்யான்—பெரும்பூரான், சேடா
சேகிலி—வாழை
தசுக்கரம்—திருடு
தவன்—மணாளன்
தாழை—தென்னை
திருவோலக்கம்—கொலு
துஞ்சம்—அசுரம்
துணர்—பூங்கொத்து
துண்ட—துணிக்க
துயம்—கொடி
துறண்டி—துறட்டி,
தேசி—குதிரை
தேறல்—தேன்
தொங்கத்தனம்-கள்ளத்தனம்
தொங்கவாண்டு—கள்ளன்
தோளாசம்—தோள்வலிமை
நாட்டியச்சிறை-நடனமாது
நிசான்—கொடி
நிசி—இரவு
பக்கொடுபக்கொடு-பிடிபிடி
பஞ்சரித்தாள்—விடாது துன்புறுத்தினள்
படங்கு—கூடாரம், மறைவு
பள்ளயாம்—உண்கலம், தாம்பாளம்
பாட்டவணை-கால் பிடித்தல், காலுக்கணையாதல்
பாளாசம்—குதிரைக்கால் கட்டுங்கயிறு
பிரசம்—தேன்கூடு
பிரவர்த்தகம்—செயல்
பிழி—தேன்
பீழை—துன்பம்
புதை—புதுமை, மறைவு
பூணித்த—சுட்டிய
பூருவம்-முதன்மை, முயற்சி
பூவை—காயா
மகபதி—இந்திரன்
மட்டு—கள், தேன்
மதலை—கொன்றை
மதிப்பிளவு—மூன்றாம்பிறை
மவுலிகள்—முடிகள்
மாலிமை } மருட்கை,
மாலுமை } வியப்பு
முறுக்காணி—சுரியாணி
மேதை—மேன்மை
ரட்டர்—இரட்டிநாட்டார்
வசீருகள்—மந்திரிகள்
வண்டுறுக்கி—வண்டுபோ லிரைந்ததட்டி
வாமி—வாமசமயத்தான்
வாரம்—கடல்
விடலை—தேங்காய்ச்சில்
வித்தகம்—நன்மை,
விமலம்-அழகு, மாசின்மை
விரான—வீரியமான
வேத்திரம்—பிரம்பு

இந்நூலுட் பயின்றுவரும் முக்கியமானவர்கள் பெயர்களும் சரித்திரக் குறிப்பும்.

1. அனந்தபற்பநாபன்:— (பா. 245, 251) இவர் இந்நூல் ஆசிரியரை ஆதரித்த வள்ளல்களில் ஒருவர் ஆவர். இவரது தந்தையார் சங்கரமூர்த்தி. திருநதிக் குலத்தார். ஊர் நல்லூர். இவர் திருவடி (திருமலி) தேசத்துக்கு ஒரு பொறுப்புள்ள அதிகாரியாக விருந்தவர். இவரைக் குறித்து

"எந்தக்கா லமுநல்லூ ரனந்தபற்ப நாபநன்று யிருக்க வேண்டும். வந்தக்கா லவன்றனக்கே மாறுத பெருவாழ்வு வரவே வேண்டுப், பந்தக்கால் போல்வளர்ந்து பருத்திருக்கு முலோபர்தமைப் பாடி யன்ஞர், தந்தக்கா லென்னதரா திருந்தக்கா லென்னசொல்லும் தரணி யோரே" என ஓர் பழஞ் செய்யுளும் உள.

2. அரங்ககிட்ண முத்துவீரப்ப நாயகர்:— (பா. 119.) மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் இவரும் ஒருவர். காலம் கி. பி. 1682-1689. இவர் தந்தையார் சொக்கநாத நாயகர் (13). தாயார் இராணி மங்கம்மாள். மனைவியார் முத்தம்மாள். மகன் விசைய ரங்க திருமலைச் சொக்கநாத நாயகர். இவர் இளமையிலேயே நோய்வாய்ப் பட்டு வைசூரியினுல் இறந்தார். இவரை ஏகதார விரதன், சாதி மதம் வேறுபாடின்றி நீதி செலுத்திய மன்னன் எனச் சரிதக்காரர் கூறுவர்.

3. இரகுவீர ராமக் கட்டபொம்மு:— (பா. 128) இவருக்கு இரகுவீர பாண்டியக் கட்டபொம்மு எனவும் பெய ருண்டு போலும். பாஞ்சாலங்குறிச்சியை அரசு செய்த குறுநில மன்னருள் ஒருவர். காலம் கி. பி. 1709—1736. இந்நூலிற் கூறப்படும் தஞ்சாவூர் முற்றுகையில் மதுரை யரசர்க்குத் துணைப்படை யனுப்பி வைத்தவருள் இவரும் ஒருவர்.

4. இராயத் தோண்டைமான் :— (பா. 127, 159, 162, 210, 219) மதுரை நாயக்க அரசரின் தோழர். இந் நூலிற் கூறப்படும் தஞ்சாவூர் முற்றுகையைக் கூடவிருந்து நடத்தியவர்.

5. கந்தசாமிப் புலவர்:— (பா. 265-266) இந் நூல் ஆசிரியர். முகவுரையுள் இவரைக்குறித்துக் கூறப்பட்டுள்ளன.

6. குமாரசாமி அதிகாரி :— (128) இவர் பாஞ்சாலங் குறிச்சியில் அரசாட்சி செய்த இரகுவீர ராமக் கட்ட பொம்முவின் காலத்தில் வாசற் பிரதானியாக இருந்தார். மதுரை நாயக்க அரசர் தஞ்சாவூரை முற்றுகையிட்ட போது பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து அனுப்பிய துணைப் படைக்குத் தலைவனாகச் சென்றவர்.

7. குமாரத் தளவாய் :— (பா. 122, 123, 129, 157, 223, 230.) இவர் மதுரை அரசர் விசையரங்க திருமலைச் சொக்கநாத நாயகர் காலத்தில் படைத் தலைவனாக விருந்தவர். அவ் வரசனின் கட்டளைப்படி தஞ்சாவூரை முற்றுகையிட்டார். இவர் தந்தையார் தளவாய் நரசப் பையன். குலம் வேதியன். இது இந்நூற் செய்யுள் 123ல் "பார்மெச்சுஞ் சதுர்வேதன்" எனக் கூறப் படுதலா லறியக் கிடக்கிறது. "நிலைகொண்ட கீர்த்தி யழகப்ப ராய னிறைகொலுவில், கொலைகொண்ட பாதகன் தென்மலை வன்னியன் கோட்டைக்குளே, அலைமண்டி லங்கையி ராவணன் சேனை யழித்ததுபோல், தலைகொண்டு போகின்றுனையோகு மாரத் தளசிங்கமே" என இவரைக் குறித்து ஓர் பழம் பாடலும் உள.

8. கேப்புலி :— (பா. 31) கற்பனைப் பெயர். கதா நாயகனாகிய நொண்டியின் தந்தை. கீதத் தமிழாளன் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது இந்நூலில்.

9. கோசிக நரபாலன் :— (பா. 115) இப்பெயர் எக்கோசி (Ekoji) என்னும் பெயரின் திரிபு. இவர் தொடக்கத்தில் பீச்சப்பூர் சுல்தானிடம் படைத் தலைவனாக விருந்தார். அச்சுல்தான் இறக்கவும் தஞ்சாவூரில் அவன் ஆதரவில் அரசு செய்து வந்த நாயக்க மன்னனை வெங்கண்ணா என்னும் வேதியன் துணைக்கொண்டு தள்ளிவிட்டுத் தானே கி. பி. 1674ல் அரசனானார். தஞ்சாவூரில் மராட்டியருடைய அரசை நிலைநாட்டிய முதல் அரசன் இவர். பான்சிலே குடும்பத்தைச் சேர்ந்தவர். பெரிய சிவாசியினுடைய (Half brother). மாற்றாந் தகப்பன் மகன். இவருடைய பெயர் வெங்கோசி (Venkoji) எனவுஞ் சரித்திரங்களில் கூறப்படுகின்றது.

10 சங்கரமூர்த்தி :— (பா. 244) இவர் இந் நூலாசிரியரை ஆதரித்துவந்த அநந்த பற்பநாப வள்ளலின் தந்தையார். ஊர் நல்லூர். திருக்குற்றாலக் குறவஞ்சியில் கோயிற்கட்டளை நிலங்களின் விவரங் கூறுமிடத்துச் செய்யுள் 80-ல்

"நானில மும்புகழ் தாகந்தீர்த் தானுடன்
நல்லூர் வருசங்க ரமூர்த்தி கட்டளை"

எனக் குறிப்பிடப்படுகிறார். இவரை "வெள்ளோலைச் சங்கரமூர்த்தி" எனவுங் கூறுவர். இவ் வெள்ளோலைக் கதையொன்று தென்னாட்டில் இன்றும் நிலவி வருகிறது.

"சங்கரமூர்த்தி இளமையில் ஓர் கிராமக் கணக்கனாக விருந்தார். அக் காலத்தில் பனை ஓலையை வாரிச் செய்யப்பட்ட ஏடுகளிற்றான் கணக்குகள் தயாரிக்கப் பட்டு வந்தன. கணக்குகள் தயாரிக்கு முறையும் அவைகளைச் சர்க்கார் நிலையங்களில் அதிகாரிகள் வசம் ஒப்புவிக்கும் முறையும் இக்காலத்தில் நடப்பதுபோலன்று. கணக்கன் சகல கணக்குகளுக்கும் ஒரு படி (பிரதி) தயாரித்துக் கொள்ளவேண்டும். அக்கணக்குகளைக்

கொண்டுபோய்ச் சர்க்கார் தலைமை நிலையத்திலுள்ள எழுத்தாளர் முன்பு வாசித்து ஒப்புவிக்கவேண்டும். அவ்வாறு ஒப்புவிக்கும்போது அந்த எழுத்தாளர் தம் கைப்பட ஒரு படி எழுதிக் கொள்வார். இதுதான் இக் காலத்தில் நடந்துவரும் சமாபந்திக்குப் பதிலாக அக் காலத்தில் இருந்த முறை. இவ்வாறு கணக்குகளை ஒப்புவிக்கும்படி ஓர் ஆண்டில் தலைமை நிலையத்துக்குச் சென்ற சங்கரமூர்த்தி தன்னால் தயாரிக்கப்பட்ட கணக்குகள் இருந்த மூட்டையை ஊரில் விட்டுவிட்டு வேறொரு மூட்டையுடன் தலைமை நிலையம் போய்ச் சேர்ந்தார். இவருடன் வந்த மூட்டையில் கணக்குகள் எழுதுவதற்காகப் பனை யோலையை வாரிச் செய்யப்பட்ட ஒன்றும் எழுதாத வெற்றேடுகள்தான் இருந்தன. இத் தவறை அவர் முதலில் தெரிந்து கொள்ள வில்லை. எழுத்தாளர் முன்பு கணக்குகளை எடுத்து வாசிக்கத் தொடங்குகையில்தான் கண்டார். எழுத்தாளரோ ஏடும் எழுத்தாணியுமாக எழுதுவதற்குத் தயார் செய்துகொண்டு எதிரே உட்கார்ந்திருந்தார். அந்நிலையில் உண்மையை விளம்பினால் பெரிய பொல்லாப்புக்கு இடமுண்டாகும் என்று பயந்த சங்கரமூர்த்திக்கு ஓர் அளப்புத் தோன்றிற்று. மூட்டையிலுள்ள வெற் றேடுகளில் ஒன்றை எடுத்துக் கையிற் பிடித்தார். அதிலெழுதப்பட்டிருப்பதைப் பார்த்து வாசிப்பதாகப் பாவனை செய்துகொண்டே அவர் ஒப்புவிக்க வேண்டிய சகல கணக்குகளையும் விவரங்களையும் மனப் பாடமாகச் சொல்லிமுடித்தார். எழுத்தாளரும் வாசித்தபடியே எழுதி முடித்தார். இந்த நிகழ்ச்சியைத் தொடக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த மற்றொரு கணக்கன் தன்னையும் மறந்து கொல்லெனச் சிரித்து விட்டார். உடனே அவர்மேல் கச்சேரியை இகழ்ச்சி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. அவர் உண்மையைக் கூறித் தப்பித்துக்கொண்டார். பொய்க்கணக்குகள் சர்க்காருக்குக் கொடுத்த தாகச் சங்கரமூர்த்தி சிறையில் அடைக்கப்பட்டார். என்றாலும் தளரா மன வுறுதியுடன்

உண்மையை எடுத்துரைத்தார். தன் வீட்டிலிருக்கும் கணக்குகளையும் அதிலுள்ளவற்றையும் இப்போது தன்னால் சொல்லப்பட்டு எழுத்தாளரால் எழுதப்பட்டதிலுள்ள வற்றையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எள்ளளவும் வேறுபாடு இருக்கா தென்றும், தான் குற்றவாளி யல்ல வென்பது தெளிவாகு மென்றும் மேலதிகாரிகளிடம் விண்ணப்பஞ் செய்துகொண்டார். அதிகாரிகளும் அவ்வாறு செய்தனர். அவர் சொன்னவை முற்றிலும் உண்மையாக விருந்தன. அதுமுதல் அவருக்கு "வெள்ளாளைச் சங்கரமூர்த்தி" எனப் பெயர் வழங்கலாயிற்று. அக் காலந்தொட்டு நாட்டிலும் "தம்பி வெள்ளோலை வாசிக்கிறான்" என்பது ஓர் பழமொழியாக நிலவி விட்டது. சங்கரமூர்த்தியின் ஞாபக சக்தியையும் மன வுறுதியையும்அதிகாரிகள் வியந்து அவரை ஊர் மணியமாக நியமித்தனர். பின்னர்ப் படிப் படியாக அவரது திறமையால் ஊர் மணியத்திலிருந்து தரப்பு மணியம் ஆகியும் அதிலிருந்து நாட்டுமணியம் ஆகி யும் முடிவில் சீமை மணியமும் ஆகிச் சர்க்காருக்குங் குடிகளுக்கும் பலவித நன்மைகளைச் செய்து புகழுடன் மிக்க செல்வ வந்தரா யிருந்தார். இவர் 'நப்போல் வளை' என்னும் முதுமொழிக் கிணங்கத் தன் சுற்றத்தாரிற் பலரைக் கிராமக் கர்ணங்களாகவும் கிராம முன்சீபுகளாக வும் ஆக்கி வைத்தார். அவ்வாறு ஆக்கப் பெற்றவர்களின் வழியினர் பல கிராமங்களில் இன்றும் வேலை பார்த்து வருகிறார்கள்" என்ப.

(ஊர்மணியம், தரப்பு மணியம், நாட்டுமணியம், சீமை மணியம், என்னுஞ் சொற்கள் தமிழ் நாடு அன்னியர் ஆட்சிக்கு உள்ளாவதற்கு முன்பு சர்க்கார் அதிகாரி களுக்கு வழங்கிவந்த பெயர்கள். இவைகள் முறையே இக்காலத்தில் வழங்கும் கிராம முன்சீபு, ரெவின்யூ இன்ஸ் பெக்டர், தாசில்தார், கலெக்டர் என்னும் உத்தியோகங் களைக் குறிப்பதாகும்.)

11 சாகோசி:— (பா. 110, 116, 117) இந்நூலிற் கூறப்படும் தஞ்சாவூர் முற்றுகையின்போது அங்கு அரசு செய்திருந்த மராட்டிய மன்னன். இப்பெயர் பூண்டு தஞ்சாவூரை யாண்ட மராட்டிய மன்னர்கள் மூவர். இந்நூலிற் கூறப்படும் சாகோசி கி. பி. 1688—1711வரை ஆட்சி செய்தவர்.

12. சேகவீரராமஎட்டமன்:— (பா. 127.) எட்டையாபுரத்திலிருந்த சமீன்தாரர்.

13. சேமன்:— (பா. 213) களவுத் தொழிலிற் கைதேர்ந்தவன். இவன் அத்தொழிலை திறம்படச்செய்து முடிக்கும் முறைகளை ஒரு நூலாக எழுதிவைத்தவன். இந்நூல் பாட்டு 213ல்

"களவுக்குச் சேமனென்பார் — சேமனிவன்
காணுக்குப்பற் றுன்களவு நூலுக்கென்பார்"

எனவும், சீதக்காதி நொண்டி பா. 17—18ல்

"நாண விதக்களவும் — மாய
நஞ்சுக ளாகிய வஞ்சனையும்
மாண பரன்சேமன் — கற்று
வைத்துப்ப துக்கிய பொத்தகமும்
அகலாத வித்தையெல்லாம் - படித்-தாளானேன்"

எனவும் இவன் கூறப்படுகிறான்.

14. சோக்க நாதேந்திரன்:— (பா. 119) இவர் மதுரைத் திருமலை நாயகருக்குப் பேரனும் அவர் மகன் (முத்து) அளகாத்திரி நாயகருக்கு மகனும் ஆவர். இவருடைய மனைவியார் இராணி மங்கம்மாள். மகன் அரங்க கிட்ணமுத்து வீரப்ப நாயகர். இவருடைய ஆட்சிக் காலம் கி. பி. 1662—1682. இந்நூலிற் கூறப்படும் தஞ்சாவூர் முற்றுகையை நடத்திய விசையரங்க திருமலைச் சொக்கநாத நாயகர் இவருடைய பேரன். இச் சொக்கநாத நாயகர் தஞ்சையில் (கி. பி. 1630—1670

வரை) அரசாண்ட விசைய ராகவ நாயகருடைய மகள் மங்கம்மாளை மணஞ் செய்துகொள்ள விரும்பினர். பெண் வீட்டார் இணங்கவில்லை. அதனல் அப் பெண்ணைப் போர் முகத்தாற் கொள்ள விரும்பித் தஞ்சாவூரின்மேல் போர் தொடுத்தார். போரில் தன் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் மாளுவதைக் கண்ணுற்ற மங்கம்மாள் தன் தாதிமார் சிலருடன் வெளியேறி வந்து சொக்கநாத நாயகருக்கு ஓர் தூது அனுப்பினள். அதில் தன் பொருட்டாகப் பல்லாயிர வுயிர்கள் மாளுவதைத் தான் விரும்பவில்லையென்றும், மணம் செய்து கொள்ளலாமென்றும், போரை நிறுத்தும்படிக்கும் கேட்டுக்கொண்டாள். சொக்கநாத நாயகரும் அவ்விதமே போர்த் தலைவர்களுக்கு ஆக்ஞை அனுப்பினர். ஆனல் அரசரின் ஆணை போர்க்களம் போய்ச் சேருவதன்முன் சண்டை முடிந்துவிட்டது. விசைய ராகவ நாயகரும் அவர் மகன் மன்னாருவும் போரில் மடிந்தார்கள். தஞ்சாவூரில் அந்தப்புரத்திலிருந்த மகளிர் அனைவரும் தீப்புகுந் திறந்தனர். இதைக் கேள்விப்பட்ட சொக்கநாத நாயகரும் மங்கம்மாளும் அங்குச் சென்று இறந்தவர்களுக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களை முடித்தார்கள் என்பர் ஒரு சாரார். சொக்கநாத நாயகர் விழைந்த பெண் விசைய ராகவ நாயகருடைய பேத்தி. போரில் விசைய ராகவனும் மகன் மன்னாருவும் இறந்ததைக் கேள்விப்பட்டதும் அந்தப்புரத்து மகளிர் அனைவரும் தீக்குளித் திறந்தனர். தஞ்சாவூர் நாயக்க வரசர் வழி இத்துடன் முடிந்தது என்பர் இன்னொரு சாரார். விசைய ராகவனும் அவர் மகன் மன்னாருவும் தங்கள் தோல்வியை முன்னுணர்ந்து அந்தப்புரத்தை வெடிமருந்தால் நிரப்பிக் கொளுத்திவிட்டுப் பிறகு போரில் மடிந்தார்கள். இதில் தப்பிய பட்டத்தரசியும் மகன் செங்கமல தாசனும் பீச்சப்பூர் சுல்த்தான் உதவியால் மறுபடியும் தஞ்சையை ஆண்டார்கள். பீச்சப்பூர் சுல்தான் இறக்கவும், அவனுடைய படைத் தலைவன் எக்கோசி செங்கமலதாசனைத் தள்ளிவிட்டுத்

தானே தஞ்சைக்கு கி. பி. 1674ல் அரசனுனன் என்பர் மற்ெருரு சாரார். எது எப்படியிருப்பினும் தஞ்சைக்கும் மதுரைக்கும் எற்கனவே பகையுண் டென்பதைக் காட்டவே சொக்கநாத நாயகர் இந்நூலில் இணைக்கப் பட்டுள்ளார்.

15. நரசப்பன் :— (பா. 122) இந்நூலில் இவரைத் தளவாய் நரசப்பன் எனக் கூறியிருப்பினும் சரித்திரங் களில் இவருடைய பெயர் தளவாய் நரசப்பையன் என்றே சொல்லப்படுகிறது. மதுரையில் இராணி மங்கம்மாள் (1689—1704) ஆட்சியில் படைத்தலைவனாக விருந்தார். கி. பி. 1691ல் சேதுபதியால் தூக்குத் தண்டனை யடைந்த மெல்லோ (**Father Mello**) என்னும் பாதிரியாரை இவர் விடுவித்தார். கிழவன் சேதுபதி (கி. பி. 1674—1710) திருச்சிராப்பள்ளியைக் கொள்ளையடிக்க முயற்சி செய்கை யில் அவ்வாறு செய்யாமல் தடுத்துவிட்டார். இவரைக் காண வந்த புச்செட்டு (**Father Boochet**) என்னும் பாதிரியாருக்கு வேண்டுவன கொடுத்து மதிப்புடன் அனுப்பிவைத்தார். திருவாங்கூர்ப் படையை முறியடித்து மதுரைக்குக் கப்பம் கட்டும்படி செய்தார். கி. பி. 1700ல் தஞ்சையில் இருந்த மராட்டிய மன்னனைத் தோற்கடித்து அவ் வரசின் ஒரு பாகத்தை மதுரை ஆளுகைக்குட் கொண்டுவந்தார். கி. பி. 1701ல் மதுரை அரசர்க்கும் சேதுபதிக்கும் நடந்த போரில் இவர் உயிர் துறந்தார். இவருடைய மகன் குமாரத் தளவாய் இவருக்குப்பின் மதுரைப் படைக்குத் தலைமை பூண்டார் என்பர்.

16. பணிவிடைச் செட்டி :— (பா. 268) இவரது இயற்பெயர் தெரியவில்லை. ஊர் செந்திலம்பலம். அங்கு நொண்டி இவரைச் சந்தித்தான்.

17. பொன்னப்பன் :— (பா. 189) சீகாழியூரன். இவர் கதா நாயகனாகிய நொண்டியின் தோழன்.

18. மகந்து :— (பா. 248) திருப்பதி மலையிலுள்ள மகந்து.

19. மதப்புலி :— (பா. 43) கற்பனைப் பெயர். கதா நாயக னாகிய நொண்டியின் பெயர்.

20. வட்ட ராமேந்திரன் :— (பா. 269) இவர் கன்னடிய மரபினர். மைசூரார் தென்னாடு முற்றிலும் ஆட்சி செய்த காலத்தில் இருந்த ஓர் சிறந்த தலைவன். இவரை—

"அங்கைமுகில் நிகர்கொடையான் — மஞ்சவாள்
அனுப்பர்கு லத்துரையக் கினிப்பரியான்
எங்கள்வட்ட ராமேந்திரன் — நாலா
யிரமுடை யார்குளத்திற் பரவிச்செய்த
வேலவன் பாலமேறி — இடம்வலம்
விலகாம லேநடந்தேன் — திருமகட்கு"

என, இந்நூலிற் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. சீவைகுண்டம் தாலூகா வட பகுதியில் செக்காரக்குடி, உமரிக்கோட்டை திம்மராசபுரம், பாரைக்கூட்டம் என்னும் ஊர்களிலுள்ள கன்னடிய மரபினர்களுக்குள் இப்பெயர் சிறப்பாக வழக்கி லிருந்து வருகின்றது.

21. விசையரங்க திருமலைச் சோக்கநாத நாயகர் :— (பா. 101, 121, 129) மதுரைச் சீமையை அரசாட்சி செய்த நாயக்க மன்னர்களில் இவரும் ஒருவர். காலம் கி. பி. 1704—1731. இவர் தந்தையார் அரங்க கிட்ண முத்து வீரப்ப நாயகர். தாயார் முத்தம்மாள். இவர் தாய் வயிற்றி லிருக்கும் போதே இவரது தந்தையார் வைசூரி வாய்ப்பட்டு இறந்தார். தாயாரும் இவர் பிறந்த நாலாம் நாள் பன்னீரைக் குடித்துச் சன்னியினால் தனது நாயகன் சென்ற விடத்தை நாடிச் சென்றார். ஆகவே இவரது பாட்டியாராகிய இராணி மங்கம்மாளே இவருக்குத் தக்க வயது வரும் (கி. பி. 1689—1704) வரை அரசியலை நடத்தி வந்தார் என்ப. இந்நூலிற் சொல்லப்படும் தஞ்சாவூர் முற்றுகை இவரது கட்டளையின்படி நடந்தது.

அரிய வழக்குச் சொற்களும், சொற்றொடர்களும்.

அங்கப்பிரதட்சணம்	கேடயக்குழி
அசங்காமல்	கொடுவைக்காளை
அடுப்பிலிட்ட ஆரால்	சகனத்தில்
அர்றே	சடக்கென
அலந்தலை	சட்டாளக்
அலமலித்து	சட்டயத்
ஆகட்டுமார்க்கும்	சராளம்
ஆந்தையிடத்துவந்து	சலாம்
உச்சிக்கொண்டேன்	சல்லடை
உடைமை கடமைகளை	சல்லா
எத்து, எத்துமெத்த	சல்லி
ஏமிரா	சளம்
ஏழ்விடங்கர்	சறுக்காமல்
ஓசிருகள்	சனுப்பெற
ஒரு நிமிசத்தில்	சன்மானித்து
கடினப்பிரவத்தகம்	சாளிகை
கடையெலும்பெடுக்க	சாளையப்படும்.
கட்டுமெட்டு	செய்யான்
கதல மிதல	சேப்பணத்துப்பட்ட ஈ
கரையேற்றம்	தசுக்கரம்
கலசமாடி	தாட்டியவான்
கழுக்காணி	தன்மானி
கழுந்து மொட்டயன்	துஞ்சத்தொழில்
கறுப்பைக்கண்டு	துரும்பு குத்தி நிலம் பரண்டி.
காங்குச்சல்லடம்	தொங்கத்தனம்
காசலேயாய்	தொங்கவாண்டு
காசுதாரிப்பயல்	தொத்தனேரி
கிழட்டோரி	தோளாசம்
குமையத்து	நாக்குவளைத்தார்
கேக்கைபோட்டு	நாட்டியச்சிறை

நிசான்
நிகரொத்த கார் (மால்)
பக்கொடு பக்கொடு
பஞ்சரித்தாள்
படங்கு
பள்ளையாம் (பள்ளையம்)
பனைமரம்
பாட்டவணை
பாளாசம்
பான் சோத்து
பிரவு டீக
பொட்டுக்கம்பு
மகத்திற்சனியனையாள்
மறுமன்னியர்
மாலிமை (மாலுமை)
முறுக்காணி
மூக்குப் பூரிண கழுதை
மையும்வெண்ணையும்போல்
லகத்துக்குள்
லகான்
லஞ்சக்கொடுக்கா
லாயம்
வண்டுறுக்கி
வலசை வாங்கினர்
விடலை
விடையமிட்டு
விரணம்
வெறிமுண்டா

பெயர்கள்.

அநந்தபத்மநாபன்
அபிசேக ரத்தினம்
அரங்ககிட்ணமுத்து
வீரப்ப நாயக்கர்
அவிராமி
அவுதல் அலி
ஆதி
ஆதி ரத்தினம்
இமாமுகான்
இரகு வீர ராமக்
கட்டபொம்மு
கந்தசாமிப்புலவர்
கனகரத்தினம்
கன்னி சாய்பு
கானேகானன்
குச்சிலியர்
குப்பி
குமாரசாமி அதிகாரி
குமாரத்தளவாய்
கெப்புலி
கோசிகராயன்
கோரி
சங்கரமூர்த்தி
சத்தரேகான்
சருவாணி
சவுந்தரி
சவ்வாசுக்கான்
சாகோசி
சாணிமார்
சிதம்பரம்
சிதம்பரரத்தினம்
சிலையான்
சிவகாமி
சிவஞானம்

சுலைகான்
சூலுபுகான்
செகவீர ராம எட்டமன்
செட்டிப்பிள்ளைமார்
செண்பகம்
சொக்க நாதேந்திரன்
தல்லீது கான்
தாரேகான்
தில்லை
தில்லை நம்பியார்
தெய்வானை
தொண்டைமான்
நரசப்பன்
நல்லமுத்தாள்
நவ்வாசுகான்
நாதிறுகான்
நூகான்
பக்கீருசாய்பு
பத்தேகான்
பணிவிடைச்செட்டி
பரிகாரி
பிள்ளைமார்
பீருகான்
புட்பராகம்
பொந்திலியர்
பொன்னப்பன்
மதப்புலி
மம்மது மதார்
மலுக்கு
மறவர்
மாத்தார்
மீறுகான்
முத்து
மேத்தாருகான்
ரட்டர்
வடுகர்
வட்ட ராமேந்திரன்
வள்ளிமுத்தாள்
வன்னியர்
வாவாகான்
விசையரங்க திருமலைச் சொக்க நாதன்
வெக்கு (பேக்)
வேத ரத்தினம்

இடப்பெயர்கள்.

அயிராவத தீர்த்தம்
ஆண்டுகொண்டான்புளி
ஆழ்வார் திருநகரி
ஈழம்
உறையூர்
எனாதி
கடற்கரைச் சினகரம்
கந்தபுட்கரணி
கயத்தாறு
கல்யாணத்திருவாசல்
கவரயர் மடம்
கற்குளம்
காசி
*குடநாட்டுச் செந்தில்
குற்றாலம்
குன்றுதோறாடல்

கொட்டகைவாசல்	திருவாரூர்
சண்முகச்சாலை	திருவாவி நன்குடி
சண்முக விலாசம்	திருவானைக்கா
சந்தவரை, சந்தாசலம்	திருவேரகம்
சரவணப்பொய்கை	துறையூர்
சாலைத் தெரு	தூண்டி விநாயகர் கோவில்
சிதம்பரம், தில்லை	தென் திருப்பேரை
சிந்து பூந்துறை	தொண்டைமண்டலம்
சீரங்கம் (அரங்கர்தலம்)	நல்லூர் (ஓம)
சிற்றாறு	நல்லூர் (குறும்பூர்)
சீரலைவாய்	நாலாயிரமுடையார் குளம்
சீகாழி	நாவலந்தீவு
சீவில்லிபுத்தூர்	பரங்குன்றம்
சீவைகுண்டம்	பாளையங்கோட்டை
செஞ்சி	புத்தளம் (புத்தாளம்)
செந்திலம்பலம்	புலியூர்
செவ்வந்தி மண்டபம்	பொருநை
சொன்னவரந் தந்தவையன் சந்நிதி	மதுரை, (கூடல்)
	மணற்புரிசை (மணல்மேடு)
சோலைமலை, பழமுதிர்சோலை	மயில் மண்டபம்
சோழ மண்டலம்	மன்னார் கோவில்
தஞ்சை (தஞ்சாவூர்)	முத்தாலங்குறிச்சி
தட்சணவாசல்	மேலக்கோபுரம்
தலையணை மடம்	மைசூர்
திருக்காட்டுப்பள்ளி	வசந்த மண்டபம்
திருக்கோளூர்	வதனாரம்ப தீர்த்தம்
திருச்சிராப்பள்ளி	வள்ளியம்பலம்
திருச்செந்தூர், செந்தில்	வள்ளி வாய்க்கால்
திருத்தணி	வெள்ளிப்படி
திருநெல்வேலி	வேட்டை வெளி
திருப்பதி	வேலவன் பாலம்
திருமலி (திருவடி) தேசம்	வேலூர் (ராய)

திருச்செந்தூர் நொண்டி கதை.

திருச்செந்தூர் நொண்டியின் கதையை முத்தாலங் குறிச்சிக் கந்தசாமிப் புலவர் ஓர் காவிய மாக நொண்டிச் சிந்து என்னும் பாக்களால் கி. பி. 1736க்கும் 1760க்கும் இடையே யுள்ள காலத்தில் பாடியிருக்கிறார்.

இப்புலவர் மழுங்கிய தனது கண் ணொளியைத் திருச்செந்தூர் முருகப்பிரான் சந்நிதியில் வயணங் கிடந்து அப் பெருமானிடம் அன்பைப் பெருக்கி அவன தருளால் மீண்டும் பெற்றார். இந் நிகழ்ச்சியை மறைமுகமாகத் தன்னையே நொண்டியாகவும் தான் கண்ணொளியை இழந்து பெற்றதை நொண்டி கைகால் இழந்து பெற்றதாகவும் கற்பித்து இக் கதையை அமைத்துள்ளார் என்ப. மேலும் தீய வழி ஒழுகும் மக்களுக்கு அவ் வொழுக்கம் தொடக்கத்தில் இன்பம் பயந்து முடிவில் அம் மக்களைத் துன்பத்துக்கு உள்ளாக்குதல் திண்ணம் என்பதை உலகத் துக்கு எடுத்துக் காட்டும் பொருட்டும், மக்கள் வினைப் பயனை வெல்ல வழியாக நிற்பது "எல்லாம் வல்ல இறைவ னிடத்து மக்கள் தமது அன்பைச் செலுத்தி உள்ளன் போடு ஒழுகலாகிய ஒன்றே" என்பதைத் தெளிவிக்கவும் இந் நூலைப் பாடியுள்ளார் எனக் கொள்ளக் கிடக்கிறது.

மேற்கூறிய செய்யுட் காவியத்தில் நொண்டி தன் வரலாற்றைத் தானே கூறுவதாக அமைத்திருக்கிறது. அம்முறையைத் தழுவியும் அதிற் கூறப்பட்ட கதைத் தொடர்பைப் பெரும்பாலும் விடாமலும் இங்கு அக் கதை உரை நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

கதை.

என் பெயர் மதப்புலி. எனது தந்தையின் பெயர் கெப்புலி. சாதியில் நான் கள்ளன். இருப்பிடம் திருப்பதி மலை. இளமைப் பருவத்தில் எங்கள் குலத் தொழின் முறைக்குத் தேவையானவைகளை எல்லாம் நான் கற்றுத் தெளிந்தேன். யாரும் எனக்கு நிகரில்லை என்னும்படி வெகு தீரனாக விளங்கினேன். தென்னாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென எனக்கு ஓர் ஆசை யுண்டாயிற்று. அதற்காகக் கையாதரவுக்கு வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு திருப்பதியை விட்டுக் கிளம்பினேன். பல தலங்களைத் தெரிசித்துப் பின்பு சிதம்பரத்தை யடைந்தேன். அங்குள்ள சந்நிதியைச் சேர்ந்து நடராசப் பெருமானைத் தொழுதுவிட்டு ஆலயத்தின் ஓர் புறம் உட்கார்ந்திருந்தேன். ஆலயப் பணிவிடைத் தாசிமார்கள் வருவதைக் கண்ணுற்றேன். அவர்கள் வீசிய வலையிற் சிக்குண்டு மயக்கமுற்றேன். அவர்களுள் சிதம்பரவல்லி யென்பவளை நான் கைப்பிடித்தேன். அது முதல் நாங்கள் இருவரும் வெகு சல்லாபமாகக் கூடி வாழ்ந்து வந்தோம். என்னை வசியப் படுத்த மருந்துமிட்டாள். நானும் சேப்பணத்துட் பட்ட ஈப் போலச் சிக்குண்டு கிடந்தேன். என் கையிலுள்ள பணப்பையின் கனம் குறைந்துகொண்டே வந்தது. அது குறையக் குறைய எங்கள் வாழ்க்கையின் பிடிப்புங் குறைந்துகொண்டே வந்தது. முடிவில் நானும் வெறுங் கையனானேன். அதை அறிந்ததும் தாய்க்கிழவி என்னை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாள். சிதம்பரவல்லியின் ஆசை மயக்கால் அங்குள்ள திண்ணையிலே தங்கிக் கிடப்பதும் அத் தெருவையே சுற்றுவதுமாகச் சில நாட் கழித்தேன். ஒரு நாள் நல்ல இருட்டாக இருந்தது. ஒரு நம்பியார் வீட்டுட் புகுந்தேன். பணம் பெட்டகத்தைத் திருடிக்கொண்டு வெளியேறினேன். அதைக் கொண்டு போய் என்னை யடித்துத் துரத்திய சிதம்பரவல்லி முன்

வைத்தேன். ஏன்? ஆசை வெட்கம் அறியாது. பெட்டகத்தைக் கண்டதும் அவள் மிகுந்த வுபசாரம் பேசினள். இருவரும் முன்னிலும் பதின் மடங்காய்க் கூடிக் குலாவி வாழ்ந்தோம். நாளடைவில் என் கையிருப்புங் குறைந்தது. அதைக் கண்டதும் என்னை விரட்டுவதற்கு ஓர் அளப்பு எடுத்தாள். என்னைப் பகைக்கக் கூடாதென எண்ணி நயவஞ்சகமாக வார்த்தை யாடினள். நடராசர் சந்நிதிக்குத் தன்னைப் போல ஒரு *நாட்டியச்சிறை விடவேணு மென்றும் அதை நானே செய்து முடித்துத் தர வேணு மென்றும், என்முன் பஞ்சரிக்கலானள். நானுஞ் சிறை கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டேன். தாயும் மகளும் வழியனுப்பி வைத்தார்கள்.

ஆலயஞ் சென்று தில்லைப் பண்ணவனைத் தொழுது கொண்டு தென்திசை நோக்கி நடந்தேன். "தவளை தண்ணீருக் கிழுக்க ஓணான் வேலிக் கிழுக்க" என்னும் பழமொழிக் கிணங்கச் சிதம்பரவல்லியின் ஆசை என்னைப் பின்னே இழுத்தது. என் விதி என்னை முன்னே யிழுத்தது. நடுவில் நானுந் தள்ளாடித் தள்ளாடி நடக்க லுற்றேன். தொண்டை மண்டலமுஞ் சோழ மண்டலமுங் கடந்து சீகாழியூர் வந்து சேர்ந்தேன். அங்குள்ள செக்கடி வேம்பில் எனது உயிர்த் தோழன் பொன்னப்பனைச் சந்தித்தேன். ஒரு நாள் அவனுடன் இருந்தேன். மறுநாட் புறப்பட்டுத் திருவாரூர் வந்து சேர்ந்தேன். கமலாலயமுங் கமலத் தடாகங்களுங் கண்டு களிப்புற்றேன். வீதி விடங்கப் பெருமானையும் அபிடேக வல்லியையுந் தொழுதுகொண்டு பத்து நாள் அங்குத் தங்கினேன். குமரவேளுக்கு உவப்பான சட்டி விரதத்தையும் முடித்துக் கொண்டேன். ஒருநாள் அங்குச் செட்டித்தெருவில்

* இங்குக் குறிப்பிடுவது நாட்டியம் பயிற்றுவிக்கத் தகுந்த பக்குவமும், கோயிற்பணிக்குத் தகுதியுமுள்ள பேதை அல்லது பெதும்பைப்பருவ நங்கையை.

ஒரு சீமான் வீட்டிற் கலியாணம் நடப்பதைக் கண்ணுற்றேன். அவ்வீட்டுட் புகுந்தேன். எல்லாருங் கலியாணத் தடபுடலில் இருந்தார்கள். என்னை யொருவருங் கவனிக்க வில்லை. நானுஞ் சமயம் அறிந்து மேன் மச்சிற் சென்று ஒளித்திருந்தேன். கலியாணச் சடங்குகள் எல்லாம் முடிந்து சாப்பாடு மாயிற்று. எல்லாரும் நித்திரைக்குச் சென்றனர். பெண்ணும் மாப்பிள்ளையும் படங்கு மறைப்பில் வந்து நன்ருய்த் தூங்கிவிட்டார்கள். உறக்கஞ் சோதித்து அவர்கள் இருவருக்கும் மாயச் சொக்குப் பொடி தூவினேன். அசையாமல் கிடந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த நகைகள் எல்லாவற்றையுங் கழற்றி எடுத்து ஒரு முடிப்புக் கட்டிக்கொண்டு வெளியேறினேன். அவ்வூரைக் கடந்து இராசமன்னார் கோவிற் சாலை வழியாக நடந்து தஞ்சாவூர் வந்து சேர்ந்தேன். அவ்வூர் வளப்பங்களைக் கண்ணுற்றேன். மெலிந்த என் உடலைத் தேற்றிக் கொள்ள அது நல்ல இடமெனத் தெரிந்தேன். அவ்வூரிற் செவ்வாய்க்கிழமை மடம் ஒன்றுண்டு. அதில் தாய்க்கிழவியான ஒரு இடைச்சி இருந்தாள். அவளை யடுத்து என் கைவசமுள்ள மூட்டை முடிச்சுகளை அவளிடம் ஒப்புவித்தேன். என் கருத்தையும் சொன்னேன். அவளும் அதற்கு இணங்கி என்னைப் பெற்ற தாய்போல் அன்புடன் சோறிட்டு ஆதரித்துவந்தாள்.

நான் இவ்வாறு கவலையற்று இருந்து வரும் அந்நாளில் தஞ்சாவூரைக் கோசிகராயன் என்னும் மராட்டிய மன்னன் மகன் சாகோசி அரசாண்டு வந்தார். மதுரைச் சீமையை விசையரங்க திருமலைச் சொக்கநாத நாயகர் ஆண்டு வந்தார். இவ் விருவருக்கும் ஏற்கனவே பகைமை யுண்டு. அந்தப் பகையானது விளைந்து இப்போது படை யெடுப்புக்கு வந்து விட்டது. மதுரைப் படை வீரர்கள் திரண்டு வந்து திருக்காட்டுப்பள்ளியில் பாடி வீடு அமைத்துக்கொண்டு தஞ்சாவூரை முற்றுகை

யிட்டனர். இப்படைக்குத் தளவாய் நரசப்பையன் மகன் குமாரத்தளவாய் தலைமை வகித்தார். இப்படையில் பல முசிலீம்களும், வன்னியரும், மறவரும், பொந்திலியரும், கலந்திருந்தனர். இப்படைக்குத் துணையாகக் குறுநில மன்னர்களாகிய ராயத் தொண்டைமானும், செகவீரராம எட்டமனும், இரகுவீரராமக் கட்டபொம்முவின் தளகர்த்தன் குமாரசாமி அதிகாரியும் தங்கள் படையுடன் வந்திருந்தார்கள். முற்றுகை என்பதைக் கேட்டதும் தஞ்சாவூரிலிருந்தோர் அனைவோரும் அவரவர்கள் உயிரையே பெரிதென நினைத்துக் காடென்றும் மேடென்றும் கல்லென்றும் முள்ளென்றும் பாராமல் இரவோ டிரவாகத் தலைவிரி கோலமாய்த் தப்பி யோடி எனுதியூர் விடிய வலசையுடன் போய்ச் சேர்ந்தார்கள். குடியெழுந்து போய் ஆளில்லா திருந்த அவ் வூரிலுள்ள வீடுதோறும் நான் நுழைந்து கலசமாடித் திரிந்தேன். தக்கது ஒன்றும் என் கைக்குச் சிக்கவில்லை. பெண்ணுக்குப் பொன் கொடுத்துப் பேறு பெறுவதே பெருமையாக எண்ணினேன். அதற்காகத் திருக்காட்டுப் பள்ளியி லிருக்கும் பாடி வீட்டுட் புகுந்து குதிரை யொன்றைத் திருட முடிவு செய்தேன். எல்லாங் கடந்த ஞானியார் போல் வேடம் பூண்டு பாளையத்துட் புகுந்தேன். வாசலில் இருந்த காவற்காரர்களும் மற்றோரும் என்னைக் கண்டு வணங்கி நின்றார்கள். நான் எல்லோருக்குந் திருநீறு கொடுத்தேன். அவர்கள் எல்லோருந் தொடர்ந்து வரத் தொண்டைமான் கொலுச் செய்திருக்கும் கூடாரத்துட் புகுந்தேன். என்னைக் கண்டதும் தொண்டைமானும் எழுந்து வந்து வணங்கினான். தன் குல தெய்வத்தைக் கண்டதுபோல் எனக்கு மரியாதை செய்தான். நானும் அலட்சியமாக அவன் உட்கார்ந்திருந்த கம்பளத்திற் போய் உட்கார்ந்தேன். தொண்டைமானின் கையைப் பிடித்து நெற்றியில் நீறுமிட்டேன். அவன் என்னை வாமி என்று தெரிந்து கொண்டான். உடனே அறுசுவை யுண்டிகள் பூசை முகத்துக்கு வந்தன. தேவி பூசையை

முடித்தேன். எல்லோருங் கூடவிருந்து பந்தியில் உண வருந்தினேம். நானும் விலாப்புடைக்கக் கிடைத்ததை விடாமல் வயிற்றை நிரப்பினேன். உண்ட மயக்கத்தால் நன்ருய்த் தூங்கினேன். மறுநாட் காலையில் எழுந்து படை யிருப்பைச் சுற்றிப் பார்த்தேன். இதற்குள் என் செய்தி பாடிவீடு முழுதும் பரவிவிட்டது. நான் எப்பக்கம் போனுலும் எனக்குச் சீருஞ் சிறப்பும் மரியாதைகளும் நடக்க லாயின. சிலர் என் தோழமையே பெரிதெனக் கருதினர். குதிரை லாயத்துக்கு அடிக்கடி சென்று சாணிமாரையும் பறையரையும் உறவு கொண்டேன். குதிரை பயிற்றுந் தொழிலையுஞ் சில நாளுக்குட் பயின்று கொண்டேன். இவ்வாறு கண்ணியத்துடன் யாதொரு கவலையு மின்றி உச்சமான நிலையில் நான் இருக்கச் சில நாள் திருக்காட்டுப் பள்ளியிற் கழிந்தன.

ஒரு நாள் இரவு மையும் வெண்ணெயும் போல எங்கும் இருள் நிறைந் திருந்தது. குதிரைக் களவுக்கு அந் நாளே நன்ன ளெனத் துணிந்தேன். நான் பூண்டிருந்த வேடத்தைக் கழற்றி யெறிந்தேன். செய்யத் துணிந்த தொழிலுக்கு ஏற்ப வேடங் கட்டி யென்னைத் தயார் செய்தேன். காவற் றலையாரிகளும் படைகளும் சாணி மாரும் பறையரும் அசந்து தூங்குவதைக் கண்டேன். ஊக்கங் கொண்டேன். மெல்ல மெல்லச் சென்று இலாயத் துட் புகுந்தேன். குற்றமற்ற சீவரத்தினம்போல நிற்குந் தளவாயின் குதிரையைத் தொட்டுச் சலாம் செய்து கொண்டேன். குதிரையின் வாய்க்குட் கடிவாளத்தை யூட்டிப் பூட்டினேன். முதுகிற் சேணமு மமைத்தேன். பாளாசங்களைக் கழற்றிவிட்டு வெள்ளிக் கச்சைக் கயிற் றைப் பிடித்துக் குதிரையை வெளியே இலகத்துக்குக் கொண்டு வந்தேன். குதிரை நம் வசம் ஆயிற்று என்று மன எக்களிப்புடன் அதன்மேல் ஏறத் துணிந்தேன். அதை யறிந்த அக்குதிரை வெருண்டு கனைத்தது. கனைத்த

முழக்கங் கேட்டுச் சாணிமாரும் பறையரும் இரட்டர்களும் விழித்துவிட்டார்கள். குதிரை இடம் பெயர்ந்து நிற்பதைக் கண்ணுற்றுத் திருடனைத் தேடத் தொடங்கினார்கள். நானுங் காரியங் கெட்டது. இனித் தப்பிக்க வழி தேடவேண்டும் என ஓடோடியும் போய் அங்கிருந்த காணக் கொப்பரைக்குள் நுழைந்து ஒழிந்துகொண்டேன். தீவட்டியும் பகல்வத்தியும் ஏற்றிக்கொண்டு இரவைப் பகல்போ லாக்கி எங்குஞ் சோதனை போட்டார்கள். இதை யறிந்ததும் நான் காணக் கொப்பரையை விட்டு மெல்ல வெளி யேறினேன். ஒருவரும் அறியாவண்ணம் சென்று பக்கத்திலிருந்த கழிவுப் புற் போருக்குள் நுழைந்தேன். ஐயையோ! நான் அங்கு இருக்கும்வரை பட்ட பாட்டை என்னென்று சொல்லுவேன். தேள் ஒரு புறங்கொட்டிற்று. நட்டுவக்காலி யொருபுறம் பிடிங்கிற்று. சகனத்தில் செய்யான் கடித்தது. இவ்வளவும் போதாதென்று எனது காதுக்குள் எறும்பு ஒன்று புகுந்து காதுக் குருத்தைக் கறிம்பிக்கொண் டிருந்தது. பதினெட்டுக் கொட்டு வகைக்கும் மடிக்குள் மருந்து வைத்திருந்தேன். அந்த மருந்தையும் மறந்து நான் வேதனைக் குள்ளாகி அடுப்பி லிட்ட ஆரால் போலத் துடித்தேன். கடுப்பும் எரிப்பும் அதிகமாக நான் இடுப்பு முறிந்த நாய்போல அறிவு மயங்கிக் கிடந்தேன். இத் தருணத்தில் திருடனைத் தேடி அலுத்துப் போன சாணிமாரும் பறையரும் எதை நினைத்தோ நான் இருந்த புற்போரில் தீயைக் கொளுத்தி விட்டார்கள். நான் தப்பிக்க வேறு வழி யில்லை. புகை மறைவிலே உருண்டுருண்டு சென்றேன். குறண்டியும் முனைக்கல்லும் நெரிஞ்சிமுள்ளும் நான் உருளையிலே என் உடல் முழுதுங் கிழித்தன. உடல் முழுதும் இரத்தம் பீறிட்டு ஓடிற்று. அதில் உப்புமண் படவும் மிகுந்த எரிச்சலை யுண்டாக்கிக்கொண் டிருந்தது. இந் நிலையில் உருண்டு சென்ற நான் திசை தப்பிப் போய் அங்கிருந்த (குதிரை, யானை முதலிய மிருகங்களின் மூத்திரங்கள் தங்கும்) கேடயக் குழிக்குள் தொப்பென

விழுந்தேன். எனது வாயிலும் மூக்கிலும் காதிலும் நீர் புகுந்தது. உடம்பி லிருந்த காயங்களில் அந் நீர் படவும் தீப்போல் எரிச்சலை உண்டாக்க நானும் வேதனைப் பட்டுக் கிடந்தேன். இச் சமயம் காதுக்குள் இருந்த எறும்பு செத்தது. அது எனக்குப் பெரிய விடுதலையாக விருந்தது.

நான் கேடயக் குழிக்குள் விழுந்த ஓசை கேட்டதும் எல்லாருங் கூடி வந்து அக் குழியை வளைத்துக் கொண்டார்கள். நாற்றத்தைப் பொறுத்துக்கொண்டு எல்லோருங் கூடி என்னை அக் குழியைவிட்டு வெளியேற்றினார்கள். என்னைத் தீண்டாது என் உடலம் முழுதுங் கழுவி அதிலுள்ள கெட்ட நாற்றத்தைப் போக்கினார்கள். பிறகு நான் அங்குமிங்கும் அசையாதபடி என் கைகளைப் பின்கட்டாகக் கட்டினார்கள். என்னை நடத்திக் கொண்டுபோய்த் தலையாரிகளிடம் ஒப்புவித்தார்கள். வழியிற் கண்டவர்கள் எல்லாம் அவரவர்கள் மனம் போனபடி என்னை ஏசவும் பேசவுஞ் செய்தார்கள். தலையாரிகள் நாலு மூலையில் நாலு முளைக ளடித்து அம் முளைகளுக்கு நடுவில் என்னைக் கிடத்தி எனது கைகளையும் கால்களையும் அம் முளைகளில் இழுத்துக் கட்டினார்கள். ஆட அசைய முடியாமல் தூக்க மின்றி வேதனையோடு நான் முழுத் துக்கமாய்க் கிடந்தேன். விடிந்ததுஞ் சிறைக் கூடக் காவலாளிகள் எமதூதர்கள் போல வந்தார்கள். என்னைக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்து என்னை அவர்களுக்கு முன்னே நடத்தி என் பிடரியில் உதை கொடுத்து இட்டுக்கொண்டு போனார்கள். உதை மட்டுமா கிடைத்தது. என்னைப் போன்றவர்களுக்கு அந்த இடத்தில் கூடினவர்கள் அவரவர்கள் வாயாலுங் கையாலுங் கருணையோடு அளிக்கக்கூடிய நன்கொடைகளும் மரியாதைகளும் எல்லாம் ஒன்றுந் தவறாமல் எனக்குக் கிடைத்தன. காவல் தலையாரிகள் என்னைக் கொண்டுபோய்த்

தொண்டைமான் முன்னர் விடுத்தனர். தொண்டைமானும் இந்தப் பூனை இந்தப் பாலைக் குடிக்குமோ வெனத் திகைத்துப்போனார். சில வார்த்தைகளைக் கடிந்து கூறினார். முடிவில் அவர் என்னைத் தண்டிப்பதில்லை யென்று கூறிக் குமாரத்தளவாய் முன்பு கொண்டுபோய் விடும்படி சொன்னார். காவலாளிகளும் என்னை அந்தப் புண்ணியவானிடம் கொண்டுபோய் விட்டார்கள். அவர் என்னுடைய வரலாறும் ஊரும் பேருங் கேட்டார். நானும் ஒன்றையும் மறைக்காமற் கூறினேன். அவர் என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு அங்குக் கூடி யிருந்த சபையோர்களையுஞ் சாத்திரிகளையும் நோக்கி இந்தச் சல்லிக்கு என்ன தண்டனை கொடுக்கலா மென்று வினவினார். அவர்கள் இவனுடைய செய்கைக்குத் தகுந்த தண்டனை மனு தர்ம சாத்திரப்படி மாறுகால் மாறுகை வாங்குவது ஆகும் என்றனர். துரையும் அவ்வாறே தீர்ப்புக் கூறிக் கொலையாளிகள் வசம் அரண்மனை அடையாளமுங் கொடுத்து அனுப்பினார். என்னை வெளியே கொண்டு வந்து என் கால் வரை தொங்கும்படி எருக்கலை மாலை யொன்றை எனக்குச் சூட்டினார்கள். எனது இடுப்பிற் கயிறுகளைக் கட்டி முன்னும் பின்னுமாக இருவர்கள் பிடித்துக்கொண்டு கொடுவைக் காளையை நடத்திச் செல்வதைப்போல் அங்கு மிங்கு மிழுத்து அலக்கழிவு செய்தார்கள். கடைகள் தோறும் என்னை நிறுத்திப் பொரியுருண்டை, கடலை, பயறு, விடலை முதலியவைகளை எடுப்பெடுத்து எனக்குத் தந்தார்கள். இவ் வாருகக் கொட்டுமுழக்குடன் கேட்பார்க்கு விவரஞ்சொல்லி என்னைக் கொலைக் களத்துக்கு இட்டுக் கொண்டு பொய்ச் சேர்த்தார்கள். அங்கு அம்பட்டச் சிலையான் வந்தான். அவன் பொருத்துக்களை யறிந்து என் கையிலுங் காலிலுங் குறியிட்டுக் கொடுத்தான். அவன் குறியிட்ட படியே என் காலையுங் கையையுங் கொலையாளிகள் துணித்தார்கள். இரத்தம் பெருகி வெள்ளமாக ஓடிற்று. நானும் இரத்தக் களரிக்குள் மூழ்கி வேதனைப் பட்டுக்கொண்டு மயக்கமுற்றுக் கிடந்தேன். என்னைப்

பார்க்க வருவாரும் போவாருமாக அந்த இடம் ஒரு சந்தைபோல் ஆயிற்று. சிலர் நானிருந்த நிலைமையைக் கண்டு இரக்கங்கொண்டு பேசினார்கள். சிலர் கூசாது ஏசினார்கள்.

இந்தச் சமயத்தில் திருவடி தேசத்தின் அதிகாரியாகிய அநந்த பற்பநாப வள்ளல் திருக்காட்டுப்பள்ளி வந்து தமது நாட்டின் பருவ நிலைகளைக் குமாரத் தளவாய் முன் சொல்லிவிட்டுத் திரும்புகாலில் என்னைச் சூழ்ந்து நிற்குங் கூட்டத்தையும் நான் கிடக்கும் வாட்டத்தையும் கண்டார். அந்தப் புண்ணியவான் எனக்காக மனதிரங்கினார். பரிகாரி (மருத்துவர்) யை யழைத்தார். எனக்குச் சிகிச்சை செய்யும்படி உத்திரவிட்டுச் செலவுக்கு ஒரு சாளிகைப் பொன்னுங் கொடுத்தார். என்னை நோக்கி "நீ மன வாட்டம் அடைய வேண்டாம், குணப்படுத்திக் கொண்டு திருச்செந்தூர் சென்று முருகப் பெருமானை வேண்டிக் கொள். அப் பெருமான் உனக்கு மீண்டும் உன்னுடைய காலுங் கையுங் கொடுப்பான்." என்று எனக்குத் தேறுதல் கூறிவிட்டுச் சிவிகை யேறித் தன்னாடு சேர்ந்தார். மருத்துவரும் எண்ணெயும் எலுமிச்சம் பழமுங் கொதிக்க வைத்துப் புண் கருக ஒத்தடமிட்டு மருந்துகள் கட்டிப் பத்தியமாக வுணவுங் கொடுத்து வந்தார்கள். ஒரு வாரத்துக்குள் காயங்களும் ஆறின. கையுங் காலும் பொட்டுக் கம்புபோற் சுருங்கிக் குண மடைந்தன. உடனே திருச்செந்தூர் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தேன். மிஞ்சு மிஞ்சாடி இருந்த வெல்லாம் கணக்கிட்டு வாங்கிக் கொண்டேன். வழிப் பயணத்துக்குக் குதிரை ஒன்று தேடிக் கொண்டேன். துணைக்கு ஒரு பையனைக் கூட்டிக்கொண்டேன். நல்ல நாள் ஒன்று குறிப்பிட்டுக்கொண்டேன். அத்தமுஞ் சத்தமியுங்கூடிய ஞாயிற்றுக்கிழமை இரவு திருக்காட்டுப்பள்ளிவிட்டுத் தென்திசை நோக்கிப் புறப்பட்டேன், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, சீரங்கம்

சென்று சேவித்துக் கொண்டேன். உறையூரையுங் கடந்தேன். அஞ்சற்காரர் அன்ன சத்திரந் தோறுந் தங்கிச் சோறுண்டு இளைப்பாறிக்கொண்டு நடந்தேன். எங்கள் குலக் கள்ளர் வாழும் சோலைமலையை அடைந்து பழமுதிர் சோலையில் முருகப்பிரானைத் தொழுது கொண்டு கூடலைக் கடந்து திருப்பரங்கிரி யடைந்து சரவணப் பொய்கையில் முழுகித் தெய்வானையைக் குமரவேள் திருமணஞ் செய்த கோலங் கண்டு தொழுதுகொண்டேன். அதைக் கடந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாகக் கயத்தாறு சென்று சிற்றாற்றைக் கடந்து திருநெல்வேலி யடைந்தேன். அங்கு நெல்லையப்பரையும் அநந்த வடிவம்மையையுஞ் சேவித்துக் கொண்டு சிந்துபூந் துறைவழியே பொருநையைக் கடந்து பாளையங்கோட்டை வழியாகச் சென்று அழகிய கோபுரங்கள் நிறைந்த முத்தாலங் குறிச்சியை யடைந்து, அங்கு ஒரு நாள் தங்கினேன். முருகனது அருள் பெற்றுக் குறையாத வாழ்வுடைய கந்தசாமிக் கவிராயனை அங்குக் கண்டேன். அவர் கூறும் கவித்துவ மகிமைகளைக் கேட்டுணர்ந்து பெருமையடைந்தேன். அச் ஸ்ரீமான் மேலும் மேலும் என்னை யுபசரித்து என் செவிக்கும் வயிற்றுக்கும் உவந்த விருந்தளித்தார். நான் அதை யருந்திச் சுகிர்தம் அடைந்தேன். அதை விட்டுப் பெயர்ந்து முருகவேளின் நெற்களஞ்சியம் நிறைந்த உம்பளக் கற்குளம் வழியாகச் ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திரு நகரி, திருக்கோளூர், தென் திருப்பேரை, நல்லூர் முதலிய வூர்களைக்கடந்து சந்திர கலையைப் போலக் குளிர்ந்து விளங்கும் சண்முகச் சாலை வழி கூடினேன். செந்திலம்பலத்திற் பணிவிடைச் செட்டியைக் கண்டேன். அப்பால் கொடையினால் மேகத்தை ஒப்பான கையையும் அக்கினிப் பரியையும் உடையவனுமான, அனுப்பர் குலத்து வட்ட ராமேந்திரன் நாலாயிரமுடயார் குளத்திற் கட்டுவித்த வேலவன் பாலம் ஏறித் தாண்டி வள்ளிவாய்க்காலுங் கடந்து ஆலைப் பழனங்கள் நிறைந்த தலையணை மடஞ் சேர்ந்தேன். அங்குச் சிறிது நேரம் இளைப்பாறிக் கொண்டேன்.

*இவ் விடத்தில் என் குதிரைச் சவாரியை நிறுத்திக் கொண்டேன். பின்பு நான் முருகப் பிரானைத் திக்கு நோக்கித் தொழுது என் காலுக்குட் பனை மரத்தைப் பொருத்திக் கொண்டு வழி நடக்க லுற்றேன். கவரயர் மடத்தில் தவை யாறினேன். வேட்டை வெளியும் ஆண்டுகொண்டான் புளியுங் கடந்து கொட்டகை வாசலை யடைந்தேன். திருவிழாக் கொண்டருளுஞ் செவ்வந்தி மண்டபமும், தெரு வலங்காரமும், மகாமேருவென நிற்கும் தேரும் இரு பிறப்பாளர் இருக்கும் இடங்களும், தெரு நிறைந்த மடங்களுங் கண்டு களிப்புற்றேன். நான் செய்த பாவங்களெல்லாம் கரைந் தோடக் கடற்கரையை யுடைய செந்தூர்த் தலத்துக்குட் போய்ச் சேர்ந்தேன். (பழைய கோவிலை வந்தடைந்ததாகும்.) அங்கிருந்து சாலை வழியே சென்று அதிலுள்ள சொன்னவரந் தந்த வையனைத் தொழுது மயில் மண்டபங் கடந்து, தூண்டி விநாயகரைத் தொழுது கொண்டு கலியாணத் திருவாசலையும் மேலக் கோபுரத்தையுங் கடந்து வள்ளியம்பலங் கண்டு சந்நிதியின் வாசலில் சண்முக விலாசம் சேர்ந்து உமை புதல்வனுகிய முருகவேள் அரசு புரியுங் கடற்கரைக் கோயிலைக் கண் ணாரக்கண்டு உடல் பூரித்துத் தெண்டனிட்டேன். தெட்சண வாசலையும், ஈழத்துப் புத்தளமுந் தெரியக் கூடியதாக உயர்ந்துள்ள கொத்தளத்தையும், மணற் புரிசையை யுங் கண்டேன். அங்கு நின்று ஆறுமுகப் பெருமானை உடல் பூரிக்கச் சேவித்தேன். வதனாரம்ப தீர்த்தம், ஆயிராவத தீர்த்தம், கந்தபுட்கரணி முதலிய தீர்த்தக் கட்டங்களில் நீராடிக் கொண்டேன். ஆறெழுத்தை யுச்சரித்துக்கொண்டு கிரிவலம் வந்தேன். ஆலயத்தையும் வலம் சுற்றினேன். தெற்கு வாசலில் நின்று தொழுது

*முருகப் பெருமானை வழிபடச் செல்லும் மக்கள் வாகனாதிகளை விட்டு இறங்கி இவ் விடத்தி லிருந்து கால் நடையாகச் செல்வது தொன்று தொட்டு நடந்து வரும் மரபு.

கொண்டு வெள்ளிப்படி யிறங்கி யுள்ளே சென்றேன். வசந்த மண்டபம் அடைந்தேன். எம்பெருமான் சுக்கிர வாரக் கொலுவிருக்குங் காட்சியைக் கண்ணுற்றேன்.

திருமால் தோத்திரஞ் செய்யப், பிரமன் வணங்கி நிற்கத், தேவர்கள் ஆலவட்டஞ் சாய்க்கக், கந்தருவர் இயக்கர் சித்தர் வித்யாதரர் விசிறி யசைக்கச், சந்திரன் வெண் கொற்றக் குடை நிழற்றச், சூரியன் தங்க வட்டம்போற் பரிசையைப் பற்றி நிற்க, இந்திரன் பால் போலும் வெண்கவரி வீச, அளகேசன் அடைப்பம் எடுக்க, வருணன் காளாஞ்சி தாங்கி நிற்க, மருத்துவருந் தீக்கடவுளும் பொற்சரிகை ஆடை விரித்துப் பாவாடை வீசக், கேடயந் தாங்கிய எமன் உடைவாளெடுத்து நிற்க, நாரதர் தும்புரு வீணை யிசைத்துச் சங்கீதம் பாட, வீர வாணசூரன் மெய்ப்பரதம் விளங்கத் தாளங் கொட்டத், தேவ ரம்பையர் நடிக்க, முகவீணை தித்தி சதி ஒத்து முதலியன முழங்கத், தேவாரம் திருவாசகம் திருமுரு காற்றுப் படை திருப்புகழ் முதலிய செழுந்தமிழ் இசையினைச் சீர் தளை பதச்சுவடு சொற்சுவடு பொருந்த அடியார்கள் பாடி நிற்க, முச்சுதந்தரர்கள் எல்லாம் முன்னும் பின்னும் நெருங்கி வேதங்கள் உபநிடதங்களை விதி முறை தவறாது விளம்பிடும் ஒலி கிளம்பா நிற்க, வானவரும் முனிவரும் அவரவர் வரம்பு தவறாமல் நிற்க, வீரவாகுமூர்த்தி பிரம்பைக் கையில் ஏந்திக் கட்டியங் கூற நிற்க, மற்றும் நவ வீரரில் எண்மரும் இலட்சம் வில் வீரரும் நூற்றெட்டுப் படைத்தலைவரும் தொழுது நிற்கத், தேவ துந்துமி யதிரத், திமிலை கனகதப்பு முருடு பம்பை முதலியன கடலென முழங்கத், தடாரி தவில் முரசு பேரிகை சல்லரி இடக்கை துடி காகளம் தாரை நாகசுரம் பூரிகை முதலியன இடியென அதிர்க்கப், பானுகோபன் கையிற்பிடித்த சங்கம் முழங்க, வள்ளிக்கொடியும் தேவயானையும் இரு மருங்கினும் இருந்து அரசு செய்யச், சூரியோதயம் என்னும் படி ஆறு திரு முடிகளும் இலங்கத், திரி புண்டரமாக

நெற்றிதோறும் அணிந்த சந்தனக்கீற்று மூன்றும் பிறைச் சந்திரன் போல் விளங்கக், கருணையே குடிகொண்ட பன்னிரண்டு விழிகளும், மகர குண்டலம் இலங்குகின்ற குழைகளும், பவளத்தில் முத்துப் பதித்தாற்போல் தோன் றுஞ் செய்ய அதரத்தின் இடையே ஒளிருகின்ற அழகிய பற்களும், மார்பினில் விளங்கும் முத்துத் தாள்வடமும், பன்னிரு புயமும், கரங்களில் விளங்குங் கங்கணமும், சூரர்கள் ஆதிக்கத்தைத் தொலைத்த வேலும், ஆடைக்கு இசைந்த இடையும், அதனிடையே கிடந்து துவளும் பொன் அரைஞாணும், நவமணி அரைவடமும், பாதத்திற் குரவுங் கடம்பும் பரிபுரமும் இலங்கச், சிங்காதனத்தில் சிங்கக் குட்டியென வீற்றிருந்து தேவர்களுக்கும் வேண்டு வன ஈந்தருளும் தேவதேவன் ஆகிய எனது ஐயன்-முருகப் பிரான்-திருவோலக்கஞ் செய்திருந்த காட்சியைக் கண் ணாரக்கண்டு களிப்புற்றேன். மனந் திடங் கொண்டேன் வீரவாகு மூர்த்தியை நெருங்கித் தோத்திரஞ் செய்து நின்றேன். அப்பெருமானுஞ் சிறிது கண்ணோட்டஞ் செய்து என்னை நோக்கி உன்னுடைய பனைமரச் சுமையை யாற்ற இதுவே சமயம் என்றார். நானும் பனைமரத்தை யகற்றி விட்டுக் கிந்திக்கிந்திச் சென்று நெருங்கினேன்.

சைவக் குழாமுஞ் சதுமறை வேதியரும் நெருங் கிய தெய்வச்சபையிலே தகரேறி நடாத்துஞ் சண்முகனைச், சேனாபதியைச், செந்திற் பழம் பொருளைக், கங்கை தரு குமரனைக், கார்த்திகேயனைச், செங்கை வடிவேலனைப், பிரமனைக் கடிந்து உலகம் படைத்தோனை, மயில் வீரனைக், கடற்கரையானைத், திருமால் முதலியோரும், வணங்குங் கருணைக்கடல் அனையனைப், பன்னிரு புயத்தனைச், சேவற் கொடியனைக், குடநாட்டுச் செந்திற் பதியானை, விசா கனைத், தெய்வானை பாகனைத், திருப்பரங்கிரியானைச், சூர் மடிய வேல் விடுத்தோனைத், தேவர் சிறை மீட்டோனைத், திருவாவி நன்குடி முதல்வனை, ஏரகத்துச் சேவகனைக், குறுமுனிக்கு அருளிய குழகனைக், குன்றுதோறாடி எங்கு

நிறைந்தவனை, மும்மதக் களிற்றின் துணைவனை, வள்ளி மணாளனைப், பழமுதிர்சோலைக் கிழவோனைத், திருத்தணி புரந்தோனைத், திருச்சீரலைவாய் விழைந்த தேசிகனைச், செந்திற் பழம் பொருளை எனது கண் குளிரக் கண்டு சந்தித்தேன். நான் செய்த பாவங்கள் அனைத்தும் பறந்து ஓடின. எனது ஐயன் பாத கமலங்களில் விழுந்து தெண்டனிட்டு என் குறை பகர்ந்து வணங்கினேன். மனம் மொழி மெய்கள் ஒடுங்கத் தினைப்போது தியானித்தேன். பயிர்க் கூச்செரிய விழுந்து நித்திரை கொண்டவர்போல் நடுச் சபையிற் கிடந்தேன். எம் பிரானே தஞ்சமென முருகப் பெருமான் பாத கமலங்களிற் சரண் புகுந்தேன். என்னை ஆட்கொண்ட ஐயனும் என் நிலைமையைக் கண்டு இரங்கி என் கனவிற் றோன்றிக் கையுங் காலுந் தந்தோ மென்று அருளி மறைந்தான். நானும் நித்திரை தெளிந்தவன் போல விழித்து எழுந்தேன். எனது கையுங் காலும் வளர்ந்து பழைய வடிவம் அடைந்து இருப்பதைக் கண்டேன். ஆநந்தக் கூத்து ஆடினேன். முருகவேளின் திரு அருளை எண்ணி எண்ணிக் களிப்புற்று நடந்தேன்.

இவ் அற்புதத்தைக் கண்ணுற்ற தலத்தாரும் வரத்தாரும் என்னை ஆதரித்தார்கள். காவியால் எனக்கு வட்டம் ஒன்று, மட்டம் ஒன்று கட்டளையிட்டனர். "ஆறுமுகப் பெருமான் கைங்கரியத் திருப்பணி விசாரிப்பாளன்" என எனக்குப் பெயரும் சூட்டினர். நானும் பணிவிடை மறவாமல் தொண்டு செய்து வந்தேன். கொலுத்திருப் பணிகள் முற்றும் பொன்னாலும் நவ மணிகளாலும் செய்து முடித்து வைத்தேன். இவ்வாறு செந்திற் சேவகன் அருளைப்பெற்று, உற்றார் உறவினர் கிளைகளோடு சூழ்ந்து இருந்து வாழ, நானும் நல் வாழ்வை யடைந்து இருந்து வருகிறேன்.

திருச்செந்தூர் நொண்டி நாடகம் முற்றிற்று.

A
—57

இந் நூலையும் ஆராய்ச்சிக் குறிப்புகளையும் எழுதுவதற்கு எனக்கு உதவிய பிற நூல்கள்.

1. மதுரைப் பாண்டிய நாயக்க மன்னர்கள்
2. தஞ்சாவூர் நாயக்க மன்னர்கள். [(நெ. ரா. சு.)
3. பலிஜ புராணம்.
4. பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம். (திரு. செகவீர பாண்டியனார்)
5. தென் இந்திய ரயில்வே கைட் (Guide) (1910)
6. சீதக்காதி நொண்டி நாடகம்.
7. சாத்தூர் நொண்டி நாடகம்.
8. குளத்தூர் ஐயன் நொண்டி நாடகம்
9. ஆண்டுகொண்டான் வண்ணம்.
10. பட்சிராசர் வண்ணம்.
11. கிட்ண நாடான் வண்ணம்.
12. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
13. திருக்குற்றாலக் குறவஞ்சி.
14. வையாபுரிப்பள்ளு.
15. முக்கூடற் பள்ளு.
16. தென்காசை (போடி)ப் பள்ளு.

அரிய சொற்றொடர்களும், விளக்கமும்.

ஆகட்டு மார்க்கு வந்து நட்டம் — யாருக்கும் நட்டம் வரத்தானே செய்யும். நடக்கிறது நடக்கட்டும்.

ஆந்தை யிடத்து வந்து — ஆந்தை யிடப்பக்கங் கீச்சிடுதல் கெடுகுறி.

பனைமரம்—நொண்டிகள் இடுக்கி நடக்கும் ஆயக்கால் மரம்.